Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்


அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 தை 19 சனிக்கிழமை (01.02.2014) பக்கங்கள் 20 ஓசை – 123

## இலங்கை அகதிகளுக்கு இந்திய குடியுரிமை வேண்டும்



### ரவிசங்கர் கோரிக்கை

(சென்னை)

தமிழகத்தில் உள்ள இலங்கை தமிழர்களுக்கு இதுவரை இந்தியக் குடியுரிமை கொடுக்காமல் இருப்பது நியாயமல்ல என்று வாழும் கலை அமைப்பின் நிறுவுனர் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் கூறியுள்ளார். கோவையில் வாழும் கலை அமைப்பின் சார்பில், மூன்று நாள் நடக்கும் சத்சங்கம் நிகழ்ச்சியில் கலந்துகொள்ள அந்த அமைப்பின் நிறுவனர் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் கோவை (19) பக்கம் பார்க்க...

## இ.போ.ச. ஊழியர்கள் நேற்றும் பணிப் புறக்கணிப்பு

### மாலை நிலைமை வழமைக்குத் திரும்பியது

(யாழ்ப்பாணம்)

இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ்.சாலையின் சாரதிகள், நடத்துநர்கள் நேற்று நண்பகல் மேற்கொண்ட பணிப் புறக் கணிப்பு நேற்று மாலை முடிவுக்கு வந்தது.



நேற்றுக்காலை பருத்தித்துறைச் சாலையின் பேருந்து சாரதி ஒருவர் ஆரியகுளம் பகுதியில் தனியார் போக்குவரத்துச் சாரதி மற்றும் நடத்துநர்களின் தாக்குதலுக்கு இலக்கானதைக் கண்டித்தும், யாழ்.பஸ்தரிப்பு நிலையத்திற்கு அருகாமையில் மின்சார நிலைய வீதியில் தரித்து நின்று சேவையில் ஈடுபடும் தனியார் சிற்றூர்திகளை அங்கிருந்து அகற்ற வேண்டும் என்ற கோரிகையை அடுத்து பொலிஸாரி (19) பக்கம் பார்க்க...

## ஆணைக்குழுவின் அறிக்கை தரமற்றதா? பிரித்தானிய அமைச்சரின் கருத்துக்கு கண்டனம்

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை சர்வதேச ...த்தை கொண்டிருக்கவில்லை ...ன பிரித்தானிய அமைச்சர் ...றியூகோ ஸ்வயர் வெளியிட் ...ள்ள கருத்தை நிராகரிப்பதாக அரசாங்கம் கூறியுள்ளது.

அவரது இந்தக் கருத்து இலங்கை மேற்கொள்ளும் முயற்சிகளை குறைத்து மதிப்பிடுவதாகும் என அமைச்சர் அனுரபிரிய தர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் இனங்களுக்கு இடையில் ஐக்கியம் மற்றும் சகோதரத்துவத்தை அதிகரிப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கையே கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு மற்றும் அதன் அறிக்கை என்பனவாகும்.

இதனால் பிரித்தானிய அமைச்சரின் கருத்தை எந்த வகை (19) பக்கம் பார்க்க...

# ஜெனிவாவில் அமெரிக்க தீர்மானம் உள்நாட்டு பொறிமுறையைப் பாதிக்கும்



### பிஸ்வாலிடம் பீரிஸ் எடுத்துரைப்பு

(கொழும்பு)

ஜெனிவாவில் மனித உரிமை அமர்வில் கொண்டுவரப்படவிருக்கும் தீர்மானம் உட்பட அமெரிக்காவின் செயற்பாடுகள் உள்நாட்டில் நாம் மேற்கொள்ளும் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவற்கான பொறிமுறையை மிக அதிகமாகப் பாதிப்பதற்கு வாய்ப்பு உள்ளதாக அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பு வந்துள்ள அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வால் நேற்று வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ்ஸை அவரது அமைச்சில் சந்தித்தார்.

இச்சந்திப்பின்போதே அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது, இலங்கைக்கு எதிராக அமெரிக்காவிடம் தொகுக்கப்பட்ட நிகழ்ச்சிநிரல் இல்லை என வலியுறுத்தியுள்ள அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வால், சில பிரச்சினைகள் காரணமாகவே அமெரிக்கா இவ்வாறான நிலையை எடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டது என குறிப்பிட்டார்.

நிஷா தேசாய் பிஸ்வால், அமைச்சர் ஜீ.எல்.பீரிஸை அவரது அமைச்சில் சந்தித்துப் பேசினார். அதன்பின்னர் கருத்து வெளியிட்ட அவர், சர்வதேச (19) பக்கம் பார்க்க...

## ஜெனிவா தீர்மானத்தை ஆதரிக்க அழுத்தம் போடுகிறது அமெரிக்கா

இலங்கை தொடர்பாக ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவையில் கொண்டு வரப்படவுள்ள தீர்மானத்தை ஆதரிக்கும்படி, பேரவையின் உறுப்பு நாடுகளிடம் அமெரிக்காவும், பிரித்தானியாவும் இணைந்து அழுத்தம் கொடுக்கவுள்ளன.

அமெரிக்காவின் தெற்கு மத்திய ஆசிய விவகாரங்க ளுக்கான உதவி இராஜாங்கச் செயலர் நிஷா தேசாய் பிஸ்வால், இலங்கையில் இருந்து, லண்டனுக்குச் சென்று இதுதொடர்பான நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக கொழும்பு ஆங்கில பத்திரிகையான ஐலண்ட் (19) பக்கம் பார்க்க...



## ஜெனிவா தீர்மானம் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும்

(கொழும்பு)

இலங்கை தொடர்பான தீர்மானம் பயங்கரவாதத்துக்கு ஊக்கம் கொடுப்பதாக அமைந்து விடக்கூடாது என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இலங்கை தொடர்பான மனித உரிமை மீறல்கள் குறித்த குற்றச்சாட்டை கொண்டு வர முயற்சிக்கும் (19) பக்கம் பார்க்க...



08

அனுமதி

## "ஆவா" குழுவினருக்கு பிணை; இருவருக்கு மட்டும் மறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சட்ட விரோதமாகச் செயற்பட்டு வந்த 'ஆவா' குழுவைச் சேர்ந்தவர் இருவரைத்தவிர ஏனையவர்கள், யாழ்.நீதிமன்றத்தால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளதாக யாழ்.பொலிஸ் அத்தியட்சகர் நிகால் பெரேரா தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட இந்த (19) பக்கம் பார்க்க...

## யுத்த இழப்பு அறிக்கை விரைவில் வெளிவரும்

### புள்ளிவிபரவியல் திணைக்களம் தகவல்

யுத்தத்தால் ஏற்பட்ட உயிரிழப்புகள் மற்றும் சொத்து சேதங்கள் தொடர்பான மதிப்பீட்டு அறிக்கை, ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவைக் கூட்டத்துக்கு முன்பதாக வெளியிடப்படும் என்று சனத்தொகை, புள்ளி விபர வியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சனத்தொகை புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், டி.சி.ஏ. குணவர்த்தன இது குறித்து கருத்து வெளியிடுகையில்,

முப்பதாண்டுகளாக நீடித்த போரில் ஏற்பட்ட உயிரிழப்புகள், தொடர பான களமதிப்பீட்டுப் பணிகள் முடி ந்து விட்டன.

தற்போது, தரவுகளை ஆராயும் பணிகள் நடந்து வருகின்றன. கடந்த டிசம்பர் மாதம், 17 ஆயிரம் அரச பணியாளர் (19) பக்கம் பார்க்க...



13

பின்னணி என்ன?

# மானிப்பாய் வைத்தியசாலையில் கடந்த வருடம் 36 ஆயிரம் பேர் சிகிச்சை

(ஆனைக்கோட்டை)

மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்தியசாலையில் கடந்த வருடம் வெளிநோயாளர் பிரிவில் 36 ஆயிரத்து 378 பேர் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளனர். இதனைவிட நாய்க் கடியினால் 445 பேர் சிகிச்சை பெற்றுள்ளதாக வைத்தியசாலையின் புள்ளிவிபரத்தகவல்கள் தெரிவித்துள்ளன.

மேலும் இங்குள்ள பிரசவ விடுதியில் 13 பிரசவங்கள் இடம்பெற்றுள்ளன. தற்போது இவ்வைத்தியசாலைக்கு புதிய வைத்திய அதிகாரி அண்மையில் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து நோயாளர்கள் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றனர்.

நாளொன்றுக்கு சுமார் 200 முதல் 250 பேர் வரை சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர். மேலும் இவ்வைத்தியசாலையில் ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் வைத்தியசிகிச்சைப் பிரிவு வைத்திய அதிகாரியினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதில் நீரிழிவு, மூட்டு நோயாளர்கள் சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர்.

இதனைவிட மேலும் பல கிளினிக் சேவையை வழங்குவதற்கும் வைத்திய அதிகாரி முயற்சி எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (104)

# மாற்று வலுவுடையோரின் தேவைகள் குறித்து ஆய்வு

(முழங்காவில்)

முழங்காவில் அன்புபுரம் மாற்று வலுவுடையார் சங்கத்தின் மாற்று வலுவுடையோர் தொடர்பிலான கலந்துரையாடல் கடந்த 27 ஆம் திகதி மாலை அன்புபுரம் பொது மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் மாற்று வலுவுள்ளோருக்கான உபகரணங்கள், வைத்தியசாலை வசதிகள், போக்குவரத்து வசதிகள் இலகுவான முறையில் மேற்கொள்வதற்கான வசதிள் மற்றம் மாற்று வலுவுள்ளோர்களுக்கான உரிமைகள் தொடர்பாகவும் விரிவான முறையில் ஆராயப்பட்டது.

இதில் வடமாகாண குடும்பப் புணர்வாழ்வு நிறுவன இணைப்பாளர் ஜோய், மாற்றுவலுவுள்ளோர் சம்மேளன பூநகரி பிரதேச இணைப்பாளர் செ.சதீஸ்குமார், குடும்ப புணர்வாழ்வு நிறுவன ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (09)

# சான்றிதழ் வழங்கல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஐ.டி.எம். நிறுவனத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நிறுவன முகாமையாளர் ஜனகன் விநாயகமூர்த்தி கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் ரஞ்சினி நவரட்ணம் கலந்துகொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி கைத்தொழில் வணிக மன்றத்தலைவர் ப.ஸ்ரீப்பிரகாஷ் கலந்துகொள்ளவுள்ளார்.

# இசை வகுப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சி கலா மன்றத்தினர் இசை வகுப்புக்கள் நடாத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சங்கீதம், நடனம், வயலின், ஓகன், மிருதங்கம் போன்ற துறைகளில் ஆர்வமுள்ளவர்கள் தமது பதிவினை தென்மராட்சி கலாமன்றத்தின் தலைவரிடம் மேற்கொள்ள முடியும்.

வகுப்புக்கள் சனி, ஞாயிறு கிழமைகளில் நடைபெறும் என்றும் மிகவிரைவில் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (130)

# இளைஞர் கழக சம்மேளனத்திற்கு புதிய நிர்வாகிகள் தெரிவு

(கரவெட்டி)

கரவெட்டி பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் யா/தேவரையாளி இந்துக் கல்லூரி மண்டபத்தில் கரவெட்டி பிரதேச இளைஞர் சேவை அலுவலர் வ.மனோராஜ் தலைமையில் இடம் பெற்றதுடன் புதிய நிர்வாகிகள் தெரிவு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி க.சண்முகவடிவேல், பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிவச்செல்வன் முன்னாள் தேசிய சம்மேளன பிரதிநிதி செ.உதயமோகன் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் 2014 ஆம் ஆண்டிற்கான நிர்வாகத்தெரிவும் இடம் பெற்றது.

தலைவராக ர.நிரோஜன், பொருளாளராக ம.கீர்த்தனன் உபதலைவராக க.ஜெயதர்சன், உபசெயலாளராக ந.லிசாந்தன், அமைப்பாளராக வீ.றொபின்சன் ஆகியோர் தெரிவாகினர்.

உபஅமைப்பாளராக சி. நளினி, காந்தன் விளையாட்டுத் துறைக்கு த.தர்ஷிகன், கலாசார துறைக்கு சி.விஜிதரன், முயற்சியாண்மை துறைக்கு ம.ராகவன், ஊடகமும் தகவலும் துறைக்கு கு.சந்ரு, தேசிய, சேவை துறைக்கு செ.மேனகன் கல்வி/பயிற்சி/தொழில்/ஆலோசனை வழிகாட்டல் துறைக்கு சி.சிவச்செல்வன், நிதித்துறைக்கு சு.நிருத்திகன் சூழல் பாதுகாப்புத் துறைக்கு ச.சர்வன், கணக்கு பரிசோதகருக்கு - ப கோகுலன் ஆகியோர் தெரிவானார்கள். (48)

# கற்சிலைமடு பாடசாலையில் புதிய கட்டடம் திறப்பு



முல்லைத்தீவு மாவட்டத்தின் கற்சிலைமடு அரசினல் தமிழ் கலவன் பாடசாலையின் புதிய கட்டடம் அவுஸ்ரேலிய தூதுவர் றொபின் மொடியினால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலிய அரசாங்கத்தின் அனுசரணையுடன் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் 83 மில்லியன் ரூபா செலவில் யுனிசெவ் நிறுவனத்தினால் வகுப்பறைகளுடன் சேர்ந்த நூலகம் விஞ்ஞான ஆய்வு கூடமும் ஒன்றுகூடல் மண்டபமும் அமைகப்பட்டு வைபவ ரீதியாக கடந்த புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் முதல்வர் நாகேந்திரராசா் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முல்லைமாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளார் சத்தியசீலன், வட மாகாண கல்விப் பணிப்பாளர் செல்வராஜா, துணுக்காய் வலயக்கல்வி பணிப்பாளர் மாலினி வெளிற்றன், இலங்கைக்கான யுனிசெவ் நிறுவனத்தின் வதிவிடப் பிரதிநிதி உணா மைக்கோலின் ஆகியோர் கலந்துகொண்டனர். (40)

# கடந்தவார குற்றச்செயல்; குடாநாட்டில் 92 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொலிஸ் பிரிவில் கடந்த வாரம் பல்வேறு குற்றச் செயல்களின் நிமித்தமும் நீதிமன்றப் பிடியாணையின் பிரகாரமும் 92 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டதாக யாழ்.பொலிஸ் அத்தியட்சகர் நிகால் பெரேரா தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டே அவர் இந்தத்தகவலை வெளியிட்டார். இதில் சந்தேகத்தின் பேரில் ஏழுபேரும், பிடியானையின் பேரில் ஒன்பது பேரும், பொது இடங்களில் கலகம் விளைவித்த ஆறு பேரும், களவு சம்பந்தமாக ஏழு பேரும் இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் உள்ளடங்குவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் கடந்த வாரம் யாழ்.பொலிஸ் பிரிவில் இரண்டு காசோலை மோசடிச் சம்பவங்களும் நடைபெற்றதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (பா)

# சந்தைக்கட்டடப்பணிகள் ஒப்பந்தகாரரிடம் கையளிப்பு



வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் கீழ் அமைக்கப்படவுள்ள நெல்லியடி புதிய சந்தைக்கட்டடப்பணிகளை ஒப்பந்தகாரரிடம் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

ஒப்பந்தகாரரிடம் இப்பணிகளை கரவெட்டி பிரதேசசபை தலைவர், செயலாளர் ஆகியோர் இணைந்து கையளித்தனர். அதன் பின்னர் கட்டடம் அமையவுள்ள இடத்தினை ஒப்பந்தகாரர் மற்றும் சபை பிரதிநிதிகள் பார்வையிட்டு கலந்துரையாடினர். (18)


ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1030
திகதி 30.01.2014

வெற்றி எண்கள்: 14 39 51 61 — ஆங்கில எழுத்து M

ஜக்பொட் பரிசு ரூ. 2,07,02,500/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 2,07,02,500/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 2 | 10,00,000/= | ரூ. 20,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 11 | 50,000/= | ரூ. 5,50,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 263 | 1,000/= | ரூ. 2,63,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 488 | 1,000/= | ரூ. 4,88,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11887 | 60/= | ரூ. 7,13,220/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6314 | 40/= | ரூ. 2,52,560/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 155445 | 20/= | ரூ. 31,08,900/= |
| ஆங்கில எழுத்து | 22462 | 20/= | ரூ. 4,49,240/= |
| | | மொத்தம் ரூ. | 78,24,920/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| பொலன்னறுவை | 705654183-2-22 |
| வவுனியா | 705656336-3-13 |
| மன்னார் | 705647255-1-41 |
| கண்டி | 705649660-7-07 |
| பதுளை | 705645774-6-06 |
| யாழ்ப்பாணம் | 705643149-6-16 |
| களுத்துறை | 705653127-2-02 |
| மாத்தறை | 705647109-4-44 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 82,24,920/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா 21,007,080/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.02.03 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 2 333546/7

(C/3264)

# மற்றவர்களுக்கு உதவும் மனப்பாங்கு நற்பிரஜைகளாக உருவாக வழிவகுக்கும்

## யாழ்.மாவட்ட கட்டளைத்தளபதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

விளையாட்டுத்துறையிலும், கல்வித்துறையிலும் கவனம் செலுத்துவதுடன் மற்றவர்களுக்கும் உதவி செய்யுங்கள் இதுவே இந்நாட்டின் நற்பிரஜைகளாக உங்களை இனங்காட்டும் என யாழ்.மாவட்ட கட்டளைத தளபதி உதய பெரேரா தெரிவித்தார்.

கடந்த புதனன்று நெடுந்தீவு மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இங்கு விருந்தினர்களாக வந்துள்ளவர்கள் கல்வியிலும் விளையாட்டுத்துறையிலும் சிறந்த வல்லுநர்கள் அவர்கள் இந்த நெடுந்தீவில் கல்விகற்று விளையாடியவர்கள்.

உங்களுக்கு உதவ விளையாட்டரங்கு ஒன்றையும் கட்டித் தந்துள்ளார்கள். இது பெருமைப்படக்கூடிய ஒருவிடயம் இதை நீங்கள் திறம்பட பயன்படுத்தி பயன் பெறவேண்டும்.

இன்று உங்களது அதிபரின் சிரிப்பில் நெடுந்தீவு மக்களின் கல்விச் சமூகத்தின் ஒற்றுமையைக் காண்கிறேன்.

விளையாட்டுப் போட்டி என்றால் பாடசாலை அதிபருக்கு பெரும் சுமையாக



இருக்கும்.

ஆனால் இங்குள்ளவர்கள் ஒற்றுமையாக அதிபரின் சுமையைக் குறைத்து இந்த விளையாட்டுப் போட்டியை திறம்பட நடாத்தி வருவது பெருமையளிக்கின்றது என்றார். (இ)

# இந்து கலாசாரத் திணைக்களத்தால் மாணவரிடையே பொதுஅறிவுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

இந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களிற்கிடையே வருடா வருடம் நடாத்தப்பட்டுவரும் இந்துசமயப் பொது அறிவுப் போட்டிக்கான விண்ணப்பங்களை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் கோரியுள்ளது.

தரம் 2 முதல் 11 வரையான மாணவர்களிற்கிடையே நடைபெறவுள்ள இப் போட்டிக்கான விண்ணப்பங்களை அறநெறிப் பாடசாலை அதிபர்கள், திணைக்களத்தால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தில் பூர்த்தி செய்து பெப்ரவரி மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இப்போட்டியானது திணைக்களத்தில் வழங்கப்பட்டுள்ள பாடநூலை அடிப்படையாகக் கொண்டு நடாத்தப்படவுள்ளது. 40 புள்ளிகளுக்கு மேல் பெறும் மாணவர்களிற்குச் சான்றிதழ் வழங்கப்படும். அகில இலங்கை ரீதியாக நடைபெறவுள்ள இப்போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் முதலாமிடத்தைப் பெறுபவர்களிற்குப் பதக்கமும், சான்றிதழ்களும் வழங்கப்படும். (06)

# விண்ணப்பங்கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையானது காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் காய்ச்சி இணைப்பவர் (வெல் டிங்), மரவேலை தொழில் நுட்பவியலாளர் (தளபாடம்) ஆகிய இலவசமான கற்கைநெறிகளும் பருத்தித்துறை தொழிற்பயிற்சி நிலையத்தில் வீட்டு மின்சார உபகரண திருத்துநர் சிறுவர், பெண்களிற்கான ஆடை வடிவமைப்பாளர் ஆகிய கற்கைநெறிகளும் ஆரம்பிக்கவுள்ளது. இவ்வனைத்து கற்கைநெறிகளும் தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சிகளாகும்.

இக்கற்கைநெறிகளைக் கற்க விரும்புவோர் தங்கள் பதிவுகளை மாவட்ட அலுவலகம், 1 ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல 12, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (தொ.பே. 021 222 7949) அல்லது குறிப்பிட்ட தொழிற்பயிற்சி நிலையங்களில் எதிர்வரும் 7ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# இலவச மருத்துவமுகாம்

(யாழ்ப்பாணம்)

இளவாலைப் பகுதியில் இலவச மருத்துவ முகாம் ஒன்று நடைபெறவுள்ளது. இளவாலை இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமை இம் மருத்துவ முகாம் இடம்பெறவுள்ளது. இதற்காக யாழின் முன்னணி வைத்திய நிபுணர்கள் வருகை 'தர உள்ளனர்.


இவ் இலவச மருத்துவ முகாம் இளவாலை மற்றும் அயல் கிராமங்களைச் சார்ந்தவர்களும் வருகைதந்து மருத்துவ குறிப்புக்கள் மற்றும் மருத்துவ ஆலோசனைகள், மருத்துவ வசதிகளைப் பெற்றுகொள்ளக் கூடிய வகையில் அமைக்கப்பட்டிருக்கிறது.

இச்சேவையை பெறவிரும்புபவர்கள் இன்று சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் கலை மகள் படிப்பகத்தில் இடம்பெற இருக்கும் இம் மருத்துவ முகாமிற்கு வருகை தர முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.(48)



யாழ்ப்பாணத்திற்கு நேற்றுமுன்தினம் வருகை தந்த உகண்டா பாதுகாப்பு அமைச்சர் அடங்கிய உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரிகள் குழுவினர் யாழ்.பொது நூலகத்திற்கு விஜயம் செய்து ஏட்டுச்சுவடிகளை பார்வையிடுவதைக் காணலாம். (படம்: இ. இராஜகுமார்)

# என்னமாதிரியான உலகமப்பா இது?




கொடுமையிலும் கொடுமையான ஒரு சங்கதி கிளிநொச்சி ஜெயபுரத்தில் நடந்திருக்கு.

'ஜெயபுரத்தில் பாடசாலையின் உயர்தர மாணவர்களுக்கு உரிய ஆசிரியர்கள் வழங்கப்படமாட்டார்கள் என்றும் அங்குள்ள மாணவர்கள் படிக்க வேணும் என்றால், அங்கிருந்து எட்டு கிலோ மீற்றர் தொலைவிலிருக்கும் முழங்காவில் மத்திய கல்லூரிக்குப் போகலாம்' என்றும் சொல்லியிருக்கிறார் வட மாகாணக் கல்வி அமைச்சர் குருகுலராஜா.

தங்களுடைய கல்வியைத் தொடர முடியாத நிலையில் பாதிக்கப்பட்டிருக்கும் மாணவர்களுக்கு 'என்ன ஒரு அருமையான' தீர்ப்பை வழங்கியிருக்கிறார் கல்வி மந்திரி?

இந்த மாதிரியான ஒரு தீர்ப்பை வழங்கியதற்காக அவர் தமிழர்களின் கல்வி வரலாற்றில் மறக்க முடியாத ஒரு அடையாளத்தைப் பதித்திருக்கிறார்.

மாணவர்களுடைய தேவைகளை மனதிற்கொண்டு, அவற்றை மையப்படுத்தி சிந்திப்பதற்குப்பதிலாக, மாணவர்களுக்கான தேவைகளை நிறைவேற்றி அந்த மாணவர்களை வெற்றியடையச் செய்வதற்குப் பதிலாக மாணவர்களைப் புறக்கணிக்கும் தீர்மானத்தை எடுத்திருக்கும் கல்வி அமைச்சரை என்னவென்று சொல்ல முடியும்?

இவ்வளவுக்கும் இந்தப் பாடசாலை அமைந்திருக்கும் ஜெயபுரம் பகுதியில் இந்த மாணவர்கள் ஏனைய வழிகளில் தங்களுக்கான கல்வியைப் பெற முடியாது. அதாவது பாடசாலைக் கல்விக்கு அனுசரணையாக தனியார் கல்வியைப் பெறக்கூடிய வாய்ப்புகள் கிடையாது.

எனவே பாடசாலையில் பெறக்கூடிய கல்வியை மட்டுமே ஒரே ஆதாரமாகக் கொண்டிருக்கின்றனர் இந்த மாணவர்கள்.

அதேவேளை முழங்காவில் பாடசாலைக்கு இந்த மாணவர்கள் சென்று படிக்க வேண்டும் என்றால், அங்கே சென்று வரக்கூடிய இலகுவான போக்குவரத்து வசதிகள் கிடையாது. மட்டுமல்ல தனியே சென்று வரக்கூடியவாறு அந்தப் பகுதியின் அமைவும் இல்லை.

இந்த நிலையில் இவர்களுக்கான ஆசிரியர்களை வழங்க முடியாது என்று சொன்னால் என்ன நியாயம்? இது எந்த வகையிலான நீதி? இதை எப்படி நாம் ஏற்றுக்கொள்வது?

ஒரு பாடசாலைக்குத் தேவையான ஆசிரியர்களை வழங்க வேண்டிய பொறுப்பு கல்வி அமைச்சருக்கும் வலயக் கல்விப் பணிமனை, கல்வி அமைச்சு ஆகியவற்றுக்கும் உண்டு.

வடமாகாணத்தில் தேவைப்படும் ஆசிரியர்களைவிட அதிகளவான ஆசிரியர்கள் சேவையில் உள்ளனர்.

ஆனால், இவர்களைப் பகிர்ந்து தேவைப்படும் இடங்களுக்கு அனுப்பி வைப்பதில்தான் பிரச்சினை.

ஏனென்றால், அரசியல் செல்வாக்கும் நிர்வாகத்தை சீராக இயக்குவதில் உள்ள திறனின்மையும் ஆசிரிய வளத்தைப் பகிர முடியாத நிலையை உருவாக்கியுள்ளன.

இதையும் விட இன்னொரு வலுவான காரணமும் உள்ளது.

ஜெயபுரத்தில் உள்ளவர்கள் மலையகத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்து குடியேறிய இந்திய வம்சாவழியினரே.

எனவே, இதுவும் ஒரு பிரதான காரணமாக இங்கே வேலை செய்கிறது.

அதாவது, ஜெயபுரத்திலிருக்கும் மாணவர்கள் படித்து முன்னேறுவதோ, அந்தப் பகுதி மக்கள் தங்களின் பின்தங்கிய நிலையிலிருந்து மீள்வதோ இந்தக் கல்வி அமைச்சரின் கருத்திலும் இல்லை. கவனத்திலும் இல்லை.

இந்த மாதிரியான ஒரு தேவை யாழ்ப்பாணத்தில் ஏதாவது ஒரு பாடசாலையில் ஏற்பட்டால் இதேபோல ஒரு தீர்ப்பை அங்கே வழங்கியிருப்பாரா இந்தக் கல்வி அமைச்சர்?

ஆனால், இதை மறுத்துப் பேசுவதற்கு கல்வி அமைச்சர் முயற்சிக்கலாம். அதற்கு அவர் ஒரு வாய்ப்பாட்டை இங்கே பிரயோகிக்கலாம்.

போர்க்காலத்தில் ஏற்பட்ட ஆசிரியப்பற்றாக் குறைபாட்டுக்குத் தீர்வு காண்பதற்காக இந்த மாதிரி அண்மையில் உள்ள பாடசாலைகளின் மாணவர்களை இணைத்து, கற்பித்தல் மேற்கொள்ளப்பட்டது.

அப்பொழுது வேறு இடங்களில் இருந்து ஆசிரியர்களைப் பெற முடியாத ஒரு நிலை இருந்தது. அது போர்க்காலம். நெருக்கடிக்காலம்.

ஆனால், அந்த நிலை இன்றில்லை. இன்று நிலைமைகள் சீரடைந்து, நிர்வாக இயந்திரம் புத்துணர்வோடு செயற்படும் காலச் சூழல்.

இன்று சீரடைந்திருக்கும் நிலைமை ஏற்பட்டபடியால்தான் குருகுலராஜாவே கல்வி அமைச்சராக பதவி வகிக்க முடிந்திருக்கிறது.

இல்லையென்றால், ஓய்வு பெற்ற பின்னர் காலுக்கு மேல் கால் போட்டவாறு ஓய்வூதியமும் ஆங்கிலப்பத்திரிகையுமாகவே இருந்திருப்பார் குருகுலராஜா.

பசித்தவனுக்குத்தான் தெரியும் பசியைப்பற்றி என்பார்கள். அதை–அந்த உணர்வை அவர் ஒரு போதும் அடைந்தவரல்ல.

அவரை நம்பி வாக்களித்த இந்தப் பின்தங்கிய மக்கள்தான் பாவம். அவர்களுக்கான தண்டனையை குருகுலராஜாவே வழங்கிக் கொண்டிருக்கிறார்.

என்னமாதிரியான உலகமப்பா இது?

உனது விடுதலைக்குரிய வழி பிறர் வசமில்லை. அது உன்னிடமே உள்ளது. - கௌதம புத்தர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## மக்கள் கேட்க மாட்டார்களா?

கடந்த 27ஆம் திகதி கூடிய வட மாகாண சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களால் 12 பிரேரணைகள் முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன. மக்கள் வாழ்வைச் செப்பம் செய்வதற்குரிய சட்டவாக்கங்களை நிறைவேற்றிச் செயற்படுவதற்குப் பதிலாக மத்திய அரசைப் பழிவாங்குவதிலும், மாகாண சபையை செயற்படுத்தப் போவதில்லை என்று காட்டவுமே சபை முயன்றிருக்கிறது.

மாகாணத்திற்கென ஒதுக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் தேவையான சட்டங்களை இயற்றி செயற்பட்டுக்கொண்டு, ராஜதந்திர நடைமுறைகளூக்கூடாக மேலதிக அதிகாரங்களையும் அடைந்து கொள்ளும் நம்பிக்கையோ எத்தனமோ மாகாணசபையைப் பொறுப்பெடுத்துக் கொண்டவர்களிடம் இல்லை என்பது தெளிவாகிறது.

மாறாக, மாகாண சபையின் அதிகார எல்லைக்கு அப்பாற்பட்ட விடயங்கள் தொடர்பில் தீர்மானங்கள் நிறைவேற்றுவதிலும், மத்திய அரசிடம் கேட்கவோ பெறவோ எதுவுமில்லை என்பதாகவும், இலங்கை அரசுக்கு சர்வதேசத்தின் தண்டனை கிடைக்க வேண்டும் என்பதிலுமே குறியாக இருக்கின்றனர். இது தனிநாட்டு நிகழ்ச்சிநிரலின் செயற்பாடுகளே ஒழிய வேறில்லை.

இதுவரை நடத்தப்பட்டதும், நடந்து கொண்டிருப்பதும் இலங்கை அரசினால் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற திட்டமிட்ட இன அழிப்பு என்பதனை அனைத்துலக சமூகத்திற்கு நாம் சுட்டிக் காட்டவேண்டும் என்பது வட மாகாண சபையின் தீர்மானங்களில் ஒன்று.

முன்னாள் நீதியரசரான முதலமைச்சர், இனவழிப்பு என்பது ஒரு சட்டச் சிக்கலான வார்த்தைப் பிரயோகம். சர்வதேச விசாரணைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே இனவழிப்பு என்ற வார்த்தை பயன்படுத்த முடியும் என்றும் எடுத்துரைத்தபின், இந்தப் பிரேரணையிலிருந்த இன அழிப்பு என்ற வார்த்தையினை இன வழிப்புக்கு ஒப்பானது என்றும், தமிழ் மக்கள் என்பதனை எமது மக்கள் என்றும் மாற்றம் செய்யப்பட்டு பின்னர் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

அரசில் எமக்கு எள்ளளவு நம்பிக்கையும் இல்லை என்பதுடன் எந்தவிதமான உள்நாட்டு பொறிமுறைகளும் எமக்கு நீதியையோ அல்லது அரசியல் தீர்வையோ ஒரு போதும் கொடுக்குமென நம்பவே இல்லை. ஆகையால் அனைத்து உள்நாட்டுப் பொறிமுறைகளையும் அடியோடு நிராகரித்தல் என்பதும் வடமாகாண சபையின் மற்றொரு தீர்மானம்.

இவையெல்லாம் எதைக் காட்டுகின்றன. சர்வதேச நாடுகள் இலங்கை அரசைப் போர்க்குற்றங்களுக்காகத் தண்டித்துவிட்டு, எமக்குத் தனிநாட்டைப் பிரித்துத் தருவார்கள் என்பதைத்தானே மறைமுக நம்பிக்கையாகத் தமிழ்மக்கள் தலையில் இன்னமும் அரைக்கப்படுகிறது!

அது நடக்கக் கூடியதுதானா? அப்படி யாராவது சொல்லியிருக்கிறார்களா? இலங்கை அரசைப் போர்க்குற்ற விசாரணைக்கு உட்படுத்தித் தண்டித்த பிறகு, தமிழ் மக்களுக்கு தனிநாட்டையோ சமஷ்டியையோ அல்லது தன்னாட்சி அலகையோ எடுத்துத் தரப்போவதாக எந்த ஒரு வெளிநாடாவது சொல்லியிருக்கிறதா? அறிகுறியேனும் காட்டியிருக்கிறதா?

சர்வதேசத்தின் போர்க்குற்ற விசாரணை, இலங்கை அரசைத் தண்டித்தல், பொருளாதாரத் தடைவிதித்தல், ஆட்சியாளரைப் பணியவைத்தல் அல்லது ஆட்சியை மாற்றுதல் என்பதெல்லாம் தனியானதொரு நிகழ்ச்சிநிரல். அந்த நிகழ்ச்சியொழுங்கில் தமிழ் மக்களுக்குத் தனிநாடோ சமஷ்டியோ தன்னாட்சியோ எப்படி வரும் என்பதை யாராவது விளக்க வேண்டாமா?

அப்படி எந்த விளக்கமுமில்லாமலே சர்வதேசத்தின் நிகழ்ச்சிநிரலுக்கு வலுவேற்றும் தீர்மானங்களை நிறைவேற்றிக் கொண்டிருப்போம் மற்ற வழிமுறைகளைப் பார்க்கமாட்டோம் என்று இலங்கையினுள் இருக்கும்–தொடர்ந்தும் இருக்கப்போகும் ஒரு மாகாணம் தன் நடவடிக்கைகளை முடக்கிக் கொள்வது எந்தவகையில் சரியாகும்?

- ஆசிரியர்.

# இலங்கைக்கு எதிராகவே இந்தியா எப்பொழுதும் செயற்பட்டு வருகிறது

## கூறுகிறார் அனுரகுமார திசாநாயக்க எம்.பி.

(கொழும்பு)

வரலாற்றில் தீர்க்கமான சந்தர்ப்பங்களில் இந்தியா, இலங்கைக்கு எதிராகவே நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதன் நோக்கம் இலங்கையை அரசியல், பொருளாதார ரீதியில் ஆக்கிரமிப்புச் செய்வதாகும் என ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினார் அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

பெலவத்தையிலுள்ள ஜே.வி.பி.யின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்திற்கான புகையிரதப்பாதை, மன்னாருக்கான ரயில் பாதை, அங்கு எண்ணெய் ஆய்வு, இலங்கையின் தொலைபேசித்துறை, கிழக்கில் ஹோட்டல்கள் அமைக்கும் திட்டங்களென அனைத்துத் துறைகளையும் ஆக்கிரமித்து விட்டது. இலங்கை பாரியளவில் மின் சக்தியைப் பெறக்கூடிய சம்பூர் அனல் மின் உற்பத்தி நிலையம் அமைப்பதற்கான உடன்படிக்கையையும் செய்து கொண்டது. இன்று ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு மாநாட்டைக் காட்டி இலங்கையின் பொருளாதாரத்தை முழுமையாக விழுங்கி தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதற்கான சீபா பரந்துபட்ட இந்திய, இலங்கைக்கு இடையிலான பொருளாதார உடன்படிக்கையை செய்து கொள்ளப்போகிறது.

இது கைச்சாத்திடப்பட்டால் எமது பொருளாதாரம் இந்தியமயமாகிவிடும். இன்றும் மோட்டார் சைக்கிள், பஸ்கள், உடைகள் மோட்டார் வாகனங்கள் என எமது நாட்டை இந்தியா ஆக்கிரமித்துள்ளது. இந்தியாவில் மக்கள் வாழ்வதற்கு வீடில்லாமல் அன்றாடக் கடமைகளை நிறைவேற்றமுடியாமல் மலசல கூட வசதிகள் இல்லாமல் பல கோடி மக்கள் வாழ்கின்றனர். ஆனால், வடக்கில் தமிழ் மக்களுக்கு எனக்கூறிக் கொண்டு 50 ஆயிரம் வீடுகளையும், மலசல கூடங்களையும் அமைக்கின்றது.

இது தமிழ் மக்கள் மீதுள்ள பாசத்தால் அமைக்கப்படவில்லை.

இங்கு அரசியல், பொருளாதார ரீதியில் ஆக்கிரமிப்பதற்காகவே இதனைச் செய்கின்றனர். இந்தியா தமிழ் மக்களின் நண்பனல்ல, எதிரி என்பதே உண்மையாகும்.

அப்படி தமிழ் மக்கள் மீது அக்கறையிருந்திருக்குமானால் சம்பூரிலிருந்து தமிழ் மக்களின் காணிகளை பறித்திருக்குமா? இதனைத் தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

யுத்தம் முடிந்து நான்கு வருடங்கள் கழிந்து விட்ட நிலையில் அரசாங்கம் தமிழ் மக்களுக்கு ஜனநாயகத்தை வழங்கவில்லை.

அம் மக்களின் மனித உரிமைகளை பாதுகாக்கவில்லை. மாறாக அம்மக்களை ஓரம் கட்டி அடக்கு முறைக்குள் வைத்துள்ளது. அம்மக்களின் நம்பிக்கையை பெறுவதற்கு தவறிவிட்டது என்றார்.

# எந்தத் தடைகள் விதித்தாலும் போராட்டங்களை நிறுத்தமாட்டோம்

## பொன்சேகா சூளுரை

(கொழும்பு)

அரசாங்கம் எவ்வகையில் தடை விதித்தாலும் எங்களுடைய போராட்டங்களை நாம் நிறுத்தமாட்டோம் என முன்னாள் இராணுவத் தளபதியும், ஜனநாயகக் கட்சியின் தலைவருமான சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் இன்றைய சர்வாதிகார போக்குடனான ஆட்சியில் மக்கள் பாரிய துன்பங்களுக்கு மத்தியில் வாழ்க்கையை கொண்டு செல்லும் அதேவேளை ராஜபக்ஷ குடும்பத்தினர் அனைத்து வரப்பிரசாதங்களையும் அனுபவித்து வருகின்றனர். இந்நிலையில் புலிகளின் தலைவர் பிரபாகரனே இந்நாட்டை அழிவுப்பாதைக்கு இட்டு சென்றதாக கூறுவது வேடிக்கைக்குரிய விடயமாகும்.

இவ்வரசினால் எங்களுடைய போராட்டங்களை தடை செய்ய முடியாது. நாங்கள் எதற்கும் அஞ்சியவர்களில்லை. அரசாங்கம் எங்கள் மீது எவ்வகையில் தடை விதித்தாலும் நாங்கள் அப்பாவி மக்களுக்காக தொடர்ந்து போராடுவோம். அதேபோன்று எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் பெருமளவிலான வாக்குகளை பெற்று வெற்றி கொண்டு நாட்டின் முன்னணி கட்சியாகப் பரிணமிப்போம்.

தற்போது இந்நாட்டை ஆட்சி செய்யும் மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் ஊழல், மோசடி அதிகரித்துள்ளதுடன், கசினோ சூதாட்டத்தை கொண்டு வந்து கலாசாரத்தை சீரழிவுக்குள் தள்ளியுள்ளது. அதேபோன்று சர்வாதிகார போக்குடன் இந்நாட்டை ஆட்சி செய்கிறது. இவ்வரசின் சர்வாதிகார போக்கிற்கு இடமளிக்கக்கூடாது.

தற்போது மக்களால் நிம்மதியாக வாழ்க்கையை கொண்டு செல்ல முடியாது. பல வருடங்களாக கொழும்பில் வாழும் மக்கள் சிறிய வீடுகளிலேயே வசித்து வருகின்றனர். அவர்களுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய வீடுகளை அரசு வழங்காமல் அவர்களுடைய வீடுகளை உடைத்து அவ்விடங்களை சுவீகரித்து வருகிறது. அத்துடன், இந்நாட்டு மக்கள் தொடர்பில் எவ்வித சிந்தனையும் அரசிற்கு கிடையாது.

கல்வி மற்றும் போக்குவரத்திற்கு போதியளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை. இந்நிலையில் அரசாங்கம் பொய் வாக்குறுதிகளை வழங்கி பொய்மை மிகு ஆசியாவின் ஆச்சரியமாக இலங்கையை மாற்றியுள்ளது. தற்போது மக்களுக்கு மூவேளைகள் சாப்பிட முடியாது. ஒருவேளை உணவையே மூவேளையும் உண்ணுகின்றனர். நமது மூதாதையர்களை விடவும் உணவு உட்கொள்ள வழியின்றி மக்கள் தவிக்கின்றனர். இவ்வரசு ஐந்து தலைமுறையினரை கடனாளியாக மாற்றியுள்ளது என்றார்.

# "அன்னா ஹசாரே" போராட்டம் இலங்கையிலும் ஆரம்பம்

## சுனில் ஹந்துன்நெத்தி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தலைவருக்கு எதிரான அன்னா ஹசாரேவின் போராட்டத்தை தொடங்கியுள்ளதாக ஜே.வி.பி. நாடாளுமன்ற சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் பிரகடனத்தில் இலங்கை கைச்சாதிட்டுள்ளதால் இலஞ்ச ஊழலுக்கு எதிராகச் செயற்பட வேண்டும். ஆனால், இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தலைவருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை முறையாக இடம்பெறவில்லை என்றார்.

முறைப்பாடு செய்து ஒரு மாதம் கடந்துள்ள நிலையில் விசாரணையில் முன்னேற்றம் இல்லை என தெரிவித்து மக்கள் விடுதலை முன்னணி ஆதரவாளர்கள் நேற்று இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவிற்குச் சென்றிருந்தனர்.

அங்கு ஆணைக்குழுவின் தலைவர் ஜகத் பாலபட்டபெதிக்கு எதிராக மீண்டும் முறைப்பாடு செய்தனர். அதன்பின் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட சுனில் ஹந்துன்நெத்தி இவ்வாறு தெரிவித்துள்ளார்.



# விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள்

## 62

வே. அர்ச்சுணன்

**அன்றைய தினம் அதிகாலை மூன்று மணியளவில் 21 பேர்களைக் கொண்ட ஆண்கள், பெண்கள் உள்ளடங்கிய கரும்புலிகள் சிறப்பு படையணியினர் அனுராதபுரம் விமானத்தளத்தினுள் ஊடுருவினர். ஆர். பி.ஜி உந்துகணை செலுத்திகளையும் இயந்திரத் துப்பாக்கிகளையும் பயன்படுத்தி காவலரண்களிலும் வான் தளத்தினுள்ளும் பாதுகாப்புக் கடமையில் இருந்த படையினரின் மீது தாக்குதல்களை நடத்தி வான் படைத்தளத்தினை தமது கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்தனர். பின் வான் படைத்தளத்தினுள் தரித்து வைக்கப்பட்டிருந்த வானூர்திகள், ரேடார் நிலையங்கள் மற்றும் விமான எதிர்ப்பு ஆயுதங்கள் பொருத்தப்பட்ட நிலைகளை அழித்தனர். ஒரு மணித்தியால நேர இடைவெளிக்குள் மூன்று கிலோமீற்றர் நீளத்தையும் இரண்டரை கிலோ மீற்றர் அகலத்தையும் கொண்ட அனுராதபுரம் விமானப் படைத்தளத்தினை கரும்புலிகள் தமது முற்றுமுழுதான கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.**

விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும், அரசாங்கத் தரப்பிற்கும் இடையில் இறுதியில் வெளிநாடுகளில் இடம்பெற்ற பேச்சு வார்த்தைகளின் வெளிப்பாடாக பல தளபதிகள் முன்னைய போரை அதாவது யுத்தம் தொடர்பான தீவிரத்தில் வெளிப்பாடு காட்டாமல் தமது குடும்பம், தமது சுயநலம் என்று சிந்திக்க வெளிப்பட்டதுடன் போரியல் ரீதியான தத்துவங்களையும், போரியல் ரீதியான வெளிப்பாடுகளிலும் ஆர்வம் காட்ட தவறிவிட்டதாக புலிகள் இயக்கத்தின் மத்திய குழுவின் உறுப்பினர்கள் பலரிடையே பல வாதப் பிரதிவாதங்கள் இருந்து வந்தன.

சமாதான முயற்சியானது அல்லது சமாதானப் பேச்சு வார்த்தைகளானது தமது இயக்கத்தை பெரியளவில் பலவீனப்படுத்திவிட்டதாகவே உணரத் தலைப்பட்டனர். அத்துடன் சமாதான காலத்தில் பல வடிவங்களில் பல கோணங்களில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்த இராணுவப் புலனாய்வாளர்கள் புலிகள் இயக்கத்தின் செயற்பாடுகள் தொடர்பிலும் படைக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் உள்நுழையும் விடுதலைப் புலிகளின் மறைமுகமான செயற்திட்டங்கள் தொடர்பிலுமான பல்வேறு துல்லியமான தகவல்களைத் திரட்டத் தவறவில்லை.

இவ்வாறு திரட்டப்பட்ட தகவல்களுக்கு அமைவாக படைத்துறையினர் தமது செயற்திட்டங்களை வகுத்ததுடன் விடுதலைப் புலிகளுக்கு எதிரான பலவிதமான புலனாய்வு பொறிமுறைகளையும் உருவாக்கி இருந்தனர். இதன் காரணத்தால் விடுதலைப் புலிகளுக்கும் அரச படைகளுக்குமிடையில் இறுதி யுத்தம் தொடங்கிய காலத்திலிருந்து அந்த யுத்தம் முள்ளிவாய்க்காலில் முடிவுக்கு வரும் வரை விடுதலைப் புலிகளின் புலனாய்வுத் துறையினரால் கொழும்பிலோ அல்லது தென்பகுதியிலோ தாங்கள் எண்ணியது போன்று பெரியளவிலான தாக்குதலையோ அல்லது குண்டுவெடிப்புக்களையோ செயற்படுத்த முடியாமல் இருந்தது.

இந்த நிலையில்தான் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் எல்லாளன் படை நடவடிக்கை மூலம் சர்வதேச ஊடகங்களையும் சர்வதேசத்தையும், தனது பக்கம் திரும்பிப் பார்க்க வைத்தார். ஆனால் எல்லாளன் படை நடவடிக்கை பிரபாகரன் நினைத்தது போன்று வெற்றி அளித்தாலும் பின்னைய நாட்களில் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எதிராக சர்வதேச வலைப்பின்னல் ஒன்று ஏற்படுவதற்கு இந்த எல்லாளன் படை நடவடிக்கையும் பிரதானமான ஒரு காரணியாக அமைந்ததை மறுக்க முடியாது.

இந்த விடயங்கள் தொடர்பில் விரிவாகப் பார்ப்பதற்கு முன்னர் எல்லாளன் படை நடவடிக்கையை பிரபாகரன் எவ்வாறு மேற்கொண்டார் என்பதை மேலோட்டமாக பார்த்துச் செல்வது பொருத்தமானதாக இருக்கும். இலங்கை வரலாற்றில் பிரபாகரனின் நேரடி நெறிப்படுத்தலின் கீழ் இடம்பெற்ற ஒரு பிரமாண்டமான தாக்குதலாகவே இந்த எல்லாளன் படை நடவடிக்கை அனுராதபுர விமானப் படைத்தளத்தில் மேற்கொள்ளப்பட்டது. கரும்புலிகள் அணியினர் வான் புலிகளின் உதவியுடன் 2007 ஒக்டோபர் 22 அன்று அதிகாலை அனுராதபுரம் இலங்கை வான்படைத்தளம் மீது தமது வெற்றிகரமான தாக்குதலை நடத்தியிருந்தனர்.

பிரபாகரனால் திட்டமிடப்பட்டு துல்லியமான முறையில் குறுகிய நேரத்தினுள் சிறப்பு கரும்புலி அணியினரால் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்ட அந்தத் தாக்குதல் நடவடிக்கை புலிகளின் தாக்குதல் தந்திரோபாயங்களையும் அவர்களது போரிடும் ஆற்றலையும் வல்லமையையும் மீண்டும் ஒரு தடைவ இலங்கை அரசிற்கும், உலகத்திற்கும் நிரூபித்துள்ளதாக பல்வேறு படைத்துறை ஆய்வாளர்களும் அனைத்துலகச் செய்தி நிறுவனங்களும் அப்போது கருத்து தெரிவித்திருந்தனர்.

அன்றைய தினம் அதிகாலை மூன்று மணியளவில் 21பேர்களைக் கொண்ட ஆண்கள், பெண்கள் உள்ளடங்கிய கரும்புலிகள் சிறப்பு படையணியினர் அனுராதபுரம் விமானத்தளத்தினுள் ஊடுருவினர். ஆர்.பி.ஜி உந்துகணை செலுத்திகளையும் இயந்திரத் துப்பாக்கிகளையும் பயன்படுத்தி காவலரண்களிலும் வான் தளத்தினுள்ளும் பாதுகாப்புக் கடமையில் இருந்த படையினரின் மீது தாக்குதல்களை நடத்தி வான் படைத்தளத்தினை தமது கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்தனர்.

பின் வான் படைத்தளத்தினுள் தரித்து வைக்கப்பட்டிருந்த வானூர்திகளை அழிப்பதிலும் ரேடார் நிலையங்கள் மற்றும் விமான எதிர்ப்பு ஆயுதங்கள் பொருத்தப்பட்ட நிலைகளை அழிக்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டனர். ஒரு மணித்தியால நேர இடைவெளிக்குள் மூன்று கிலோமீற்றர் நீளத்தையும் இரண்டரை கிலோ மீற்றர் அ்கலத்தையும் கொண்ட அனுராதபுரம் விமானப் படைத்தளத்தினை கரும்புலிகள் அணியினர் தமது முற்றுமுழுதான கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். அப்போது விடுதலைப்புலிகளின் வான்படையினரின் இரண்டு வானூர்திகள், அனுராதபுரம் வான் படைத்தளத்தினுள் உள்நுழைந்து இரண்டு குண்டுகளை வீசி அப்படைத் தளத்திற்கு மேலும் பாரிய தேசங்களை ஏற்படுத்தின.

அந்த வான் தளத்தினை அன்று முற்பகல் 11.00 மணிவரை தமது கட்டுப்பாட்டிற்குள் கரும்புலிகள் அணியினர் வைத்திருந்ததுடன் அனுராதபுரம் வான்படைத் தளத்துள் தரித்து வைக்கப்பட்டிருந்த அனைத்து வானூர்திகளையும் தாக்கியழித்தனர். அத்துடன் அந்த வான்படைத் தளத்துக்கு உதவி புரிவதற்காக வவுனியாவில் இருந்து அனுப்பப்பட்ட பெல்-212 உலங்குவானூர்தி மகிந்தலைப் பகுதியில் வைத்து வானூர்தி எதிர்ப்பு ஆயுதத்தினால் சுட்டு வீழ்த்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இந்த தாக்குதல் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் செனவிரட்ன 660 கோடி ரூபா பெறுமதி வாய்ந்த 18வானூர்திகள் முற்று முழுதாக அழிக்கப்பட்டு அல்லது சேதமாக்கப்பட்டு விட்டதாக தெரிவித்திருத்தார். எம்.ஐ-24 உலங்கு வானூர்த்திகள்-02, எம்.ஐ-17 உலங்குவானூர்தி -01, பெல்-212 -01, பீச் கிராப்ட் -01, ம-8 பயிற்சி வானூர்தி -01 PT-6 பயிற்சி வானூர்தி -03, ஆளில்லா வேவு வானூர்தி -03, செஸ்னா வானூர்தி -06 ஆகியவை இத்தாகுதலின் போது புலிகளினால் அழிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

இது தவிர இத் தாக்குதலில் இலங்கை விமானப்படையில் பல தாக்குதல்களை நடத்தி விமானப்படைக்கு பலவகையிலும் நன்மைகளையும், சாதகமான சூழ்நிலைகளையும் ஏற்படுத்திக் கொடுத்துவந்த விங் கொமாண்டர் அமிலா மொகொட்டி மற்றும் ஸ்குவார்டன் லீடர் ருவான் விஜயரட்ண மற்றும் இரண்டு பிளையிங் ஒபிசர்கள் நான்கு கோப்ரல்கள் ஆகியோர் பலியாகியிருந்தனர். இதைவிட பல விமானப்படையினர் காயம் அடைந்து தப்பியோடியிருந்தனர்.

ஒரு விமானப்படை வீரனின் இழப்பு என்பது சாதாரணமான இழப்பீடாக இருப்பதில்லை. ஒரு நாட்டின் முப்படையிலும் கூடுதலான வலுவான பயிற்சியையும் பெரியளவில்ான பொருளாதார செலவுகளையும், ஒரு விமானப் படை வீரரை விமானியாக பயிற்றுவிப்பதற்கும் அவரை ஒரு விமானப் படை போர் வீரராக மாற்றுவதற்கும் குறித்த நாட்டின் அரசுகள் பல இலட்சம் ரூபாவை செலவு செய்யவேண்டி ஏற்படுவதுடன் ஏனைய தரைப்படை கடற்படை வீரர்களைவிட இவர்களுக்குச் செய்கின்ற செலவு கனதியானது. அதைவிட படைத்துறையில் இவர்களுடைய வகிபாகமும் பிரதானமானது. இதனைவிட இவர்களுடைய உடல்நிலை உட்பட பல்வேறு தராதரங்கள் மருத்துவப் பரிசோதனைகள் என எண்ணில் அடங்காத சோதனைகளைத் தாண்டியே ஒரு விமானப்படை வீரர் உருவாகமுடியும்.

இவ்வாறு பல சாதனைகளை இலங்கை வான் படையில் நடத்தி வந்த தளபதிகள் ஒரு சிறிய இடைவெளியில் யாருமே நினைத்துப் பார்க்காத இடத்தில், நினைத்துக் கூடப் பார்க்க முடியாத சந்தர்ப்பத்தில் இந்த படைத்தளத்தில் கொல்லப்பட்டமையானது இலங்கை வான் படைக்கு பேரிழப்பாகும். பல பில்லியன் ரூபா சொத்தழிவுகளைச் சந்தித்த விமானப்படை அனுராதபுரத்தில் தனது தளபதிகளையும், விமான சிதறல்களுடன் சேர்த்து பொறுக்கவேண்டி ஏற்பட்டது. இவ்வாறு இலங்கை விமானப்படைக்கு ஏற்பட்ட இழப்பீட்டுக்கு தொடர்ந்து என்ன நடந்தது என்பதை தொடர்ந்து பார்ப்பது பொருத்தமானதாக இருக்கும்.

(தொடரும்)

# இலங்கை அகதிகள் எவரும் கடந்த மாதம் ஆஸி.செல்லவில்லை

கடந்த ஒரு மாத காலப்பகுதியில் எந்த ஒரு இலங்கை அகதியும் அவுஸ்ரேலியாவுக்கு செல்லவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் இருந்து சட்டவிரோதமான முறையில் அவுஸ்ரேலியா செல்கின்றவர்களின் எண்ணிக்கை கணிசமான அளவு வீழ்ச்சி அடைந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அகதிகளின் வருகை தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டிருந்த அவுஸ்ரேலிய குழு ஒன்றின் அறிக்கையை மேற்கோள்காட்டி, அவுஸ்ரேலிய உயர்ஸ்தானிகரகம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.



இந்தக் குழு நியமிக்கப்பட்ட 100 நாட்களில், இலங்கையில் இருந்து அகதிகளாக அவுஸ்ரேலியா செல்பவர்களின் எண்ணிக்கை 80 சதவீதத்தால் வீழ்ச்சி அடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முஸ்லிம்களின் இழப்புகள் குறித்து கணக்கெடுப்பு நடத்தப்படவேண்டும்

## ஹசன் அலி கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் யுத்த காலத்தில் முஸ்லிம் தரப்பில் ஏற்பட்ட உயிரிழப்புகள் மற்றும் சொத்துச் சேதங்கள் குறித்த கணக்கெடுப்புகள் நடத்தப்பட வேண்டும் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஹசன் அலி ஊடகங்களுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"பல அமைப்புகள் இந்தக் கணக்கெடுப்பு மற்றும் குறிப்புகளை சேகரித்திருந்தாலும், அவற்றுக்கு சட்டரீதியான ஒரு அந்தஸ்து இல்லை. அதன் காரணமாகவே அரசே இப்படியான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்றும் கூறுகிறேன்.

எமது கோரிக்கை தமிழ் மக்களின் குரலுக்கு வலுச்சேர்க்கும் வகையிலேயே இருக்கும். அது தமிழர்களின் நிலைப்பாட்டுக்கு முரணானது இல்லை.

கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலான காலகட்டத்தில் முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகள், வாழ்வாதார பாதிப்புகள் போன்ற விடயங்கள் எங்குமே பதியப்பட்டதாகத் தெரியவில்லை.

முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்த கணிப்பீடுகளைச் செய்ய இப்போதுதான் காலம் கனிந்துள்ளது. தற்போதுதான் போர்க்கால இழப்புகள் குறித்து சர்வதேச மட்டத்தில் பேசப்பட்டு வருகிறது. அதனாலேயே இந்தக் கோரிக்கையை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முன்வைத்துள்ளது என்றார்.

# இலங்கையை மீண்டும் இருளுக்குள் கூட்டமைப்பு தள்ளிவிடக்கூடாது

## கலகமதம்பவன்சதேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையை மீண்டும் இருளுக்குள் தள்ளிவிட வேண்டாம் என ஜனாதிபதியின் மத அலுவல்கள் பிரிவின் பௌத்த மதத்திற்குப் பொறுப்பான கலகம தம்பவன்ச தேரர் கூட்டமைப்பிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பு பொதுநூலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்

இன்று சரத் பொன்சேகா சர்வதேச நாடுகளின் நிகழ்ச்சித் திட்டத்துக்கமைய மேற்குலக நாடுகளின் கைப்பொம்மையாகச் செயற்பட்டு வருவதை நிறுத்திக்கொள்ள வேண்டும். ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் தலைமைத்துவத்தில் பெற்றுக்கொண்ட யுத்த வெற்றியை சிதைக்கும் வகையில் சரத் பொன்சேகா செயற்பட்டு வருகிறார்.

இன்னும் இரு மாதங்களில் இரு மாகாணசபைகளுக்கான தேர்தல்கள் நடைபெறவுள்ளன. இந்தத் தேர்தலில் ஆளும் தரப்பினை வெற்றியடைச் செய்து சர்வதேசத்தின் அழுத்தங்களுக்கு இலங்கையர்கள் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும்.

வட மாகாண சபையைப் போன்று சர்வதேசத்தின் நிகழ்ச்சி நிரலுக்கமையச் செயற்படும் மாகாண சபையொன்று மேல் மற்றும் தென் மாகாணத்தில் அமைந்துவிடக்கூடாது. வட மாகாண சபைத் தேர்தலை ஆளும் தரப்பு நினைத்திருந்தால் வென்றிருக்க முடியும்.

ஆனால், மக்களின் ஜனநாயகத்தை உறுதிசெய்யும் வகையில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நீதியும் சுதந்திரமானதுமான தேர்தலை நடத்துவதற்கான சூழலை ஏற்படுத்தினார். ஆனால், இன்று வட மாகாண சபை நாட்டைக் காட்டிக்கொடுக்கும் தீர்மானங்களை நிறைவேற்றி வருகிறது என்றார்.

# ஆந்தை இறைச்சியை உண்டவருக்கு அபராதம்

இரண்டு கிலோகிராம் ஆந்தை இறைச்சியை சமைத்து உண்ட குற்றச்சாட்டை ஒப்புகொண்ட அனுரஜீவ என்ற நபருக்கு இரத்தினபுரி நீதவான் நீதிமன்ற நீதவான் சந்தன குலசூரிய 25,000 அபராதம் விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

ஆந்தை இனம் அழிவடைந்து வரும் நிலையில் அதனைப் பாதுகாக்கும் முயற்சியை பல்வேறு அமைப்புகளும் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஜயலத் ஜயவர்த்தனவின் மகன் மாகாணசபை தேர்தலில் போட்டி



ஐக்கிய தேசியக் கட்சியின் துன்னாள் நாடாளுமன்றஉறுப்பினர் அமரர் டாக்டர் ஜயலத் ஜய வர்த்தனவின் மகன் டாக்டர் கவிந்து ஜயவர்த்தன மேல் மாகாணசபைத் தேர்தலில் கம்பகா மாவட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் போட்டியிடவுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே டாக்டர் கவிந்து ஜயவர்த்தன இதனைத் தெரிவித்தார். அங்கு கருத்துத் தெரிவித்த அவர், எனது தந்தை இந்த நாட்டில் விட்டுச் சென்ற சேவையை தொடரவே நான் அரசியலுக்குள் வந்துள்ளேன். அவர் விட்டுச் சென்ற சேவையை நான் தொடர்வேன்.

அனைத்து இன மற்றும் அனைத்துப் பகுதி மக்களுக்கும் நான் சேவையாற்றுவேன். எனது தந்தை டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன சகோதர இன மக்களின் பிரச்சினைகளுக்காக குரல் கொடுத்தார். அதனை நான் தொடர்வேன். அத்துடன் அனைத்து இன மக்களுக்காகவும் குரல் கொடுப்பேன் என்றார்.

# உணவகங்கள் மீது சோதனை நாடளாவிய ரீதியில் இன்றும்

நாடாளாவிய ரீதியில் நேற்று தொடங்கிய உணவகங்களை சோதனையிடும் நடவடிக்கை ·இன்றும் இடம்பெறவுள்ளது.

இதன் அடிப்படையில் நாடளாவிய ரீதியில் உள்ள உணவகங்கள், உணவு உற்பத்தி நிலையங்கள். பேக்கரிகள் என்பன சோதனையிடப்படுவதாக சுகாதார சேவைகளின் பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித்த மஹிபால தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

நுகர்வோருக்கு சுகாதாரமான உணவைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அமைச்சு, மாகாண சுகாதார அமைச்சுக்கள் மற்றும் கொழும்பு மாநகர சபை ஆகியன ஒன்றிணைந்து நாடளாவிய ரீதியில் இந்த சோதனை நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

ஹோட்டல்கள், உணவகங்கள், உணவு உற்பத்தி நிலையங்கள் இதன் போது சோதனைக்குட்படுத்தப்பட்டு, நுகர்வோர் பயன்பாட்டிற்கு உதவாத உணவுகளை உற்பத்தி செய்யவர்களுக்கு எதிராக உணவுச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்ட 1700 இற்கும் அதிகமானவர்கள் இந்த சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். என்றார்.

# 4 பௌத்த பிக்குகளுக்கு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடத்தடை

சிங்கள ராவயவின் 4 பௌத்த பிக்குகளுக்கு ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்வதற்கான தற்காலிக தடையுத்தரவை கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் விதித்துள்ளது.

கடந்த 8 ஆம் திகதி சிங்கள ராவய இயக்கத்தினர் பிரதமர் காரியாலயத்திற்குள் அத்துமீறி நுழைந்து குழப்பம் விளைவிக்க முனைந்தமை தொடர்பான வழக்கு இடம்பெற்றது.

சிங்கள ராவயவின் தலைவர் அக்மீமன தயாரத்னதேரர் உள்ளிட்ட பௌத்த பிக்குகள் நான்கு பேர் இந்த வழக்கு விசாரணை நிறைவடையும் வரை எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்ள முடியாது என்று பிரதான நீதிமன்ற நீதிவான் கிஹான் பிலப்பிட்டிய உத்தரவிட்டுள்ளார்.

# 35 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் உடற்பரிசோதனை செய்வது அவசியம்

## சுகாதார கல்விப்பணியகம் அறிவிப்பு


பெண்களில் 35 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் தமது பிரதேச செயலகத்திலுள்ள மருத்துவ அதிகாரிகள் அலுவலகத்தில் இலவசமாக முன்னெடுக்கப்படும் முழுமையான உடல் மருத்துவ பரிசோதனைக்கு கட்டாயமாக சமுகமளிக்க வேண்டுமெனவும் இதன் மூலம் மார்பக மற்றும் கருப்பை புற்றுநோய்களை தவிர்த்துக் கொள்ள முடியுமெனஅறிவிக்கப்பட்டுள்ளது. பெப்ரவரி 04 ஆம் திகதி உலக புற்றுநோய் தினமாகும். அதனை முன்னிட்டு இலங்கையில் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கையை குறைப்பது தொடர்பில் செய்தியாளர்களுக்கு விழிப்புணர்வூட்டும் செயலமர்வு நேற்றுமுன்தினம் சுகாதார கல்விப் பணியகத்தில் நடைபெற்றது. இதன்போதே வைத்திய அதிகாரிகள் இத்தகவலை வெளியிட்டனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில் பெண்களுக்கு அதிகமாக மார்பகப்புற்றுநோயும் இரண்டாவதாக கர்ப்பப்பை புற்றுநோயுமே பாரிய அச்சுறுதலாகவுள்ளன. இலங்கையில் வருடந்தோறும் 2 ஆயிரம் பெண்கள் மார்பகப் புற்றுநோய்க்கு உள்ளாகின்றனர். மார்பகப் புற்றுநோய்க்கு உள்ளாவோரில் 470 பேர் வருடந்தோறும் உயிரிழக்கின்றனர். சுமார் 12 ஆயிரம் பெண்கள் முறையான சிகிச்சைகளுடன் தொடர்ந்தும் உயிர் வாழ்கின்ற னர்.

நூறு ஆண்களில் ஒரு ஆணுக்கு மார்பகப் புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்பு இருக்கின்றது. குடும்பத்தில் யாருக்காவது மார்பகப் புற்றுநோய் ஏற்பட்டிருந்தாலோ, தாய்ப்பால் கொடுக்காத பெண்கள், 35 வயதிற்குப் பின்னர் முதற்பிள்ளை கிடைக்கப்பெற்ற தாய்ப்பால் மற்றும் ஈஸ்டரஜன் தொடர்பிலான சத்திரசிகிச்சைக்கு உள்ளானவர்கள் கூடுதல் அக்கறையுடன் சோதனைகளில் ஈடுபடும் அதேநேரம் 35 வயதிற்கு மேற்பட்ட அனைத்துப் பெண்களும் வருடத்திற்கு ஒரு தடவையாயினும் மார்பகங்களை சோதனைக்குட்படுத்த வேண்டியது அவசியமாகும். இருப்பினும் முறையான உணவுப்பழக்கம், உடற்பயிற்சி என்பவற்றின் மூலம் மார்பகப் புற்றுநோய் ஏற்படுவதை தவிர்க்க முடியும்.

உலகில் 02 நிமிடத்திற்கு ஒரு பெண் கர்ப்பப்பை புற்றுநோய் காரணமாக உயிரிழக்கின்றனர். இவற்றுள் 90 சதவீதமானவர்கள் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளைச் சேர்ந்தவர்களாவர். 2030 ஆம் ஆண்டளவில் வருடத்திற்கு 4 இலட்சத்து 30 ஆயிரம் பேர் கர்ப்பப்பை புற்றுநோயினால் உயிரிழக்கலாமென உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது. இலங்கையைப் பொறுத்தவரை வருடந்தோறும் கர்ப்பப்பை புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட ஆயிரம் பேர் புதிதாக இனங்காணப்படுகின்றனர்.

சுமார் ஆயிரம் பேர் வரையிலானோர் வாய்ப் புற்றுநோயின் காரணமாகவே ஆண்டுதோறும் உயிரிழக்கின்றனர். பாபுல், பான்பராக் போன்றவற்றை உபயோகிப்பதனால் தற்போது 30 வயதான இளைஞர்களும் வாய்ப் புற்றுநோய்க்கு ஆளாவதாக தெரிவித்துள்ளனர்.



நல்லூர் பிரதேசசெயலக கலாசார பேரவையின் கலாசார விழா அண்மையில் நல்லூர் நடராஜ பரமேஸ்வரி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர் மங்கள விளக்கேற்றுவதையும், கலைநிகழ்வின் ஒரு பகுதியினையும், கலந்து கொண்டவர்களில் ஒருபகுதியினரையும் காணலாம். (68)

# இந்து ஆலயங்களின் செயற்பாடுகள்
# சமூகம் சார்ந்ததாக அமையவேண்டும்
## திருநெறிக்கழகத் தலைவர் வலியுறுத்து

(வேலணை)

இந்து ஆலயங்கள் தமிழினையும் சைவ சமயத்தையும் சிறுவர்கள் மற்றும் இளையோர்கள் மத்தியில் வளர்ப்பதற்கு ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்கொண்டுவர முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என கிளிநொச்சி மாவட்ட திருநெறிக்கழகத் தலைவரும் மூத்த சமய பெரியாருமான ஆசிரியர் வே.மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

உருத்திரபுரம் பாலையடி அருட்செல்வ விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலையின் ஆரம்பவிழா அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பிரஸ்தாப பாடசாலையினை ஆரம்பித்துவைத்து சிறப்புரையாற்றுகையிலேயே ஆசிரியர் வே.மகாலிங்கம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஆலயபரிபாலன சபையின் தலைவர் அ.விக்கினராசா தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் ஆசிரியர் வே.மகாலிங்கம் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இன்றைய இளம் சமுதாயத்தினரின் மத்தியில் அனேகமான கலாசார சீரழிவுகள் காணப்பட்டு வருகின்றன. மது அருந்துதல், புகைத்தல் உட்பட பல தீய பழக்க வழக்கங்களுக்கும் உள்ளாகிவந்து கொண்டிருக்கின்றனர்.

இதனால் இன்றைய இளம் சமுதாயத்தின் எதிர்காலம் கேள்விக்குறியாகி வருகின்றது. இவற்றில் இருந்து விடுபட பகதிமார்க்கம் சிறந்ததாகும் ஆலய வழிபாடுகள் மன அமைதியையும் உளநலத்தையும் தரக்கூடியது.

கடந்த 1952ஆம் ஆண்டு முதல் இந்த திருநெறிக்கழகமானது கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுவர்கள் மத்தியிலும் ஏனையோர்கள் மத்தியிலும் சமய நெறிகளை வளர்ப்பதற்காக அனேகமான பணிகளையும் செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருவதுடன் சமய நெறி வகுப்புக்களையும் நடாத்தியும் மாணவர்கள் மத்தியில் சமய பரீட்சைகளை நடாத்தி பரிசுகளையும், சான்றிதழ்களையும் வழங்கி வருகின்றது.

அந்த வகையில் இவ்வாறான பணிகளை முன்னெடுத்துள்ள இந்த ஆலயத்தின் சேவைப் பணியானது பாராட்டுக்குரியது. மேலும் அறநெறிப் பாடசாலை ஒன்றினையும் இன்று ஆரம்பித்திருப்பதையிட்டும் உருத்திரபுரம் பாலையடி அருட் செல்வ விநாயகர் ஆலய பரிபாலன சபையினரின் சேவையும் வரவேற்கத்தக்கதாகும் எனத்தெரிவித்தார். (05)

# கரணவாய் பகுதிகளில் பார்த்தீனியம் அதிகரிப்பு

(கரணவாய்)

கரணவாய் தெற்கில் அமைந்துள்ள இந்து மயானத்தில் பார்த்தீனியச் செடிகள் அதிகளவில் வளர்ந்துள்ளதால் மண்வளம் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மயானத்தில் படர்ந்துள்ள பார்த்தீனியம் படிப்படியாக விவசாய நிலங்கள் மற்றும் வடிகான்கள் என படர்ந்து அதிகளவில் காணப்படுவதாகவும் இப்பார்த்தீனிய பரவலைத் தடுக்கும் வேலைத் திட்டத்தை கரவெட்டி பிரதேசசபை உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (18)

# உணவகங்களில் அமுலாகும் வாழைஇலை சாப்பாடு

(கொடிகாமம்)

சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட உணவகங்களில் வாழை இலைகளில் உணவு பரிமாறப்படுவதனை காணமுடிகின்றது.

பொலித்தீன் பைகளினால் சூழல் மாசடைவதனைத் தடுக்கும் முகமாக வாழை இலைகளை பயன்படுத்துமாறு நகரசபை தலைவர் அறிவுறுத்தியதற்கு அமைய உணவக உரிமையாளர்கள் இந்த நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளனர். (130)

# மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி சங்கத்தானை இத்தியடி அருள் மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் திங்கட்கிழமை மு.ப. 11.35 மணி முதல் 12.05 மணிவரை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் விநாயகர் வழிபாடும் கணபதி ஹோமம் என்பன இடம்பெறவுள்ளதுடன் பகல் 12.30 மணி முதல் மாலை வரை அடியார்களின் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

திங்கட்கிழமை மகாகும்பாபிஷேக கிரியைகளைத் தொடர்ந்து மகா அபிஷேகம், விசேட பூசை என்பன இடம்பெறவுள்ளன. இக்கிரியைகளை சிவஸ்ரீ மு.வைத்தியநாதக்குருக்கள் ஆற்றவுள்ளார். சர்வதகாசிரியராக நுணாவில் பிரம்மஸ்ரீ ஜெ.மயூரசர்மா, கலந்துகொள்ளவுள்ளார்.

ஆலயப் பிரமதகுரு தேசமான்ய கலாநிதி சிறி து.கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் கிரியைகள் இடம்பெறவுள்ளன.

✪✪✪ ✪✪✪ ✪✪✪

நெடுந்தீவு கிழக்கு ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான மஹா கும்பாபிஷேகப் பெருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணி முதல் 7.45 மணிவரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

இதில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை அடியார்களின் எண்ணெய்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதில் கும்பாபிஷேக பிரதம குருவாக சிவஸ்ரீ சோ.வாகீஸ்வரக் குருக்கள் கிரியைகளை ஆற்றவுள்ளார். சர்வசாதகம் ஸ்ரீபிரம்மஸ்ரீ ஜெ.மயூரசர்மா வழங்கவுள்ளார். (இ)

# சிரமதானம்

(மல்லாவி)

மன்னார் பிரதேச வைத்தியசாலையில் சமுர்த்தி பிரிவினரால் சிரமதான செயற்பாடு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

மன்னார் சாவற்கட்டு கிராம அலுவலரின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இச்சிரமதானப் பணியில் மன்னார் சமுர்த்தி அலுவலர்கள், வைத்தியசாலை பணியாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இச்சிரமதானப்பணி நேற்றுமுன்தினம் காலை 9 மணிமுதல் பிற்பகல் 2 மணி வரை இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (140)

# முரசின் இன்றைய பலன்



(01.02.2014 சனிக்கிழமை)

விஜய வருஷம் தை மாதம் 19 ஆம் திகதி.
அவிட்ட நட்சத்திரம் பி.ப. 1.43 வரை. பின் சதயம்
துதியை / சித்தாமிர்தம்.
இராகு காலம் 09.36 - 11.06 வரை. சுபநேரம் 03.36 - 05.06 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பிரயாணத்தில் விழிப்புணர்வு அவசியம், நோய் தீர தெய்வதரிசனத்தை மேற்கொள்ளல். |
| ரிஷபம் | நீண்ட நாட்கள் இழுபறியாகக் காணப்பட்ட நிலுவை கைக்கு வரல், மாணவர் வீசாவில் வெளியூர் செல்லல். |
| மிதுனம் | உறவில் மீண்டும் சுமுகநிலை ஏற்படல், பேச்சை நம்பி காரியத்தில் இறங்கியதால் நஷ்டமடைதல். |
| கடகம் | உடல் நலம் தேறியதால் பிரயாணத்தை மேற்கொள்ளல், பிறர் விடயத்தில் தலையிட்டதால் அவமானப்படல். |
| சிம்மம் | காதல் விவகாரத்தால் குடும்பத்தில் கலகம், சக ஊழியர்களுடன் சுமுகமாக பழகுதல். |
| கன்னி | மனதை வருத்திய குழப்பம் நீங்கியதால் மகிழ்ச்சி, கூட்டுத்தொழிலில் நன்மைகிட்டல். |
| துலாம் | ஊழியர்களை உற்சாகப்படுத்தி வேலைகளை முடிக்க முயலுதல், கடனை அடைக்க பூர்விகச் சொத்தை விற்கும் நிலை. |
| விருச்சிகம் | ஏழரைச்சனி நடந்துகொண்டிருப்பதினால் புதிய முயற்சியை கைவிடும் நிலை, இனிமையாக பேசி செயல்களை இலகுவாக நிறைவேற்றல். |
| தனுசு | போலிகளை எண்ணி எச்சரிக்கையாக இருத்தல், எதிர்பாராத விடயமாக காரியச்சித்தி ஏற்படல். |
| மகரம் | பிதாவின் நோய் குணமானது கண்டு ஆனந்தம் அடைதல், பிழவாதக் குணத்தை மாற்றியதால் குடும்பத்தில் சுமுகநிலை ஏற்படல். |
| கும்பம் | சந்திக்க வேண்டும் என்ற நபர் தேடிவந்ததால் ஆச்சரியம், தற்காலிக பணி நிரந்தரமாக்கப்பட்டதால் பயண முயற்சியைக் கைவிடல். |
| மீனம் | வியாபாரத்தில் தவறான யுத்தியை கைக்கொள்ளல், விவாகப் பேச்சுவார்த்தை இருசாராருக்கிடையில் சுமுகமாகதீரும். |

# ஆறுதல் வெற்றியைக்கூட பதிவு செய்யாத இந்திய அணி



வெற்றிக் களிப்பில் நியூசிலாந்து வீரர்கள்

நியூசிலாந்து அணிக்கெதிரான ஒரு நாள் தொடரில் இந்திய அணி ஆறுதலுக்குக்கூட வெற்றியைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் படுதோல்வியடைந்தது. இதன் மூலம் ஐந்து போட்டிகளைக்கொண்ட ஒரு நாள் தொடரை நியூசிலாந்து அணி 4-0 என்ற கணக்கில் கைப்பற்றிக்கொண்டது.

நியூசிலாந்து, இந்திய அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இறுதிப் போட்டி நேற்று நியூசிலாந்தின் வெலிங்டனில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய நியூசிலாந்து அணி, வில்லியம்ஸன், ரெய்லர் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் நியூசிலாந்து அணி 50 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 303 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரெய்லர் 102 ஓட்டங்களைப் பெற்றார். ஒரு நாள் அரங்கில் ரெய்லர் பெற்ற பத்தாவது சதமாக இது அமைந்தது. மற்றும் வில்லியம்ஸன் 88, நிஸாம் 34, மக்கலம் 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அரோன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 303 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இந்திய அணி முதல் நான்கு விக்கெட்டுக்களையும் 78 ஓட்டங்களுக்குள் பறிகொடுத்தது. இந்நிலையில் ஐந்தாவது விக்கெட்டுக்காக இணைந்த கப்டன் டோனி, ஹோலியுடன் நிதானமாக ஆடினார். இந்த ஜோடி 77 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்ற வேளை பிரிக்கப்பட்டது. தொடர்ந்து களமிறங்கிய வீரர்களும் வேகமாக வெளியேற்றப்பட்டனர்.

இந்நிலையில் புவனேஸ்வர் குமார், மொகமட் சமி சிறிது நேரம் தாக்குப் பிடித்தனர். இறுதியில் இந்திய அணி 49.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 216 ஓட்டங்களைப் பெற்று படுதோல்வியடைந்தது. இதில் ஹோலி 78 பந்துகளை எதிர்கொண்டு மூன்று சிக்ஸர், ஏழு பவுண்டரிகள் அடங்கலாக 82, டோனி 47, ராயுடு, புவனேஸ்வர் குமார் ஆகியோர் தலா 20, மொகமட் சமி 14 ஓட்டங்களைப் பெற்றனர். ஏனைய அனைத்து வீரர்களும் ஒற்றை இலக்க ஓட்டத்துடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். பந்து வீச்சில் ஹென்றி நான்கு, மில்ஸ், வில்லியம்ஸன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர் போட்டியின் ஆட்டநாயகனாக ரெய்லர், தொடர் ஆட்டநாயகனாக வில்லியம்ஸன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இதன் மூலம் ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் நியூசிலாந்து அணி 4-0 என்ற கணக்கில் தொடரை வென்றது. மூன்றாவதுபோட்டி சமநிலையில் நிறைவுற்றமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை, இரு அணிகளுக்குமிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் ஆட்டம் எதிர்வரும் ஆறாம் திகதி ஒக்லாண்டில் நடைபெறவுள்ளது.



## அரைச்சத சாதனை

(வெலிங்ரன்)

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடரில் நியூசிலாந்து வீரர் வில்லியம்ஸன் அரைச் சதத்தில் புதிய மைல் கல்லை எட்டியுள்ளார்.

ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் அனைத்து ஆட்டங்களிலும் நியூசிலாந்து வீரர் வில்லியம்ஸன் அரைச் சதம் விளாசியுள்ளார். இதன் மூலம் ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில்அனைத்து ஆட்டங்களிலும் அரைச்சதம் அடித்த 2ஆவது வீரர் என்ற சிறப்பை வில்லியம்ஸன் பெற்றுள்ளார். இதற்கு முன்னர் 2003-04 ஆண்டு நியூசிலாந்துக்கு எதிரான 5 போட்டி தொடரில் பாகிஸ்தான் வீரர் யாசிர் ஹமீட் அனைத்து ஆட்டங்களிலும் அரைச் சதம் அடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மலிங்கவிற்கு அனுமதி

(கொழும்பு)

அவுஸ்ரேலியாவில் நடைபெறும் பிக்போஸ் ருவென்ரி-20 கிரிக்கெட்தொடரில் பங்கேற்க இலங்கை கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்கவுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கட் - தெரிவுக் குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் லசித் மலிங்க குறித்த போட்டித் தொடரில் இருந்து இடைநடுவில் நாட்டுக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

இலங்கையின் விசேட பயிற்சி நடவடிக்கைக்காகவே அவர் இவ்வாறு அழைக்கப்பட்டிருந்தார்.

எனினும் லசித் மலிங்க விளையாடும், மெல்பேர்ன் ஸ்டார்ஸ் கழகம் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் இலங்கை கிரிக்கெட் சபை அவர் இந்தத் தொடரில் பங்கேற்க அனுமதித்துள்ளது.

## ஆனந்த் மூன்றாமிடம்

(ஜுரிச்)

சுவிஸின் ஜுரிச் கிளாசிக் சதுரங்கப் போட்டியில் விஸ்வநாதன் ஆனந்த் மூன்றாமிடத்தைப் பிடித்துள்ளார்.

சுவிட்சர்லாந்தில் ஜுரிச் கிளாசிக் சதுரங்கப் போட்டி நடந்து வருகிறது. 5 சுற்றுகள் கொண்ட இந்தப் போட்டியில் விஸ்வநாதன் ஆனந்த் 2 வெற்றி, 2 தோல்வி, ஒரு சமநிலையுடன் ஆட்டத்தை முடித்து 3ஆவது இடத்தைப் பிடித்தார்.

ஒரு ஆட்டத்தில் விஸ்வநாதன் ஆனந்தும் உலக சம்பியன் கார்ல்சென்னும் மோதினர். இதில் கார்ல்சென் வெற்றி பெற்றார். உலக சம்பியன் பட்டத்தை கார்ல்சென்னிடம் பறிகொடுத்த ஆனந்த் மீண்டும் அவரிடம் தோற்றுள்ளார்.

இந்தப் போட்டியில் கார்ல்சென்னும், ஆர் மெனிய வீரர் லிவான் ஆர்னியனும் 3 புள்ளிகள் பெற்று முதல் இடத்தை பிடித்தனர். விஸ்வநாதன் ஆனந்த் இத்தாலியைச் சேர்ந்த கார்னா, இஸ்ரேலை சேர்ந்த போரிஸ் ஆகியோரை வீழ்த்தினார்.

அமெரிக்க வீரர் நாகமுராவுக்கு எதிரான ஆட்டத்தை சமநிலை செய்தார்.

## முன்னேற்றத்திற்கு வழி

(டுபாய்)



நிதி ரீதியில் பலமான மூன்று கிரிக்கெட் சபைகள் சமர்ப்பித்துள்ள புதிய முன்மொழிவுகள் மேலதிக முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும் என சர்வதேச கிரிக்கெட் பேரவையின் தலைவர் அலன் இஸாக் சுட்டிக்காட்டியுள்ளார்.

2015 ஆம் ஆண்டிற்குப் பின்னரான வர்த்தக உரிமைகளை விற்பனை செய்வது தொடர்பில் தற்போது நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக அவர் கூறியுள்ளார்.

இந்த நடவடிக்கைகளுக்கு உறுப்பு நாடுகளின் பங்களிப்பு உடன்படிக்கை தேவைப்படுவதாக அலன் இஸாக் சுட்டிக்காட்டியுள்ளதாக சர்வதேச தகவல்கள் குறிப்பிடுகின்றன.

டுபாயில் நடைபெற்ற சர்வதேச கிரிக்கெட் பேரவையின் நிறைவேற்று சந்திப்பின் நிறைவில் அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

அனைத்து உறுப்பு நாடுகளும் திருப்தி அடையும் வகையில் இந்த உடன்படிக்கை எட்டப்பட வேண்டும் என தாம் கடந்த ஆண்டு இந்திய, அவுஸ்ரேலிய மற்றும் இங்கிலாந்து கிரிக்கெட் சபைகளை கோரியதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, இக்கோரிக்கையை மேற்கிந்தியத்தீவுகள் அணியின் முன்னாள் கப்டன் லொயிட் உட்பட முன்னணி வீரர்கள் பலர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். சிறிய நாடுகளின் கிரிக்கெட் வளர்ச்சியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

## முறையான உத்தி தவானிடம் இல்லை

(மும்பை)

ஷோட் பிட்ச் பந்துகளை விளையாடுவதில் தவானிடம் முறையான உத்தி இல்லை. அவர் முதலில் எழும்பி வரும் பந்துகளை ஆடாமல் விடுவதில் சிக்கலை எதிர்கொள்கிறார். அதனைஒரு மாதிரியாக தடுத்தாட நினைத்து திணறுகிறார். மேலும் கிரீஸிற்கு வெளியே நிற்கிறார். இதனால் ஷோட்பிட்ச் பந்துகளை அவர் முன்னமேயே ஆட நேர்கிறது. இது அவரது இரண்டாவது தவறு என இந்திய அணியின் முன்னாள் கப்டன் அசாருதீன் தெரிவித்துள்ளார்.

கிரீஸில் உள்ள வெளியை பயன்படுத்தினாால்தான் ஷோட் பிட்ச் பந்துகளை கொஞ்சம் தாமதமாக விளையாட முடியும், மேலும் 145 கிலோ மீற்றர் வேகப்பந்தை சற்று பின்னால் சென்று லேடாக ஆடினால் அது ஓரிரு கிலோ மீற்றார் வேகத்தை இழக்கும். ஆனால் அவர் வெளியே நின்று கொண்டு அத்தனை ஷோட் பிட்ச் பந்துகளையும் ஆடுவதில் திணறுகிறார்.

ஆனால் நிறைய ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களும் தற்போது இல்லை. சேவாக் ஓட்டங்கள் அடிப்பதில்லை, கம்பீர் இவருக்கும் ஷோட்பிட்ச் பந்து பிரச்சினைகள் உள்ளன.



உமேஷ் யாதவ் எங்கே? இசாந்தை விட அவர்தான் சிறந்த-தெரிவு. அவரை ஏன் விளையாடவைக்கவில்லை? சுரேஷ் ரெய்னாவை நீக்கியது சரியே. அவருக்கு நிறைய வாய்ப்புகள் கொடுக்கப் பட்டுவிட்டது. இனி 2015 உலகக் கோப்பைக்கு வேறு இளம் வீரரைத்தான் தயார் படுத்தவேண்டும். அஸ்வின் பந்துகளை பிளைட் செய்வதேயில்லை. இன்னொரு முனையில் ஜடேஜா பிளைட் செய்து பலன்களை அடைகிறார்' எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இன்றைய ஆட்டங்கள்

(மானிப்பாய்)

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்றைய தினம் பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் எஸ். சிவனேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி எஸ். அமிர்தலிங்கம், சிறப்பு விருந்தினராக சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபரும் பழைய மாணவருமான வி. சிறிகாந்தன், கௌரவ விருந்தினராக ஓய்வுபெற்ற புகையிரத நிலைய பிரதம அதிபர் கே. கணேசமூர்த்தி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (63)

(யாழ்ப்பாணம்)

சென். ஜோண்ஸ் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று காலை 8.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் வண. ஞானப்பொன்ராசா தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வில் பல விளையாட்டு நிகழ்வுகள் நடைபெறவுள்ளது.

இப்போட்டி நிகழ்வில் பெற்றோர், பழைய மாணவர்கள், விளையாட்டு நலன் விரும்பிகள், ஆர்வலர்கள், இரசிகர்கள் என அனைவரையும் தவறாது கலந்து கொண்டு வீரர்களை உற்சாகமூட்டுமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர். (எஸ்.பி.)

(நல்லூர்)

நல்லூர் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களிற்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன.

இதன் ஒரு அங்கமாக ஆண் பெண் இருபாலாரிற்குமான கரம் போட்டிகள் கொக்குவில் இந்துக் கல்லூரியில் இன்று காலை 8.30 மணி முதல் நடைபெறவுள்ளது.

நல்லூர் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்திற்குட்பட்ட பதிவு பெற்ற இளைஞர் கழகங்களின் கரம் அணிகளை குறித்த நேரத்தில் தவறாது சமூகம் தருமாறு நல்லூர் பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் இ.யுகராஜ் கேட்டுள்ளார். (48, 93)

(வேலணை)

வேலணைப் பிரதேச விளையாட்டு விழாவின் தடகளப் போட்டிக்கான தெரிவுகள் இன்றும் நாளையும், புங்குடுதீவு சண் ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் பிரதேசத்திற்குட்பட்ட அனைத்து விளையாட்டுக்கழகங்களையும் சேர்ந்த வீர, வீராங்கனைகளைத் தவறாது கலந்து கொள்ளுமாறு வேலணைப் பிரதேச விளையாட்டு உத்தியோகஸ்தர் ஜசி தெரிவித்துள்ளார். (93)

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பிரதேச விளையாட்டு விழாவின் ஓர் அங்கமாக தற்போது பெரு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் ஆண்களுக்கான 10ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டி இன்று காலை 6.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதேவேளை, பெண்களுக்கான எல்லே போட்டி இன்று காலை 8.30 மணிக்கு நெடுந்தீவு சீக்சியாம்பிள்ளை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டிகளில் பங்குகொள்ளவுள்ள அணிகளை குறித்த நேரத்திற்கு வருகை வந்து நேர விரயத்தைத் தவிர்க்குமாறு நெடுந்தீவு பிரதேச விளையாட்டு உத்தியோகஸ்தர் கேட்டுள்ளார். (93)

(அளவெட்டி)

அளவெட்டி கிழக்கு கும்பலை பாரதி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் நடாத்தும் மின்னொளியிலான தாச்சிப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இன்றைய தினம் நடைபெறவுள்ள போட்டியில் புதுமடம் வைகறை அணியை எதிர்த்து தையிட்டி வள்ளுவர் அணி மோதவுள்ளது. (48)

(கரவெட்டி)

கரவெட்டி பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட இளைஞர் அணிகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன.

இதன் முதல் நிகழ்வாக ஆண்களுக்கான எல்லேப் போட்டி இன்று காலை 7.00 மணிக்கு அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நாளை காலை 7.00 மணி முதல் ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டிகள் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ள அதேவேளை, நாளை காலை பெண்களுக்கான எல்லே போட்டி மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.எனவே பதிவு பெற்ற இளைஞர் கழக அணிகள் குறித்த நேரத்தில் வருகை தந்து போட்டிகளில் பங்குபற்றுமாறு கரவெட்டி பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் மனோறாஜ் கேட்டுள்ளார். (48)

# நியூஸ்ரார் பிறிமியர் லீக் ருவென்ரி - 20 அரையிறுதியில் கொக்குவில் கே.சி.சி.சி.

(கொக்குவில்)

நியூஸ்ரார் பிறிமியர் லீக் ருவென்ரி-20 தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு கொக்குவில் கே.சி.சி.சி. அணி தகுதி பெற்றுள்ளது.

நியூஸ்ரார் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் நியூஸ்ரார் பிறிமியர் லீக் ருவென்ரி-20 தொடரின் காலிறுதிப் போட்டி கடந்த வாரம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் கொக்குவில் கே.சி.சி.சி அணியும், யாழ். ஜொனியன்ஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய கொக்குவில் கே.சி.சி.சி அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 154 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சத்தியன் 30, ஜனுதாஸ் 25 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 155 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஜொனியன்ஸ் அணி பிரதீஸன், சாம்பவன் ஆகியோரின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் யாழ். ஜொனியன்ஸ் அணி 13.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 85 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அனைத்து வீரர்களும் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் பிரதீஸன் நான்கு, சாம்பவன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். 69 ஓட்டங்களால் வெற்றிபெற்ற கொக்குவில் கே.சி.சி.சி. அணி அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இதேவேளை, யாழ். பற்றீசியன்ஸ் அணிக்கும் சென்றலைட்ஸ் அணிக்குமிடையில் லீக் ஆட்டம் ஒன்று நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய யாழ். பற்றீசியன்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 112 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நோபேட் 32, அஜித் 18, அலிஸ்ரன் 11 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சௌமிரதன், கோகுலன் பிரியகாந், சாள்ஸ் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 113 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென்றலைட்ஸ் அணி 14 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ஜேம்ஸ் 34, ஸ்டீபன் 23, செல்ரன் 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் லிவிங்ரன் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். (48)

விளையாட்டு செய்திகள்

# இன்று இளவாலை ஹென்றிசில் தலைவர் வெற்றிக் கிண்ண கால்பந்து

(இளவாலை)

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையிலான தலைவர் வெற்றிக் கிண்ணத்திற்கான கால்பந்தாட்டப் போட்டி இன்றைய தினம் பிற்பகல் 3.30 மணிக்கு இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

விலகல் முறையில் நடைபெறவுள்ள இக்கால்பந் தாட்டத் தொடரில் முப்பத்திரண்டு அணிகள் கலந்து கொள்கின்றது.

காக்கைதீவு ஆதவன் அணியை எதிர்த்துபுத்தூர் கலைமதி அணியும், அராலி வடக்கு திருமகள் அணியை எதிர்த்து அராலி வானவில் அணியும் இன்றைய தினம் மோதவுள்ளன. (93)

# மெய்வல்லுநர் போட்டி

(பருத்தித்துறை)

பொலிகண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.


பாடசாலை அதிபர் க. சண்முகராசா தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக பருத்தித்துறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச. ஸ்ரீராமச்சந்திரன், கௌரவ விருந்தினர்களாக ஓய்வுபெற்ற அதிபர் வே. துரைசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (109)

(புலோலி)

புலோலி புற்றளை மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இனறு பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.


வித்தியாலய அதிபர் அ. சிவநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக அண்மையில் ஓய்வுபெற்ற அதிபர் மு. அனஞ்தேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

இப்போட்டி நிகழ்வில் பெற்றோர், பழைய மாணவர்கள், விளையாட்டு ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பாடசாலைச் சமூகத்தினர் கேட்டுள்ளனர். (109)



தொண்டைமானாறு சின்னக்கடற்கரையில் தைப்பொங்கல் தினத்தன்று நடைபெற்ற பட்டம் விடும் போட்டியின்போது போட்டியாளர்கள் ஆயத்தமாக நிற்பதை காணலாம். இப்போட்டியை கரவெட்டி பிரதேச ஈ.பி.டி.பி. இணைப்பாளர் செந்தில்நாதன் ஆரம்பித்து வைத்தமை குறிப்பிடத்தக்கது.
(படம் : விசிந்தன்)

# உறவு உறவானாலும், பறியிலை கை போடாதே!



(நன்றி: வானவில் 36)

இலங்கை - இந்திய (தமிழக) மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகளை இருநாட்டு அரசுகளும் எடுத்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. எந்தவொரு பிரச்சினைக்கும் சண்டையைவிட சமாதான வழியிலான தீர்வே சிறந்தது என்ற வகையில், பேச்சுவார்த்தை மூலம் இருநாட்டு மீனவர் பிரச்சினைக்கும் தீர்வு காண எடுக்கப்படும் முயற்சிகள் வரவேற்கப்பட வேண்டியவையே.

ஆனால் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும் முன்னர், இருநாட்டு மீனவர்களுக்கும் இடையிலான பிரச்சினைகள் எவையென இனங்காணப்படுவது அவசியம். இல்லாவிடின் பேச்சுவார்த்தை குருடன் யானை பார்த்த கதையாக மாறிப்போக வாய்ப்புண்டு.

இலங்கைக் கடற்படையினர் அப்பாவிகளான தமிழக மீனவர்கள் மீது அடிக்கடி தாக்குதல் நடாத்துவதுடன், அவர்களைக் கைதும் செய்கிறார்கள் என்பதுதான், இந்தியத் தரப்பு மீனவர்கள் முன்வைக்கும் பிரச்சினை அல்லது குற்றச்சாட்டாகும். அதற்குத் தீர்வாக அவர்கள் கோருவதெல்லாம், இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி தாம் மீன்பிடிப்பதை இலங்கை அரசாங்கம் தடுக்கக்கூடாது என்பதே. இந்த நோக்கத்தை அடைவதற்காகவே தமிழகத் தரப்பு மீனவர்கள் இந்தப் பேச்சுவார்த்தையை எதிர்நோக்குகிறார்கள்.

மறுபக்கத்தில், இலங்கை மீனவர்களின் - அதாவது இலங்கையின் வட கிழக்கு தமிழ் மீனவர்களின் - எதிர்பார்ப்பு என்னவெனில், தமது கடல் எல்லைக்குள் தமிழக மீனவர்கள் அத்துமீறி நுழைந்து, சர்வதேச ரீதியாகத் தடைசெய்யப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்தி தமது கடல்வளங்களை வாரிச் செல்வதைத் தடுக்க வேண்டும் என்பதே. அதையே இந்தப் பேச்சுவார்த்தையின் பெறுபேறாக இலங்கைத் தமிழ் மீனவர்கள் எதிர்பார்த்து நிற்கிறார்கள்.

இந்தப் பிரச்சினையின் அடிப்படை இதுதான் எனப் பார்க்கையில், ஒருதரப்பில் (தமிழக மீனவர் தரப்பில்) தவறும், மறுதரப்பில் (இலங்கை மீனவர்கள் தரப்பில்) கையறு நிலையும் இருப்பது தெள்ளெனத் தெரியும். எனவே இந்தப் பிரச்சினைக்கான தீர்வும் தெளிவானது.

அதாவது, தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படை 'துன்புறுத்துவது' பற்றிப் பேசுவதற்கு முன்னர், அதற்கான காரணியான இலங்கைக் கடற்பரப்புக்குள் தமிழக மீனவர்களின் அத்துமீறலை எப்படித் தடுத்து நிறுத்துவது என்பதற்கு ஒரு முடிவு எட்டப்பட வேண்டும். அந்த முடிவு எட்டப்பட்டால், இலங்கைக் கடற்படையினரின் தொந்தரவு என்ற பிரச்சினை தமிழக மீனவர்களுக்கு ஏற்பட வாய்ப்பில்லை.


இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் தமிழக அரசுக்கும், அங்குள்ள அரசியல் கட்சிகளுக்கும்தான் முக்கிய பங்குண்டு. ஏனெனில் அவர்களுக்குச் சார்பான மீன்பிடி வள்ளங்களின் பெரும் உரிமையாளர்கள்தான், தமிழக மீனவக் கூலித் தொழிலாளர்களை இலங்கைக் கடற்பரப்புக்குள் ஊடுருவும்படி அனுப்பி வைக்கிறார்கள். எனவே அவர்கள்தான் அந்த அப்பாவி மீனவர்ளைத் துன்பத்தில் இருந்து பாதுகாக்க வேண்டும்.

அத்துடன் இந்த தமிழக அரசியல்வாதிகள் இதயசுத்தி உள்ளவர்கள் என்றால், தமது இரத்த உறவுகள் என்று தாம் வர்ணித்து வரும் இலங்கைத் தமிழ் (மீனவ) மக்களுடைய வாழ்க்கையுடன்தான் தமது மீனவர்கள் விளையாடி வருகிறார்கள் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். எப்படிப் பார்த்தாலும், இந்தப் பிரச்சினைக்கான தீர்வு, தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்பரப்புக்குள் ஊடுருவாம[illegible] பார்த்துக் கொள்வதே.

எனவே இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினை சம்பந்தமான பேச்சுவார்த்தையின் போது, இலங்கை அரச அதிகாரிகளு[illegible] மீனவ் சங்கப் பிரதிநிதிகளு[illegible] எமது மீனவர்களின் வாழ்வாதார உரிமையை விட்டுக் கொடுக்காது உறுதியுடன் செயற்படுவது அவசியமானது.

# கருத்து இல்லையா அல்லது பயமா?

- வா.மணிகண்டன் -



கண்ணில்படும் விஷயங்களுக்கு எல்லாம் கருத்துச் சொல்ல வேண்டுமா என்ன? கருத்துச் சொல்கிறேன் என்று காமெடி செய்யாமல் இருந்தால் அதுவே பெரும் புண்ணியம்தான்.

வெகு சில விஷயங்களோடு மட்டும் எமோஷனலாக அட்டாச் ஆவோம் அல்லவா? அந்த விஷயங்களில் மட்டும் நமது நிலைப்பாட்டைத் தெரிவிக்கலாம். அது கூட அவசியமானது என்று தோன்றவில்லை. இங்கு அத்தனை விஷயங்களிலும் ஆளாளுக்கு ஒரு கருத்து உண்டு. இவன் நல்லவனா, அவன் கெட்டவனா, இது தவறா, அது சரியா என எல்லாவற்றிலும் ஒவ்வொருவருக்கும் முன் தீர்மானங்கள் உண்டு. நாம் சொல்வதால் தங்களின் நிலைப்பாட்டை மாற்றிக் கொள்வார்கள் என நம்புகிறீர்களா? நமது கருத்தை கேட்டுவிட்டு சண்டைக்கு வருவார்கள் அல்லது அமைதியாக போய்விடுவார்கள். இரண்டிலும் சேராத இன்னொரு க்ரூப் உண்டு அவர்கள் அந்தப் பக்கமாகச் சென்று நம்மைப் பார்த்து சிரிப்பார்கள். அதிகபட்சமாக இதில் ஒன்றுதான் நடக்கும்.

நமது கருத்துக் கணைகளால் எந்தவிதத்திலும் யாரையும் மாற்றிவிட முடியாது என நம்புகிறேன். குறைந்தபட்சம் என்னால் முடியாது. அடுத்தவர்களை விடுங்கள்- வீட்டில் அம்மாவின் கருத்தையோ, மனைவியின் கருத்தையோ கூட என்னால் மாற்றிவிட முடிவதில்லை என்பதுதான் உண்மை. அவ்வளவு ஏன்? என் ஐந்து வயது பையனுக்குக் கூட முடிவுகள் இருக்கின்றன. அவன் நினைத்ததை அழுதும் கொஞ்சியும் சாதித்துக் கொள்கிறான்.

அதனால் கருத்துச் சொல்வதெல்லாம் வேண்டாம். வாழ்வில் சந்திக்கும் மனிதர்களை, எதிர்கொள்ளும் அனுபவங்களை அப்படியே பிரதிபலிக்கும் கண்ணாடியாக மட்டும் இருந்தால் போதும் என நினைக்கிறேன். அப்படியே பிரதிபலித்தால் அதில் என்ன சுவாரசியம் இருந்துவிடப் போகிறது? வேண்டுமானால் "கலர் கண்ணாடி" என்று வைத்துக் கொள்வோம். கிடைக்கும் மனிதர்களுக்கும் அனுபவங்களுக்கும் கொஞ்சம் வர்ணம் பூசி- சற்று சுவாரஸியமூட்டி வாசிப்பவர்களிடம் கொடுத்துவிடுவோம். அவ்வளவுதான்.

இதுவே நன்றாகத்தான் இருக்கிறது.

கருத்துச் சொல்வதில் இருந்து "எஸ்கேப்" ஆவதால் எதிரில் இருப்பவர்களை முட்டாள்கள் என்று நினைத்துக் கொள்ள வேண்டியதில்லை; உலகத்தில் எனக்குத் தெரியாத விஷயமே இல்லை என்று மார்தட்டிக் கொள்ள வேண்டியதில்லை; நான் பிடித்த முயலுக்கு மூணேமுக்கால் கால்கள் என்று அடுத்தவர்களோடு சிலிர்த்துக் கொண்டு நிற்க வேண்டியதில்லை. இப்படி சகட்டுமேனிக்கு ப்ளஸ்கள் உண்டு.

நமக்கு நன்றாகத் தெரிந்த விஷயமென்றால்- ஒருவேளை, சொல்லியே தீர வேண்டும் என்ற முனைப்பு இருந்தால் மட்டும் கருத்துச் சொல்ல வாயைத் திறக்கலாம் என நினைக்கிறேன். இந்த விவகாரத்தை வேறொரு கோணத்திலும் பார்க்க முடியும் என்பதற்காக மட்டுமே அதைச் செய்யலாம்.

சரி இப்போது நடைபெறும் புத்தக ராயல்டி பிரச்சினையில் நான் என்ன நினைக்கிறேன்? ஒருவர் செருப்பால் அடிப்பேன் என்கிறார் இன்னொருவர் அடுத்தவருடைய அம்மாவின் கற்பைக் கேள்வி கேட்கிறார். கேட்டால் இலக்கியவாதிகள் என்பார்கள். இவர்களுக்கு இடையில் தலையைச் செருகினால் நம் வீட்டுப் பெண்களின் கற்புக்கு பதில் சொல்ல வேண்டியிருக்கும் அல்லது நாமும் செருப்பைத் தூக்க வேண்டியிருக்கும். அமைதியாக இருந்துவிட்டால் நம் தலையா போகப் போகிறது? எப்படியோ போகட்டும்.

இன்னொரு விஷயம்- தேவயானி கோபர்கடே. இந்த விஷயம் பற்றி எனக்கு முழுமையான புரிதல் இல்லை. பக்காவான அரசியல் என்று நம்பிக் கொண்டிருந்தேன். நம்பியது சரிதான் போலிருக்கிறது. பாருங்கள் அவரது அப்பா தேர்தலில் நிற்கப் போகிறாராம். எந்தக் கட்சி என்று இப்போதைக்குச் சொல்ல மாட்டேன் என ட்விஸ்ட் வைக்கிறார். எந்தக் கட்சி என்று நம்மால் யூகிக்க முடியாதா என்ன?

இது போன்ற விஷயங்களில் கருத்துச் சொல்லி எதை நிலைநாட்டப் போகிறோம்?

# பொம்மைகள்!

ரோமானியர்கள் காலத்தில் மரத்தாலான பெண் பொம்மைகள் முதன்முதலாகத் தயாரிக்கப்பட்டன. எகிப்தியர் காலத்தில் மரத்தாலான ஆண் பொம்மைகள் மட்டுமே தயாரிக்கப்பட்டன. ரோமானியர்கள் தயாரித்த பெண் பொம்மைகள் கை, கால்களை அசைக்கக்கூடிய நிலையில் தயாரிக்கப்பட்டன.

பதினான்காம் நூற்றாண்டின் இறுதி வரை இந்த மாதிரி மரப் பொம்மைகளைச் செய்து பல நாடுகளுக்கு அனுப்பிப் பணம் சம்பாதித்தது பிரான்ஸ் நாடு. இங்கிருந்துதான் பல விதமான வடிவங்களில் மனித, மிருக பொம்மைகள் மற்ற நாடுகளுக்குப் புறப்பட்டன. பதினெட்டாம் நூற்றாண்டில் பிரான்ஸ் நாட்டைப் பார்த்து இங்கிலாந்தும் பொம்மைத் தயாரிப்பில் ஈடுபட்டு வெற்றி கண்டது.

சுவிட்ஸர்லாந்தும், ஸ்காண்டிநேவியாவும் மரத்தாலான பொம்மைகளுக்கும், பீங்கான், மண் மற்றும் பட்டுத்துணி பொம்மைகளுக்கும் புகழ்பெற்று விளங்குகின்றன.

இப்போது இந்த பொம்மைகள் விஷயத்திலும் உலகின் பரந்த சந்தையைக் கைப்பற்றியிருப்பது சீனா என்பதைச் சொல்லவேண்டியதில்லை.



# இவர்கள்...

▌ உலகப் புகழ்பெற்ற இசைமேதை பீதோவன் தன்னுடைய மூளை சுறுசுறுப்பாக இருக்க ஒரு வழிமுறையைத் தொடர்ந்து பின்பற்றி வந்தார். அது என்ன தெரியுமா? அவர் வேலை செய்யும் நேரத்தில் ஐஸ்கட்டிகள் கலந்த குளிர்ந்த தண்ணீரை டம்ளர் டம்ளராகத் தம் தலையில் ஊற்றிக் கொள்வாராம். மூளையைச் சுறுசுறுப்பாக வைத்திருக்கும் என்பதற்கான அறிவியல் சான்று உண்டா? தெரியவில்லை. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பழக்கம்.

▌ நெப்போலியன் தோல்வியுற்றதும் பிரிட்டிஷ் அரசு, நெப்போலியனை இனி யாரும் பேரரசர் என்று அழைக்கக் கூடாது. வெறும் "ஜெனரல்" என்று அழைத்தால் போதும் என உத்தரவிட்டதாம். அதற்கு நெப்போலியன், "எப்படி அழைத்தாலும் நான் நானாகவே இருப்பேன்" என்றாராம் குலையாத தன்னம்பிக்கையுடன்!

▌ தென் அமெரிக்காவில் உள்ள உருகுவே நாட்டின் ஜனாதிபதி ஜோஸ் மியுஜிகா உலகிலேயே ஏழ்மையான அதிபர் எனப் பெயரெடுத்தவர் ஆவார். விவசாயக் குடும்பத்தில் பிறந்த அவர் தனது மாத சம்பளத்தில் 90 சதவீதத்தை ஏழை மக்களுக்குத் தானமாக வழங்கி வருகிறார். அரண்மனையில் வசிக்காமல் விவசாயப் பண்ணை வீட்டிலேயே வசித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

▌ இங்கிலாந்தில் வசிக்கும் 71 வயதான ஜோன் மெக்காபெர்டி என்பவர் மாற்று இருதய அறுவைச் சிகிச்சை செய்த பிறகு 31 ஆண்டுகள் சுகமாக இருக்கிறார். மாற்று இருதயம் பொருத்திய பின்னர் மருத்துவமனையில் உள்நோயாளியாக மட்டும் 5 ஆண்டுகள் இருந்துள்ளார். இதன் காரணமாக கின்னஸ் சாதனை புத்தகத்தில் அவரது பெயர் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.




▌ சவுதி இளவரசர் (பட்டத்து இளவரசர்) சல்மானுக்கு தனது நாட்டு பிரஜை ஒருவரைக் கொலை செய்த குற்றத்திற்காக மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இஸ்லாமிய சட்டம் சகாரியா பாகுபாடு இல்லாமல் அனைத்துத் தரப்பினருக்கும் பொருந்தும் என அந்நாட்டு உள்துறை அமைச்சர் கூறியுள்ளார். மரண தண்டனைக்குப் பதிலாக குற்றவாளியிடமிருந்து ரத்ததானம் பெற்றிடுமாறு கொலை செய்யப்பட்டவரின் உறவினர்கள் அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

▌ தமிழில் வெளிவந்த கலைக்களஞ்சியம் (என்சைக்ளோபீடியா) புத்தகத்தை எழுதியவர் சிங்காரவேலு முதலியார். 1050 பக்கங்களைக் கொண்ட இதனை வெளியிட யாரும் முன்வரவில்லை - பத்திரிகைகள்கூட. "தொடர்கதையென்றால்தான் வெளியிடுவோம்" என்று கூறி மறுத்துவிட்டனவாம்! பிறகு மதுரைத் தமிழ்ச்சங்கம் மூலம் அச்சடித்து வெளியிடப்பட்டது.

▌ கி.வா.ஜ. விற்குத் தரப்பட்ட பால் சூடாக இருந்ததாம். அதை ஊதிக் குடிக்க முற்பட்டபோது, நண்பர், "கொடுங்க - நான் ஆற்றித் தருகிறேன்" என்றார். உடனே கி.வா.ஜ. சற்றும் யோசிக்காமல், "என்னை என்ன "ஆற்றாதவன்" என்று நினைத்துவிட்டீர்களா" என்றாராம்!

▌ இந்தியாவின் இரும்பு மனிதர் என்று அழைக்கப்பட்டவர் - சர்தார் வல்லபாய் பட்டேல். உலக அளவில் இரும்பு மனிதர் என்று அழைக்கப்பட்டவர் - பிஸ்மார்க் (ஜெர்மனி).

# குற்றமும் தண்டனையும்

அந்தப் பையன் வேலை பயிலும் ஊழியனாய் அவன் தந்தையால் புகையிலை ஆலை ஒன்றில் விடப்பட்டு, ஐந்து ஆண்டுகளாக அங்கே வேலை செய்துவந்தான். முதலாளிக்கும் தொழிலாளர்களுக்குமிடையே இந்த ஆண்டில் நடைபெற்ற தகராறுக்குப் பிற்பாடு ஆலை முதலாளியால் இவன் வேலையிலிருந்து நீக்கப்பட்டான். வேலையை இழந்தபின் இவன் வேலை ஏதுமின்றி நகரில் சுற்றினான். கையிலிருந்தவற்றை எல்லாம் குடித்துத் தீர்த்தான்.

பிறகு தன்னைப் போலவே வேலையில்லாத வேறொரு ஆளை ஒரு மதுவிடுதியில் சந்தித்தான். பையனுக்கு முன்னதாகவே வேலை இழந்துவிட்ட அந்த ஆள் இரும்புத் தொழிலில் இருந்தவர், சரியான குடிகாரர். குடிபோதையில் இவர்கள் இருவரும் ஓர் இரவு ஒரு கொட்டகையின் பூட்டை உடைத்து உள்ளே புகுந்து முதலில் கையில் கிடைத்ததை எடுத்துக்கொண்டு வெளியே வந்தனர். பிடிபட்டதும் இருவரும் தம் குற்றத்தை ஒப்புக்கொண்டனர். சிறையில் அடைக்கப்பட்டனர். விசாரணை ஆரம்பமாகு முன்பே இரும்புத் தொழிலாளி சிறையில் இறந்துவிட்டார். இப்போது இந்தப் பையன் ஆபத்தான ஆளாக நீதிமன்ற விசாரணைக்குக் கொண்டுவரப்பட்டான், இவனிடமிருந்து சமுதாயத்தைப் பாதுகாக்க வேண்டுமென்று கூறப்பட்டது.

தம்மெதிரே நடைபெற்றவை யாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த நெஹ்லூதவ் நினைத்தார், "இவர்கள் ஆபத்தானவர்களாம், ஆனால் நாம் எல்லாரும் ஆபத்தானவர்கள் இல்லையா?.. நெறிகெட்ட கயவனும் கழிசடையும் நம்பிக்கைத் துரோகம் புரியும் வஞ்சகனுமாவேன் நான். ஏனைய எல்லாரும் நான் எப்படிப்பட்டவன் என்பது அறிந்தும் என்னை வெறுத்து ஒதுக்காமல் மதித்துப் போற்றுகிறவர்கள். சரி, இந்தக் கூடத்தில் கூடியிருப்போர் யாவரிலும் இந்தப் பையன் சமுதாயத்துக்கு மிகவும் ஆபத்து உண்டாக்குகிறவனாகவேதான் இருக்கட்டுமே, இவன் பிடிபட்டதும் நல்லறிவின் அடிப்படையில் இவனுக்கு நாம் செய்ய வேண்டியது என்ன?

"இவன் சர்வசாதாரணமான சிறுவனே அன்றி, பயங்கரக் கேடு புரிகிறவனல்ல என்பது தெரிகிறது - எல்லாரும் இதைக் காண்கின்றனர். ஒருவன் இம்மாதிரியான ஒரு நிலையை வந்தடைகிறான் என்றால், இந்த மாதிரி ஆட்களை உருவாக்குகின்ற நிலைமைகளில் இவன் அகப்பட்டுக் கொண்டதுதான் அதற்குக் காரணம் என்பதும் தெரிகிறது. ஆகவே இவனைப் போன்ற பையன்கள் இப்படித் தவறான பாதையில் செல்வதைத் தடுக்க வேண்டுமானால், பரிதாபத்துக்குரிய இவர்களை உருவாக்கும் நிலைமைகளை ஒழித்துக்கட்ட வேண்டுமென்பது தெளிவு.

"ஆனால் நாம் செய்வது என்ன? நம் கையில் அகப்பட்டுவிடும் இந்த ஒரு பையனை நாம் பாய்ந்து பிடித்துக் கொள்கிறோம். இவனைப் போன்ற ஆயிரக்கணக்கானவர்கள் பிடிபடாமல் இருந்து வருவது நன்றாகத் தெரிந்திருந்தும் இவனை இழுத்துச்சென்று சிறையில் அடைக்கிறோம்.

"இம்மாதிரியான ஆட்களை உருவாக்கிடும் நிலைமைகளை ஒழித்துக்கட்ட நாம் ஏதும் செய்யாதிருப்பதோடு, இந்த நிலைமைகளை உற்பத்தி செய்து தரும் நிலையங்களுக்கு ஊக்கமும் அளிக்கிறோம். இரண்டொன்று அல்ல, பல இலட்சக் கணக்கில் இத்தகையோரை நாம் வளர்த்து ஆளாக்குகிறோம். பிறகு இவர்களில் ஒருவர் பிடிபட்டு விட்டதும் இதை மிகப் பெரிய சாதனையாகக் கருதுகிறோம்; இவரை மொஸ்கோவிலிருந்து கடத்தி இர்கூத்ஸ்க் மாநிலத்துக்கு அனுப்பியதும் நம்மை நாம் பாதுகாத்துக் கொண்டு விட்டதாகவும், இதற்கு மேல் நாம் செய்ய வேண்டியது ஏதும் இல்லாததாகவும் நாம் கற்பனை செய்துகொள்கிறோம்."

வழக்கறிஞர்களும் தலைமை நீதிபதியும் நீட்டியிழுத்துப் பேசிய பேச்சுக்களைக் கேட்டுக்கொண்டும், சுயதிருப்தியை வெளிப்படுத்திய அவர்களது அங்க அசைவுகளைக் கவனித்துக் கொண்டுமிருந்த நெஹ்லூதவ் இவ்வாறு அளவு கடந்த உத்வேகத்தோடும் சித்தத் தெளிவோடும் யோசித்தார். அந்த மாபெரும் கூடத்தையும் உருவப் படங்களையும் விளக்குகளையும் ஆசனங்களையும் அலங்கார உடுப்புகளையும் உற்று நோக்கிய நெஹ்லூதவ், "எத்தனை பெரிய அளவில், எவ்வளவு கடுமையான முயற்சி செலவிடப்பட்டு நடத்தப்படுகிறது இந்தக் கபட நாடகம்?" என்று தொடர்ந்து யோசித்தார்.

அந்தப் பிரம்மாண்டக் கட்டடத்தின் பெரும் பரிமாணத்தையும், அதனிலும் பிரம்மாண்டமான அந்த நீதிபரிபாலன அமைப்பையும், அதைச் சேர்ந்த அதிகாரிகளும் எழுத்தாழர்களும் காவலாட்களும் சிப்பந்திகளும் இங்கே மட்டுமின்றி அனைத்து ருஷ்யாவிலும் விரவிப் பரந்து பெருஞ் சேனையாய் அமைந்து யாருக்கும் எப்பயனுமின்றி இப்படி நாடகமாடுவதற்காகச் சம்பளங்கள் பெறுவதையும் அவர் நினைத்துப் பார்த்தார். "இந்தக் கூத்துக்காக இத்தனை பெரிய அளவில் விரயமாக்கப்படும் இம்முயற்சியில், திக்கற்றவர்களாக வதைபடும் இந்த ஆட்களுக்கு உதவுவதற்காக நூற்றில் ஒரு பங்கையேனும் செலவிட்டால் என்னவாம்? நமது அமைதிக்காகவும் வசதிக்காகவும் தேவையான அத்தனை வேலைக் கரங்களாகவும் உழைக்கும் உடலங்களாகவும் மட்டும்தானே இந்த ஆட்களைத் தற்போது நாம் பாவித்து வருகிறோம்?"

அந்தப் பையனின் நலங் கெட்டுக் கிலி கொண்ட முகத்தை நோக்கியபடி நெஹ்லூதவ் சிந்தனை செய்தார்: "இல்லாமையால் நிர்ப்பந்திக்கப்பட்டு, கிராமத்திலிருந்து நகரத்துக்கு அவன் அனுப்பிவைக்கப்பட்ட போது யாராவது அவன் மீது பரிதாபங் கொண்டு சற்றே உதவியிருந்தால் போதுமே; அல்லது பிற்பாடு' அவன் ஆலையில் பன்னிரண்டு மணிநேர வேலை முடிந்தபின், நகரத்தில் முதிய கூட்டாளிகளால் தூண்டப்பட்டு மதுவிடுதிக்குப் போக ஆரம்பித்த போதாவது யாராவது அவனை அணுகி, "வேண்டாம்! இது நல்லதல்ல!" என்று சொல்லியிருந்தால் போதுமே - அவன் போயிருக்க மாட்டானே, கெட்டழிந்திருக்க மாட்டானே, தீச்செயல் புரிந்திருக்க மாட்டானே.

"இல்லை, அப்படி ஒன்றும் நடைபெறவில்லை; வேலை பயிலுவோனாய் நகரத்திலே அவன் மிருக வாழ்க்கை வாழ்ந்து வந்தானே, முடிகளில் ஈரும் பேனும் மண்டிவிடாமல் ஒட்ட வெட்டப்பட்ட தலையுடன் கடைகளுக்கு ஓடி மேலாட்களுக்கு வேண்டியதை வாங்கி வந்தானே, அந்த ஆண்டுகளில் எல்லாம் அவன் மீது கருணை கொள்வார் யாருமில்லை. மாறாக, எவன் ஏய்த்துப் பிழைக்கிறானோ, எவன் குடிகாரனாய், போக்கிரியாய், காமுகனாய் இருக்கிறானோ, அவனே சிறப்புக்குரியவன் என்பதாகவே நகரத்துக்கு வந்தது முதலாய் அவன் தனது மேலாட்களும் சக ஊழியர்களும் பேசக் கேட்டு வந்தான்.

"பிணியுற்று, ஆரோக்கியத்துக்கு ஒவ்வாத உழைப்பாலும் குடியாலும் ஒழுக்கக் கேடுகளாலும் உடல்நலம் இழந்து, கனவில் சஞ்சரிப்பவனைப் போல் ஒன்றும் புரியாதவனாக நகரத்திலே அவன் திரிந்துகொண்டிருந்தபோது, ஏதோ ஒரு கொட்டகைக்குள் புகுந்து யாருக்கும் தேவைப்படாத சில பாய்களை எடுத்து விடுகிறான் - உடனே, வசதி படைத்தவர்களான, கல்வியறிவுடையவர்களான நாம் என்ன செய்கிறோம்? இந்தப் பையன் இப்படி இந்த அவல நிலைக்கு வரக் காரணமாய் இருந்தவற்றை ஒழிப்பதற்கு என்ன வழி என்றா ஆலோசிக்கிறோம்? இல்லை, அதற்குப் பதில் இந்தப் பையனுக்குத் தண்டனை அளித்து விவகாரங்களைச் சரிசெய்து விடலாமென நினைக்கிறோம்!

"ஐயோ, பயங்கரமாய் அல்லவா இருக்கிறது! இங்கே எதை அதிகம் என்பது, தெரியவில்லையே - கொடுமையையா? மடமையையா? இரண்டுமே அவற்றின் உச்சநிலைக்குச் சென்று விட்டதாக அல்லவா தெரிகிறது?"

நெஹ்லூதவ் தமக்கெதிரே நடைபெற்றதைக் கவனியாதவராய் இவ்வாறெல்லாம் சிந்தனை செய்தார். இவை யாவும் இப்பொழுது அவருக்குத் தெளிவாகவே புலப்பட்டன. அவரைக் கதிகலங்க வைத்தன. இதுகாறும் தாம் இவற்றைக் காணமுடியாமற் போனது எப்படி? இப்போதும் ஏனையோர் இவற்றைக் காண முடியாதோராய் இருப்பது எப்படி? என்று நினைத்தபோது அவருக்கு ஆச்சரியமாய் இருந்தது.

(டால்ஸ்டாயின் 'புத்துயிர்ப்பு' நாவலில்)



## மாற்றம் வேண்டும் இது மக்கள் முரசு

# வீட்டு வேலைத்திணிப்புக்களால் திண்டாடும் பெற்றோர்கள்

யாழ். பிரபல ஆரம்பப் பாடசாலைகள் உட்பட பல்வேறு பாடசாலைகளில் முறைமைசார் காலத்திட்டத்திற்கு மாறாக சில செயற்பாடுகள் இடம்பெற்று வருவதாக பலமாக குற்றம் சாட்டப்பட்டு வருகின்றன. பிள்ளைக்கே தெரியாத கைவேலைச் செயற்பாடுகள் பிள்ளையின் பெயரில் காட்சிப்படுத்தப்படுகின்றது. தர உள்வீட்டு நிதிகள் தாராளமாக இருக்க தள்ளாடும் பெற்றோரின் பொருளாதார நிதிகள் பலவாறு பாதிக்கப்படுகின்றன.

இதற்குத் தீர்வுகாண வேண்டியது இன்றைய கட்டாய தேவையாகும். தரம் 5 வரை மாணவர்களைக் கற்பித்து எடுப்பதற்குள் பெற்றோர் வெந்து நொந்து போகின்றனர். வீட்டு வேலை என்பது பாடசாலையில் செய்து தேர்ச்சி பெற்ற ஓர் செயற்பாட்டினை மீண்டும் மாணவர்கள் செய்து பார்ப்பது (மீள்வலியுறுத்தலிற்காக) ஆனால் மாணவர்களிற்கே எப்படிச் செய்வது என்று தெரியாத ஓர் செயற்பாட்டினைக் கொடுத்து அதனைப் பெற்றோர்கள் மூலம் செய்விக்கின்ற ஓர் முறை தற்போது உருவெடுத்துள்ளது. இதனால் யாருக்கு என்ன பயன்? என்பதுதான் எவர்க்கும் புரியவில்லை.

வீட்டு வேலைக்காக கொடுக்கும் விடயங்கள் எதுவும் பிள்ளைக்குத் தெரியாத விடயமாக இருக்கக்கூடாது. அத்துடன் செய்து வரும் செயற்பாடுகள் பிள்ளைகளால் செய்யப்பட்டது என்பதையும் ஆசிரியர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

இது எதுவும் தற்போது பாடசாலைகளில் இடம் பெறுவதில்லை. பெற்றோர்களால் செய்த அழகான செயற்பாடுகள் காட்சிப்படுத்தப்பட்ட சம்பவங்களும், சுயமாக முயன்று பிள்ளைகள் செய்த செயற்பாடுகள் புறக்கணிக்கப்பட்ட சம்பவங்களும் பாடசாலைகளில் இடம்பெற்றுள்ளன.

யாரிடமாவது கொடுத்து செய்து வரும்படி ஆசிரியர்கள் வலியுறுத்திய சம்பவங்களெல்லாம் இடம்பெற்றுள்ளது. வகுப்பறையில் பலதையும் பத்தையும் காட்சிப்படுத்தி அதிபர் மற்றும் அதிகாரிகளிடத்தில் நற்பெயரை சம்பாதிப்பதே ஆசிரியர்களின் குறிக்கோளாக உள்ளதே தவிர, பிள்ளைகளின் திறன் விருத்தி தொடர்பாக எவரும் சிந்திப்பதில்லை இது ஒருபுறமிருக்க மாணவர்களின் செயற்பாடுகளுக்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்ய ஏராளமான நிதி வருடாந்தம் பாடசாலைகளுக்கு ஒதுக்கப்பட்டு வருகின்றன.

இவை பாடசாலைகளில் வேற்றுத் தேவைகளுக்கு பயன்படுத்திவிட்டு பெற்றோர்களிடம் பொருட்களை கோரி நிற்பது எந்த வகையிலும் ஏற்புடையதல்ல. தற்கால பொருளாதார சூழலில் பாரிய நெருக்கடியான பணப்புழக்கம் தலைதூக்கியுள்ளது. இந்நிலையில்

> வீட்டு வேலை என்பது பாடசாலையில் செய்து தேர்ச்சி பெற்ற ஓர் செயற்பாட்டினை மீண்டும் மாணவர்கள் செய்து பார்ப்பது (மீள்வலியுறுத்தலிற்காக) ஆனால் மாணவர்களிற்கே எப்படிச் செய்வது என்று தெரியாத ஓர் செயற்பாட்டினைக் கொடுத்து அதனைப் பெற்றோர்கள் மூலம் செய்விக்கின்ற ஓர் முறை தற்போது உருவெடுத்துள்ளது. இதனால் யாருக்கு என்ன பயன்? என்பதுதான் எவர்க்கும் புரியவில்லை.

ஆசிரியர்களின் இவ்வாறான செயற்பாடுகளுக்கு கல்வி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பாடவிதான இணை பாடவிதான செயற்பாடு ஓர் பிள்ளையின் திறன் விருத்தியுடன் சம்பந்தப்பட்டது. இது சீராக இடம்பெறவில்லையாயின் எதிர்கால சவால்களில் அப்பிள்ளை இடர்பட ஆரம்பிக்கும்.


பாடசாலைகள் போலி கௌரவங்களுக்காக செயற்படுவதை உடன்நிறுத்த வேண்டும். தந்தைக்கும், தாய்க்கும் கைவேலை பயிற்றுவிக்கும் செயற்பாடுகளையே குடாநாட்டுப் பாடசாலைகள் மேற்கொண்டு வருகின்றன. பிள்ளைக்கான பயிற்சி இங்கு இடம்பெறுவதில்லை. எதைச் சொன்னாலும் பெற்றோர்கள் செய்வார்கள் எனும் நிலையில் ஆசிரியர்கள் தொழிற்படக்கூடாது.

தனிப்பட்ட ரீதியில் பிள்ளை பாதிக்கப்படக்கூடாது என்பதற்காகவே பெற்றோர்கள் பணிந்து போகின்றார்கள். இதை வைத்து பிரபல பாடசாலை ஆசிரியர்கள் பெற்றோரை வருத்துவது ஏற்புடையதல்ல. பெற்றோருக்கு நாலு விடயங்கள் தெரிந்தும்கூட ஆசிரியர்களுக்கு மண்டியிடுகின்றனர் ஏன்? பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக இதைச் சாதகமாக ஆசிரியர்கள் பயன்படுத்தக்கூடாது இன்றைய பொருளாதார சூழலைக் கருத்திற்கொண்டு, மாணவரின் திறன்விருத்தியை மேம்படுத்தும் ஆக்கபூர்வ செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். இதுவே ஆரம்ப கல்வி நிலை வெற்றியை எமது சந்ததிக்கு ஏற்படுத்தித் தரும்.

- வெண்கட்டியன்



## புதிர்ப் போட்டி 72



**அதிக புள்ளிகளைப் பெற்ற திறமைசாலிகள் மூவருக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன. உங்களுக்கான பரிசில்கள் விபரம் பத்திரிகையில் வெளியாகும். மூன்று மாத இறுதியில் தினமுரசு காரியாலயத்தில் வைத்து வழங்கிக் கௌரவிக்கப்படும்.**

*புதிர்ப்போட்டி 72 இற்குரிய விடைகள் அனுப்பவேண்டிய இறுதித் திகதி 10.02.2014*

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | ■ | 3 | 4 | |
| | ■ | | ■ | 5 | | | ■ |
| 6 | | | 7 | | ■ | 8 | 9 |
| | ■ | 10 | | ■ | 11 | | |
| ■ | 12 | | | | ■ | ■ | |
| 13 | | ■ | | ■ | 14 | 16 | |
| 16 | | 17 | ■ | 18 | | | |
| ■ | 19 | | | | ■ | | ■ |

**மேலிருந்து கீழ்**

1) உலோகங்களில் ஒருவகை
2) முதிர்ச்சி
3) ஒருவகை அலங்காரப் பின்னற்றுணி
4) செய்கை
5) நாணல்புல்
7) கல்விமான், வித்துவான்
9) எமது அரசாங்கத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட வறுமையை ஒழித்தலுக்கான ஒரு எழுச்சித்திட்டம்
12) சத்தியம், தர்மம், சாந்தி இவையெல்லாம் ஒன்றிணைந்து செயற்படும்போது உண்டாகும் உயர் பண்பு.
13) பெருமை மிகுதி
14) தாகப்படு
15) வேறுபாடு, கலவரம்.
17) வேறுபடுத்து என்னும் ஏவல்.
18) ஒருவகை எண்ணை தயாரிக்கும் மரம்

**இடமிருந்து வலம்**

1) கடிதம்,காகிதம்
3) 1957 இல் கோர்டன் கூல்ட் என்பவரால் இது கண்டுபிடிக்கப்பட்டது.
5) பச்சை நிறத்தை இப்படி அழைக்கலாம்.
6) இருமல் நோய் ஒன்று
8) தளப்பிரமாணத்தில் ஒன்று
10) சேறு என்று அழைக்கலாம்.
11) வித்தை : ஞானம்
12) அன்னம் : உரிமைப்பங்கு
13) பூமி : பசு
16) நீர் இறைக்கும் சூத்திரம்
18) சென்றதையும் வருவதையும் நிகழ்வதாகச் சொல்லுதல், ஓர் அலங்காரம்.
19) உழவெருது, கலப்பை

**அனுப்பவேண்டிய முகவரி**

*புதிர்ப்போட்டி இல
தினமுரசு
இல. 373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.*

**சரியான விடை எழுதி பாராட்டுப்பெறுபவர்கள் விபரம்**

பெயர்:- சி.தேனுஜான்
பாடசாலை :- யா/ பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம்.

பெயர்:- ம.யோதீஸ்வரன்
பாடசாலை :- யா/ நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்.

பெயர்:- பி.திவ்யா
பாடசாலை :- யா/ இந்து மத்திய மகா வித்தியாலயம்.

பெயர்:- க.தாட்சாயினி
பாடசாலை :- யா/ பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை.

**மாணவர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்! புதிர்ப்போட்டி விடைகளுடன் உங்களது போட்டோப் பிரதி ஒன்றையும் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.**

## விண்ணப்பதாரரின் விபரம்

மாணவர் முழுப்பெயர்:- ------------------------------------------------

பாடசாலையின் பெயர் :- ------------------------------------------------

தரம் :- ------------------------------------------------

தொலைபேசி இல :- ------------------------------------------------

முகவரி :- ------------------------------------------------

# ஊர்காவற்றுறை பிரதேச குறைகேள் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பிரதேச அபிவிருத்திக் கலந்துரையாடலும் பொதுமக்கள் குறைகேள் நிகழ்வும் ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தலைமையில் ஊர்காவற்றுறை பிரதேசசபை மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இக்கலந்துரையாடலின் போது ஊர்காவற்றுறை, எழுவைதீவு, அனலைதீவு. புளியந்தீவு ஆகிய பிரதேசங்களின் அபிவிருத்திகள் தொடர்பாக ஆராயப்பட்டதுடன் பிரதேச வாழ் மக்களின் குறைகளை நாடாளுமன்ற உறுப்பினர் கேட்டறிந்து கொண்டார்.

இந் நிகழ்வில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் மக்களுக்கு அரசியல்வாதிகளால் தேர்தல் காலங்களில் எவ்வாறான மூளைச் சலவை செய்யப்பட்டு அவர்கள் ஏமாற்றப்பட்டாலும் மக்களுக்குரிய அனைத்து விதமான தேவைகளையும் நிறைவேற்ற வேண்டியவர்களாக நாம் உள்ளோம். இதனடிப்படையில் எவ்வாறான பாகுபாடுகளோ பேதங்களோ இல்லாமல் அனைத்து தீவக பிரதேசங்களும் துரிதகதியில் அபிவிருத்தி செய்யப்படும் எனவும் தெரிவித்ததுடன் மக்களிடமிருந்து அபிவிருத்தித் திட்டத்துக்குரிய முன்மொழிவுகளையும் பெற்றுக்கொண்டார்.

இக்கலந்துரையாடலின் போது ஊர் காவற்றுறை பிரதேசசபைத் தவிசாளர் ஜெயகாந் தன், உபதவிசாளர், ஊர்காவற்றுறை பிரதேச பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இந்திய வீட்டுத் திட்டத்தில் குறைபாடு இருந்தால் முறையிடலாம்



(வவுனியா)

இந்திய வீட்டுத்திட்டத்தில் முறைகேடுகள் அல்லது குறைபாடுகள் இருந்தால் யாழ். இந்தியத் துணைத்தூதரகத்தில் முறையிடலாம் என்று இந்திய வெளிவிவகார அமைச்சின் விசேட செயலாளர் சுஜாதா மேத்தா தெரிவித்தார்.

வவுனியாவில் மேற்கொள்ளப்படுகின்ற இந்திய வீட்டுத் திட்டங்களை நேற்றுமுன்தினம் பார்வையிட்ட பின்னர், வீட்டுத் திட்டப் பயனாளிகளுடன் நடைபெற்ற சந்திப்பில் அவர் இவ்வாறு கூறினார்.

இந்தச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வீடொன்று இருந்தால் அது வாழ்க்கையில் திருப்புமுனையாக அமையும் என்பது எமது ஆழ்ந்த நம்பிக்கை. இந்த வீட்டுத்திட்டம் உங்களின் வாழ்க்கையில் மிகவும் சௌகரியமாக அமையும் என நம்புகின்றோம்.

வாழ்க்கையில் திருப்புமுனையாகவும் நல்ல எதிர்காலத்தை நோக்கிச் செல்லவும் இந்திய வீட்டுத்திட்டம் வாய்ப்பாக இருக்கும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.

இந்த நிலையில், வீட்டுத்திட்டத்தில் ஏதாவது பிரச்சினைகள் இருக்குமாயின் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்திலோ அல்லது தேசிய வீடமைப்பு அதிகாரசபையிலோ முறையிட முடியும். இந்த நிலையில், நாம் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்கு வசதியாக இருக்கும்.

உங்கள் அனைவரதும் ஒத்துழைப்பில் இனிமேல் நாம் செய்யும் வீட்டுத்திட்டத்தை எந்தவித பிரச்சினைகளும் இல்லாது அமைப்பதற்கு வசதியாக இருக்கும் என்றார்.

இதேவேளை இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியின் கீழ் கிளிநொச்சியில் நிர்மாணிக்கப்பட்டுவரும் வீட்டுத்திட்டத்தின் ஒரு தொகுதி வீடுகள் நேற்றுமுன தினம் மக்களிடம் கையளிக்கப்பட்டன.

இந்திய வெளிவிவகார அமைச்சின் விசேட செயலாளர் சுஜாதா மேத்தா தலைமையிலான குழுவில், யாழ். இந்தியத் துணைத் தூதுவர் வி.மகாலிங்கமும் இணைந்திருந்தார்.

கிளிநொச்சி மாவட்டத்திற்கு 8,500 வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், அதில் 1,700 வீடுகள் இதுவரை நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகவும் இந்திய துணைத் தூதுவர் வி.மகாலிங்கம் தெரிவித்துள் ளார்.

# தமிழ் மாணவர்களின் நாடக ஆற்றுகை

(யாழ்ப்பாணம்)

கலாசார மற்றும் கலைகள் அலுவல்கள் அமைச்சின் அனுசரணையில் கொழும்பு ரவர் மண்டபத்திரையரங்கு மன்றம் நடாத்துகின்ற வடக்கு கிழக்கு தமிழ் பாடசாலை மாணவர்களுக்கான குறு நாடகப்போட்டிகள் இம்முறை முதல் தடவையாக யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை ரவர் மண்டபத்திரையரங்க பணிப்பாளர் நாயகம் சட்டத்தரணி டக்ளஸ் சிறிவர்த்தன தலைமையில் இடம்பெற்றது. இந் நாடகப்போட்டியில் 12 பாடசாலைகளின் நாடக ஆற்றுகைகள் இடம்பெற்றன.வவுனியா விபுலானந்தாக்கல்லூரி,மன்னார் சென்.சேவியர் பெண்கள் கல்லூரி, மட்டக்களப்பு மெதடிஸ் மத்திய கல்லூரி, மட்டக்களப்பு சிவானந்தாக்கல்லூரி, மட்டக்களப்பு கிரான் மகாவித்தியாலயம், மட்டக்களப்பு பனிச்சங்கேணி திருமகள் வித்தியாலயம், கல்முனை பாண்டிருப்பு மகாவித்தியாலயம், யாழ்ப்பாணம் திருக்குடும்பக்கன்னியர் மடப்பாடசாலை, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி, சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி, நெல்லியடி மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளின் நாடகங்கள் ஆற்றுகை செய்யப்பட்டன. (63)

# கரவெட்டி சமூகசேவைப்பிரிவினால் பயனாளிகளுக்கு சக்கரநாற்காலிகள்




(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினால் மாற்றுவலுவுடைய 4 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவியாக கடந்த புதன்கிழமை சக்கர நாற்காலி வழங்கப்பட்டுள்ளது.கரவெட்டி பிரதேச செயலகத்தில் வைத்து நான்கு பயனாளிகளுக்கும் இவை வழங்கப்பட்டன.

இதில் கரவெட்டி மத்தியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை செல்லத்துரை, கரவெட்டி மேற்கு இராஜகிராமத்தைச் சேர்ந்த தர்மசீலன் சறோஜினி, கரணவாய் மேற்கு மண்டானைச் சேர்ந்த கிட்டிணன் ஸ்ரீஸ்கந்தராசா கரவெட்டி தெற்கு மத்தொனி ஆழ்வான் வள்ளிப்பிள்ளை ஆகிய 4 பயனாளிகளுக்கே சக்கர நாற்காலி வழங்கப்பட்டன. (18)

## வாரம் ஒரு காரம்

# மத்திய அரசுடன் மென்போக்கு தேவை முதலமைச்சரின் அறிவுரையின் பின்னணியென்ன



கடந்த சில நாட்களிற்கு முன்னர் வடமாகாணசபை உறுப்பினர்களை அவசரமாகச் சந்தித்த முதலமைச்சர் விக்னேஸ்வரன் "மத்திய அரசுடன் நாம் மென் போக்காக நடந்து கொள்ள வேண்டும்" என பல அறிவுரைகளை வழங்கியுள்ளார் இது தொடர்பாக விமர்சனங்கள் பலவாறு எழுந்துள்ள போதிலும் இதன் பின்னணியென்ன என்பதைப் பரிசீலிப்பதே மக்களரசியல் சிந்தனை மாற்றத்திற்குத் தேவையான ஒன்று.

நீதியரசராக இருந்த ஒருவர், சட்ட சம்பிரதாயங்களிற்குள் நீண்டகாலம் தொழில் செய்த ஒருவர், 4 மாதங்களுக்கு மேல் முதலமைச்சராக இருந்து வரும் ஒருவர் திடீரென இவ்வாறான ஓர் அறிவித்தலை ஏன் முன்வைத்துள்ளார்?

இதன் பின்னணியென்ன? பலமாக சிந்திக்கவேண்டிய விடயமிது. தமிழரசுக் கட்சியின் தந்தை செல்வாவில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் வரை உணராத ஓர் விடயத்தை முதலமைச்சர் திடீரென புரிந்துகொண்டுள்ளார். அவ்வாறானால் எதிர்ப்பு அரசியல்மூலம் இதுவரை எதையும் மாகாணசபையால் சாதிக்க முடியவில்லை என்பதை வடமாகாணசபை முதலமைச்சரே ஒப்புக் கொள்கின்றார் என்பதை மக்கள் முதற்கண் புரிந்து கொள்ள வேண்டும்.

அன்று ஆயுத முனையில் ஆரம்பித்த எதிர்ப்பு இன்று அரசியல் வரை நீடித்துள்ளது. இதற்கிடையில் தமிழ் மக்கள் அழிவுகளைத்தவிர எதை சாதித்தார்கள் என்பதுதான் முதலமைச்சரின் அறிவுரையின் பின்னணியாகும். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நடந்து முடிந்த மாகாணசபைத் தேர்தலில் அர செதிர்ப்பை முன்நிறுத்தி பல பிரசாரங்களை பல வடிவங்களில் செய்தது. இதேவேளை இணக்க அரசியலை முன்நிறுத்தி ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி பிரசாரங்களை முன்னெடுத்தது.

அரச எதிர்ப்புக் கொள்கையால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மக்களாதரவை வென்று மாகாணசபை வெற்றியை தனதாக்கிக் கொண்டது. இணக்க அரசியல் கொள்கையினை முன்னெடுத்து அரச கட்சியோடு போட்டியிட்டமையால் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி அன்றைய தேர்தலில் தோல்வியுற்றது.

அந்த வேளை டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்த உடகவியலாளர்கள் உங்கள் தோல்விக்கான காரணமென்ன என வினாவிய போது "எனது யதார்த்த அரசியல் சிந்தனையை என்றோ ஒருநாள் மக்கள் புரிந்து கொள்வர்" என நம்பிக்கை வெளியிட்டார். மக்கள் புரிந்து கொள்கின்றார்களோ இல்லையோ மக்களால் தெரிவுசெய்த முதலமைச்சர் புரிந்துகொண்டு விட்டார்.

தமிழ் மக்களின் சிந்தனை மாற்றத்தேவைக்கு இதுவொன்றே போதும். இதன்பின்னும் மக்கள் மார்புதட்டும் அரசியலை முன்நிறுத்தி பின் நோக்கிப் போவார்களானால் திரும்பவும் அம்மக்களின் அழிவினை யாராலும் தடுக்க முடியாது.

இது ஒரு புறமிருக்க கூட்டமைப்பு பெற்ற மாகாணசபை வெற்றி என்பது எதைத் தமிழர்களிற்குப் பெற்றுக்கொடுத்தது? சற்று சிந்தித்துப்பார்த்தால் முதலமைச்சரின் அறிவுரைக்கு அர்த்தம் கிடைக்கும்.

* ஆளுநரின் செயற்பாட்டில் அல்லது ஆளுநர் நியமனத்தில் மாற்றம் கிடைத்ததா?

* காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வடமாகாணசபைக்குக் கிடைத்ததா?

* செயலாளர்கள் இடமாற்றத்தில் முதலமைச்சர் அனுமதி பெறப்பட்டதா? நியமனம் வழங்கும் நிகழ்வில் முதலமைச்சர் அழைக்கப்பட்டாரா?

* காணிபறிப்பில் மாகாணசபை அதிகாரங்களால் தமிழர்களிற்குப் பயன் கிடைத்ததா? (முல்லைத்தீவு மாவட்டத்தின் மரவாடிக் கிராமம்)

* தமிழ் கிராமமான மணலாறு–வெலிஓயா எனும் சிங்கள பிரதேச செயலாள் பிரிவுடன் சேர்க்கப்பட்டது. இதை மூகாணசபையால் தடுக்க முடிந்ததா?

* எழுத்துவடிலில் உள்ள மாகாணசபைத் தீர்மானங்கள் ஏதாவது நிறைவேற்றப்பட்டதா?

சற்று சிந்தித்துப்பார்த்தால் மாற்றுத்தீர்வொன்று அவசியம் வேண்டுமென்பது அனைவரிற்கும் தெளிவாகும். அதேவேளை இனிவரும் காலங்களில் மத்திய அரசுடன் இணைந்து மாகாண அரசு செயற்பட்டாலும் கூட்டமைப்பின் ஆளுகைக்குள் இருக்கும் மாகாணசபை மேல் மத்திய அரசின் நம்பிக்கை நாணயமாகும்? என்பது மறுதுருவ வினாவாக உள்ளது.

இதற்கெல்லாம் யார் காரணமென சிந்தித்தால் மக்களாகிய நாங்களே எனும் ஒரு விடை மாத்திரமே கிடைக்கும். யதார்த்த சிந்தனையற்ற அரசியல் நாடகங்கள் பல தமிழ் மக்கள் பார்வையில் அரங்கேறுகின்றன. அர்த்தமற்ற தனிப்பட்ட அரசியல் அபிலாசைகளிற்காக அரங்கேறும் நாடகங்களை இனியாவது இனம்பிரித்துப் பார்ப்போம்.

– வெண்கட்டியன்

# சர்வோதய தேசோதய ஒன்று கூடல்



கிராம மட்ட மக்களின் வாழ்க் கைத்தரத்தை மேம்படுத்தும் நோக்கோடு சர்வோதய தேசோ தயப்பிரிவின் வருடாந்த தேசோ தய ஒன்றுகூடல் நிகழ்வு கடந்த வாரம் வவுனியா மாவட்ட சர்வோ தய நிலையத்தில் இடம் பெற் றது.

இந் நிகழ்வு கிராமமட்ட மக்களின் வாழ்க்கைத்தர மேம்பாட்டிற்காக கிராமியப் பொருளாதாரம், கிராமிய அபிவி ருத்தி, ஆன்மீகம், மெய்யறிவு ஆகிய தலைப்புக்களில் வவு னியாவின் முதற்தர வளவா ளர்களின் வளப்பகிர்வுடன் கிராமமட்ட மக்களை மையப்படுத்தி மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் வவுனியா மாவட்ட பிரதேசசெயலாளர். வைத்தியர்கள், வடமாகாண சர் வோதய இணைப்பாளர் ஜீவ ராஜ், சர்வோதய வடமாகாண ஆலோசகர் சுப்பிரமணியம் ஐயா ஆசிரியர் மகாலிங்கம் வவு னியா மாவட்ட சர்வோதய இணைப்பாளர் எஸ் உதயகு மாரன், வவுனியா சர்வோதய பணியாளர்கள் உட்பட வவுனியா அரச திணைக்கள ஊழியர்க ளும் கலந்துகொண்டனர்.

# வளம் நோக்கி மாணவர்களை அனுப்பும் துர்ப்பாக்கிய நிலையை தவிர்க்க வேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் தெரிவிப்பு



வடமாகாண கல்வித்துறை யில் குறிப்பாக கிராம பாட சாலைகளிலிருந்து மாண வர்கள் வளங்களை தேடிச் செல்வதோடு கல்வித்துறை அதிகாரிகளினால் வளங்களை நோக்கி மாணவர் களை அனுப்பும் துர்ப்பாக்கிய செயற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றது. எனவே இந்த நிலைமை உடனடியாக நிறுத்தப் படல் வேண்டும் என நாடா ளுமன்ற உறுப் பினரும் நாடாளு மன்றக்குழுக்களின் பிரதித்தலை வருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ் அராலி இந்துக்கல்லூரி பாடசா லைக்கு தனது 2013 ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபா பெறுமதி யான மேலைத்தேய வாத்திய இசைக்கருவிகளை வழங்கி வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள் ளார். அங்கு அவர் மேலும் தெரி விக்கையில்

கல்வித்துறையின் முன் னேற்றத்திற்கு கல்விக்கொள்கை காரணமல்ல. மாறாக எங்கள் மத்தியில் காணப்படுகின்ற இவ் வாறான நிலைமைகளே காரணமா கும் என சுட்டிக்காட்டிய அவர் கல்வித் துறையின் வளப்பங்கீட் டில் கிராமங்கள், நகரங்கள் என்ற வேறுபாடின்றி செயற் பாடுகள் முன்னெடுக்கப்படும் போதே கல்வியில் முன்னேற் றத்தை ஏற்படுத்த முடியும் ஆசி ரியர்கள் தான் மாணவர்களைத் தேடி செல்ல வேண்டுமே தவிர மாறாக மாணவர்கள் ஆசிரியர் களைத் தேடி செல்ல முடியாது. ஆசிரியர் தொழில் என்பது புனிதமானது. அதிலும், யுத் தத்தால் பாதிக்கப்பட்ட எமது மாவட்டத்தில் ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும்.

மேலும் மீள்குடியேற்ற காலப்பகுதியில் கிராமங்களை நோக்கி ஆசிரியர்களை அனுப் புவதில் பல்வேறு சவால்கள் எதிர்கொள்ளப்பட்ட போதும் நாம் ஆசிரியர்களை கிராமங் களை நோக்கி ஆளுநர் மற்றும் அதிகாரிகளின் உதவியோடு அனுப்பினோம். அந்த காலப் பகுதியில் கிராம பாடசாலை களில் கணிசமான ஆசிரியர் வளம் காணப்பட்டது.

ஆனால் தற்போது கிராமங் ளின் பாடசாலைகளில் மிக மோசமான ஆசிரியர் வளப்பற் றாக்குறை நிலவுகிறது. பல பாட சாலைகளில் மாணவர்களை வேறு பாடசாலைகளுக்குச் சென்று கற்குமாறு வட மாகாண கல்வி அமைச்சும் அதிகாரிகளும் பணித்துள்ளனர். இது அந்த பிரதேசங்களின் கல்வியில் அதாவது ஏழைகளின் கல்வியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் விடயமாகும் எனத்தெரிவித்த அவர் கல்வித்துறையில் மாற் றத்தை ஏற்படுத்த மாணவர்கள் பெற்றோர்கள் கல்விச்சமூகம் என அனைவர் மத்தியில் விழிப் புணர்வு அவசியம் என்றார்.

இதேவேளை அராலி இந்துக் கல்லூரிக்கு மேலைத்தேய வாத்திய இசை அணி மாணவர் களுக்கான ஐம்பதாயிரம் ரூபாவில் சீருடைகளை வழங்குவதற்கும உறுதியளித்துள்ளார் கல்லூரி முதல்வர் ஆ.பேரின்பநாயகம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வலி.மேற்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சி தலைவர் பாலகிருஸ்ணன் (ஜீவன்) மற் றும் பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

# பாலியல் வல்லுறவுகளை தடுக்க பொதுமக்களுக்கு விழிப்பூட்டல்

(கொழும்பு)

பாலியல் வல்லுறவு சம்ப வங்களைத் தடுக்க பொதுமக்க ளுக்கு விழிப்பூட்டும் நடவடிக்கை கள் சிலாபத்தில் எடுக்கப்பட் டுள்ளன.

சிலாபம் பொலிஸ் பிரிவில் - கடந்த 2013ஆம் வருடத்தின் முதல் பத்து மாதத்தினுள் மாத் திரம் 62 பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் இடம்பெற்றுள் ளதாக சிலாபம் பிரிவின் சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவினர் தெரிவித்துள்ளனர். இப்பிரிவில் கடந்த 2012ஆம் வருடத்தில் இவ் வாறான குற்றச் செயல்கள் 72 இடம்பெற்றுள்ளது. இந் நிலை யில் இவ்வாறான சம்ப வங்களைக் குறைக்கும் நோக்கில் சிலாபம் பிரிவின் பொலிஸ் அத்தியட்சகர் சாலிய த சில்வா தலைமையில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர் கள், பெரியவர்களைத் தெளிவு படுத்தும் பல்வேறு செயலமர்வுகள கடந்த வருடத்தில் மேற்கொள் ளப்பட்டன.

பல்வேறு தொண்டர் நிறுவ னங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப் புக்களுடன் இவ்வாறான நடவ டிக்கைகள் சிலாபம் பிரிவின் சிறுவர் மற்றும் பெண்கள் பிரி வினரால் மேற்கொள்ளப்பட் டிருந்தன.

கடந்த வருடத்தில் 18 வய துக்கு குறைந்த சிறுமிகளை வல்லுறவுக்கு உட்படுத்திய 35 சம்பவங்கள் முதல் பத்து மாதங்களினுள் இடம்பெற்றுள் ளன. இவை சிலாபம் பொலிஸ் பிரிவினுள் மாராவில வென்னப் புவ மாதம்பை தங்கொட்டுவ கொஸ்வத்தை என்ற அடிப் படையில் இடம் பெற்றுள்ளன.

இக்குற்றங்களுடன் தொடர் புடைய 34 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதே வேளை இக்காலப்பிரிவினுள் மோசமான பாலியல் வல்லுற வுச் சம்பவங்கள் 13 இடம்பெற் றுள்ளன. சிலாபத்தில் 3, மாரா விலஷில் 2, வென்னப்புவவில் 7 மற்றும் மாதம்பையில் 1 என இச் சம்பவங்கள் இடம்பெற் றுள்ளன.

பெற்றோரின் பாதுகாப்பிலி ருந்து கடத்திச் செல்லப்பட்டு வல்லுறவுக்கு உட்படுத்திய சம்பவங்கள் சிலாபத்தில் 5, மார்ராவிலஷல் 3, வென்னப்புவ வில் 5, தங்கொட்டுவவில் 4, கொஸ்வத்தையில் 1 என 18 சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

# விபசார விடுதி முற்றுகை

(கொழும்பு)

குற்றத் தடுப்புப் பிரிவின ருக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து கம்பகா பொலிஸ் பிரி வில் கண்டி வீதி பெலும்மகர பிரதேசத்தில் இயங்கி வந்த விபசார விடுதி ஒன்று முற்று கையிடப்பட்டதில் விபசார விடு தியை இயக்கி வந்த ஒருவ ரும் விபசார தொழிலில் ஈடுபட் டதாகக் கூறப்படும் மூன்று பெண்களும் கைது செய்யப்பட் டுள்ளனர்.

சந்தேகநபர்கள் அனைவரும கம்பஹா, பிலியந்தல, எம்பிலிப் பிட்டிய மற்றும் அங்குனுகொல பெலஸ்ஸ பகுதிகளைச் சேர்ந்த 23,24,26,31 வயதுடையவர்கள் என கம்பகா பொலிஸார். தெரி வித்தனர்.

சந்தேகநபர்கள் கம்பகா நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது நீதிபதி எதிர்வரும் 10ஆம் திகதிவரை அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# மட்டக்களப்பில் கடந்தவருடம் கடலில் மூழ்கி 15 பேர் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடல் மற்றும் வாவி நீரில் மூழ்கி கடந்த 5 வருடங்களில் 30 பேர் பலியாகியுள்ளனர். கடந்த வரு டம் மாத்திரம் 15 பேர் இவ்வாறு மரணித்துள்ளதாக கடற்றொ ழில் திணைக்கள மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் டொமின்கோ ஜோர்ஜ் தெரிவித் துள்ளார். வாகரை முதல் களு வாஞ்சிக்குடி வரையான கடற்பரப் பில் நீராடியபோதே கடல் அலை களினால் அள்ளுண்டு அதிகமா னவர்கள் இறந்துள்ளனர்.

அதேபோன்று மட்டக்களப்பு வாவியிலும் நீரில் மூழ்கி மரணங்கள் சம்பவித்துள்ளன. மண்முனை வடக்கு, காத்தான் குடி, களுவாஞ்சிக்குடி, ஏறா வூர்ப்பற்று, வாழைச்சேனை, வாகரை ஆகிய பிரதேச செய லகப்பிரிவுகளிலேயே அதிகமான மரணங்கள் பதிவாகியுள்ளன.

கடைசியாகக் கடந்த ஞாயிற்றுக்கிழமை மூன்று இளை ஞர்கள் பனிச்சையடி கடலில் மூழ்கிப் பலியாகினர். கடந்த 2004 டிசம்பர் 26 ஆழிப் பேரலை தாக்கத்தினால், 2800 பேர் இம்மா வட்டத்தில் பலியானது குறிப்பி டத்தக்கது.








**கைதடி மேற்கு சரஸ்வதி மாதர் சங்கத்தின் 35 ஆவது ஆண்டு விழா நேற்று முன்தினம் சரஸ்வதி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றபோது. பெண் தலைமைத்துவ குடும்பத் தலைவி மங்கல விளக்கேற்றுவதையும். மாதர் சங்க உறுப்பினர்களின் நாடகத்தின் ஒரு பகுதியையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் காணலாம்.** (51)


# க.பொ.த. (உயர்தர) மாதிரி வினாத்தாள்
## G.C.E. (A/L) Examination model Paper


**பௌதிகவியல்**

01) ரொக்கெற்று ஒன்று புவியின் மேற்பரப் பிற்குச் செங்குத்தாகப் புவியிலிருந்து அப்பால் செல்லும் போது அதில் உள்ள எரிபொருளின் திணிவு (m) ஆனது நேரம் (t) யுடன் குறையும் விதத்தை வரைபு காட்டுகின்றது. வளிமண்டலத் தடைப் புறக்கணிக்கப்படுவதாகவும் எரிபொருளின் மூலம் உண்டாக்கப்படும் உதைப்பு தொடர்ந்து மாறிலியாகவும் இருக்கும் எனின், ரொக்கெற்றின் வேகம்




(Ω) ஆனது நேரம் (t) உடன் மாறும் விதத்தைப் பின்வரும் வரைபுகளில் எது மிகச் சிறந்த முறையில் வகைக் குறிக்கின்றது.





02) குறுக்கு வெட்டுப் பரப்பளவு A யையும் திணிவு m ஐயும் உடைய சீர்த்திண்ம உருளை ஒன்று உருவில் காட்டப்பட்டுள்ளவாறு பாத்திரம் ஒன்றில் இருக்கும் அடர்த்தி d யை உடைய நீரில் மிதக்கின்றது. பாத்திரம் ஒரு மாறா ஆர்முடுகல் a உடன் மேன் முகமாக உயரு மாறு செய்யப்படும்போது நீரில் அமிழும் உருளையின் பகுதியின் உயரம்.

(1) தூரம் $\frac{ma}{Adg}$ இனால் அதிகரிக்கின்றது.

(2) தூரம் $\frac{ma}{Adg}$ இனால் குறைகின்றது. (3) தூரம் $\frac{m(g-a)}{Adg}$ இனால் அதிகரிக்கின்றது.

(4) தூரம் $\frac{m(g-a)}{Adg}$ இனால் குறைகின்றது. (5) மாறாமல் இருக்கின்றது.

03) உருவில் காட்டப்பட்டுள்ளவாறு கிடை மேற்பரப்பு ஒன்றின் மீது உள்ள திணிவு 2 Kg யை உடைய பொருள் ஒன்றின் மீது ஒரு விசை P பிரயோகிக்கப்படுகின்றது. இரு மேற் பரப்புகளுக்குமிடையே உள்ள இயக்கப்பாட்டு உராய்வுக் குணகம் 0.5 ஆகும். பொருள் சீர் வேகத்துடன் இயங்குமெனின், பொருளின் மீது உள்ள செவ்வன் விசை R ஆனது




1) 10N
2) $10\sqrt{2}$ N
3) 20 N
4) $20\sqrt{2}$ N
5) 40 N

04) ஆகாயவிமானம் ஒன்றிலிருந்து ஒரேவேளை வெளியே பாய்ந்து சுயாதீனமாக விழுந்துகொண்டிருக்கும் வெவ்வேறு நிறைகளைக் கொண்ட இரு விமானப்படை வீரர்கள் தமது சாவசமப் பரசூற்றுகளை ஒரே குத்துயரத்தில் ஒரேவேளையில் திறந்து இறங்கத் தொடங்கு கின்றனர். அவ்விருவரினதும் இயக்கம் பற்றிய பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A) தொடக்கத்திலே, பரசூற்றுகளின் மீது தாக்கும் மேலுதைப்பின் விளைவாக அவர்களுடைய கதிகள் குறைகின்றன.


B) பாரமான வீரரின் முடிவு வேகம் மற்றையவரின் முடிவு வேகத்திலும் கூடியது.

C) இருவரும் தரையை ஒருமிக்க அடைகின்றனர்.

மேலே உள்ள கூற்றுக்களில்

1) B மாத்திரம் உண்மையானது.
2) C மாத்திரம் உண்மையானது.
3) A,B ஆகியன மாத்திரம் உண்மையானவை.
4) A,C ஆகியன மாத்திரம் உண்மையானவை.
5) A,B,C ஆகியன எல்லாம் உண்மையானவை.

05)





உரு A யில் காட்டப்பட்டுள்ளவாறு ஒருவர் வெறும் உருளைப் பாத்திரம் ஒன்றை அதன் மேல் விளிம்பிலிருந்து பார்க்கும்போது பாத்திரத்தின் அடியின் எதிர் விளிம்பு மட்டுமட்டாகத் தெரிகின்றது. கண்ணை அதே தானத்தில் வைத்துக்கொண்டு பாத்திரத்தின் மேல் விளிம்பு வரைக்கும் ஒரு தெளிவான திரவம் நிரப்பப்படுகின்றது. அப்போது உரு B யில் காட்டப்பட்டுள்ளவாறு பாத்திரத்தின் அடியிலே மையத்தில் உள்ள ஒரு சிறிய குறி அவருக்குத் தென்படுகின்றது. திரவத்தின் முறிவுச் சுட்டியைத் தருவது


1) $\frac{\sqrt{h^2+R^2}}{\sqrt{h^2+4R^2}}$ (2) ✓ $\frac{2\sqrt{h^2+R^2}}{\sqrt{h^2+4R^2}}$ (3) $\frac{\sqrt{h^2+R^2}}{\sqrt{h^2+2R^2}}$ (4) $\frac{\sqrt{h^2+2R^2}}{\sqrt{h^2+R^2}}$

5) $\frac{h+2R}{h+R}$


06)





ஒரு மெல்லிய சதுரத் தகடு PQRS ஆனது உருவில் காட்டப்பட்டுள்ள வாறு குழிவாடி ஒன்றின் தலைமை அச்சு வழியே சமச்சீராக வைக்கப்பட்டுள்ளது. P' Q', R', S' ஆகியன உண்டாக்கப்படும் தகட்டின் விம்பத்தை மிகச் சிறந்த முறையில் வகைகுறிப்பது?





07) வெளியின் குறித்த பிரதேசம் ஒன்றிலே X திசை வழியே மின்னழுத்தம் V யின் மாறல் உருவிலே காட்டப்பட்டுள்ளது. ஏற்றம் ஒன்றை X - திசை வழியே O விலிருந்து C யிற்குக் கொண்டு சென்றால், ஏற்றத்தின் மீது தாக்கும் மின் விசை F இன் மாறலை மிகச் சிறந்த முறையில் வகை குறிப்பது.








08) உருவில் காட்டப்பட்டுள்ளவாறு ஒரு நிற ஒளியின் கதிர் ஒன்று முறிவுச் சுட்டி 1.40 ஐ உடைய, பிளாஸ்ரிக்கி னால் செய்யப்பட்ட அரியம் ஒன்றின் முகம் ஒன்றின் மீது செவ்வனாகப் படுகின்றது. வளிக்கு வெளிப்படும் முறிந்த கதிரை மிகச் சிறந்த முறை யில் காட்டுவது $\left(\sin 45^0 = \frac{1}{1.42}\right)$





1) a
2) b
3) c
4) d
5) e


09) A, B என்பன சம ஏற்றங்களைக் கொண்ட சீராக மின்னேற்றப்பட்ட, கடத்தாத இரு சர்வசமத் திண்மக் கோளங்கள்






ஆகும். அவற்றுக்கிடையே உள்ள தூரம் அவற்றின் ஆரை R ஐக் காட்டிலும் மிகவும் பெரியது. X இலிருந்து y யிற்கு xy வழியே மின் புலச் செறிவு E இன் மாறலை மிகச் சிறந்த முறையில் வகைகுறிப்பது.





10) சிறிய மின்னிழையக் குற்றி ஒன்று உருவில் காட்டப்பட்டுள்ளவாறு தனியாக்கிய மின்னேற்றப்பட்ட சமாந் தரத் தட்டக் கொள்ளளவி ஒன்றினூடாகச் செலுத்தப்படுகின்றது. மின்னிழையக் குற்றி செல்லும்போது கொள்ளளவிக்கு குறுக்கே உள்ள அழுத்த வித்தியாசம் V ஆனது நேரம் t உடன் மாறும் விதத்தைச் சிறந்த முறையில் வகை குறிப்பது?












11) மாறா மீடிறன் $f_s$ இல் சைகைகளைக் காலும் ஒலி முதல் ஒன்று வட்டம் ஒன்றின் வில் ஒன்றில் வழியே சீர்க் கதி V யுடன் உருவில் காட்டப்பட்டுள்ளவாறு செல்கின்றது. நிலையான நோக்குநர் ஒருவர் ஒரு புள்ளி X இல் உள்ளார். வட்டத்தின் மையம் O ஆகும். முதலானது A யிலிருந்து B யிற்குச் செல்லும்போது நோக்குநரினால் கேட்கப்படும் மீடிறன் $f$ இன் மாறலை மிகச் சிறந்த முறையில் வகை குறிப்பது.




12) சீர்வேகம் V உடன் செல்லும் நீளம் 2R ஐ உடைய ஓர் உலோகக் கோல் AB ஆனது உருவில் காட்டப்பட்டுள்ளவாறு ஆரை R I உடைய வட்டப் பிரதேசம் ஒன்றுக்கு வரை யறுக்கப்பட்ட சீர்க் காந்தப்புலம் ஒன்றைக் கடந்து செல்கின்றது. கோலுக்குக் குறுக்கே தூண்டப் பட்ட மி.இ.வி. (E) ஆனது நேரம் (t) உடன் மாறும் விதத்தை மிகச் சிறந்த முறையில் வகை குறிப்பது.




## பகுதி II




1) உருவில் காட்டப்பட்டுள்ளவாறு ஒரு மரப்பெட்டி B உடன் இணைக்கப்பட்டுள்ள ஒரு கிடைக்கயிறு R இன் மூலம் கரடான கிடை மேற்பரப்பு ஒன்றின் வழியே ஒரு மனிதன் X அப்பெட்டியை இழுக்கின்றான்.

a) i) பெட்டி B மீதும் கயிறு R மீதும் தாக்கும் கிடை விசைகளை அடுத்த பக்கத்தில் காட்டப்பட்டுள்ள வரிப்படங்களில் குறிக்க.

(ஒவ்வொரு விசையையும் குறிப்பதற்குப் பின்வரும் குறிப்பீட்டைப் பயன்படுத்துக)


$F_{RX}$ - மனிதனால் கயிறு மீது உஞற்றப்படும் விசை

$F_{RB}$ - பெட்டியினால் கயிறு மீது உஞற்றப்படும் விசை

$F_{BR}$ - கயிற்றினால் பெட்டி மீது உஞற்றப்படும் விசை

F - பெட்டி மீது தாக்கும் உராய்வு விசை

ii) மேற்குறித்த விசைகளில் தாக்க - மறுதாக்கச் சோடியாகக் கருதத்தக்கது யாது?




b) மனிதனால் 100 N விசை ஒன்றைப் பிரயோகித்துக் கயிறு இழுக்கப்படும் போது பெட்டி தொடர்ந்து அசையாமல் இருக்கின்றது. இச்சந்தர்ப்பத்தில் மேற்பரப்பின் மூலம் பெட்டி மீது உண்டாக்கப்படும் உராய்வு விசை எவ்வளவு?

c) i) மனிதன் கயிற்றை 150 N விசையுடன் இழுக்கும்போது பெட்டி அசையும் தறுவாயில் இருக்கும். இக்கணத்தில் கயிற்றின் மூலம் பெட்டி மீது உஞ்சப்படும் விசை எவ்வளவு?

ii) பெட்டியின் திணிவு 50 Kg எனின், பெட்டிக்கும் மேற்பரப்புக்குமிடையே உள்ள நிலையில் உராய்வுக் குணகத்தைக் கணிக்க.

d) i) மனிதனால் உஞற்றப்படும் விசையை 200 N வரைக்கும் அதிகரிக்கச் செய்யும்போது பெட்டியும் கயிறும் மாறா ஆர்முடுகல் $2\ ms^{-2}$ உடன் இயங்கத் தொடங்கும். கயிற்றின் திணிவு 1 kg எனின், கயிற்றின் மூலம் பெட்டி மீது உஞற்றப்படும் விசையைக் கணிக்க.

ii) இச்சந்தர்ப்பத்தில் மேற்பரப்பினால் பெட்டி மீது உண்டாக்கப்படும் உராய்வு விசையைக் கணிக்க.

iii) மேற்பரப்புக்கும் பெட்டிக்குமிடையே உள்ள இயக்கப்பாட்டு உராய்வுக் குணகத்தை துணிக.

### கடந்த செவ்வாய்க்கிழமை வெளியான புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாளின் விடைகள்

1) தலையில் பூ இல்லை
2) மணிமுள்ளும் நிமிடமுள்ளும் சமன்
3) 2
4) 5
5) 1
6) 2
7) 1
8) 4
9) 3
10) 7
11) 2
12) 1
13) 1
14) 2
15) 1
16) 2
17) 1
18) இட - அழகி, புயல் மேல் - அன்பு, குயில்
19) 1
20) 1
21) 3
22) 1
23) 4
24) 2
25) 1
26) 2

## பரீட்சைக்கு முன் பரிசில்கள் பெறுவோம்

மாணவரின் கல்வி முன்னேற்றத்துக்காக எங்கள் கல்விமுரசு இந்த வாரத்தில் இருந்து ஒரு புதிய நடைமுறையை அமுல்படுத்துகின்றது. ஞாயிறு, செவ்வாய் ஆகிய தினங்களில் வெளிவரும் புலமைப்பரிசில் வினாக்களுக்கான விடைகளை வினாத்தாளின் இலக்கத்துடன் தெளிவாக எழுதி அனுப்பவும், முன்னிலை பெறும் புள்ளிகளின் அடிப்படையில் கல்விமுரசு மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கவுள்ளது. ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமைக்கு முன் இவ் விடைகள் அனுப்பி வைக்கப்படவேண்டும். அனுப்பி வைக்கப்படும் பெயர் விபரங்கள் புகைப்படத்துடன் வெளிவரும். அனுப்பவேண்டிய விபரங்கள்

1) முழுப்பெயர் :------------------------------------------------

2) முகவரி :------------------------------------------------

3) புகைப்படம் :------------------------------------------------

4) தொலைபேசி இல:------------------------------------------------

*குறிப்பு :- ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமைகளில் அந்த வாரத்திற்கான சரியானவிடைகள் பிரசுரமாகும்.*

# வலி.தென்மேற்கு பிரதேச சபையில் பெரும் ஆளணிப் பற்றாக்குறை

(வலி.தென்மேற்கு)

வலி. தென்மேற்கு பிரதேச சபையில் ஆளணிக்கு பெரும் பற்றாக்குறை நிலவுவதாகவும் இதன் காரணமாக பல்வேறு சிக்கல்கள் எழுந்துள்ளதாகவும் வலி. தென் மேற்கு பிரதேச சபையின் பதில் தவிசாளர் ச.சிவகுமாரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மிக முக்கியமாக வாகனச் சாரதிகளுக்கு பெரும் பற்றாக்குறை நிலவுகின்றது. பிரதேச சபையின் பாவனைக்காக ஆட்டோ, உழவுஇயந்திரம், தண்ணீர் பௌசர் உட்பட 12 வாகனங்கள் உள்ள போதும் ஒரேயொரு சாரதி மட்டுமே உள்ளார். அதனை விட இரு சாரதி அனுமதிப்பத்திரமுள்ள ஊழியர்களை தற்துணிவின் படி குப்பை ஏற்றும் வாகனம் செலுத்த அனுமதித்து அதனூடாக பிரதேச சபையின் நடவடிக்கைகளைக் கொண்டு செல்வதாக பதில் தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

பிரதேச சபைக்குட்பட்ட குடிதண்ணீர் பற்றாக்குறையான பகுதிகளுக்கு வலி. தென்மேற்கு பிரதேச சபை மூலம் தண்ணீர் விநியோகிக்கப்பட வேண்டியுள்ளது. அத்துடன் பிரதேசத்தில் சேரும் கழிவுகளையும் அகற்ற வேண்டியுள்ளது. ஒரேயொரு சாரதி மட்டுமே உள்ளமையால் ஒன்றை விட்டு ஒரு நாளே குடிநீரை விநியோகிக்க முடிகின்றது.

வெயில் அதிகமான காரணத்தால் மாதகல் உள்ளிட்ட பல பகுதிகளுக்கு தினமும் குடிநீரை விநியோகிக்க வேண்டியுள்ளது. சாரதி இல்லாமையால் இவ் நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன. இது சம்பந்தமாக உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சி உதவி ஆணியாளர் இருவருக்கும் அறிவித்தும் கூட எந்த வித நடவடிக்களும் மேற்கொள்ளப்படவில்லை.

அத்துடன் புதிய நியமனங்களுக்கு பிரதேச சபையால் விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதிலும் அவை தொடர்பாக ஆராயப்பட்டு இதுவரை சாரதி உள்ளிட்ட சிற்றூழியர்கள் நியமிக்கப்படவில்லை. அத்துடன் தண்ணீர் பௌசர் வாடகைக்கு விடும் பட்சத்தில் சபைக்கான வருமானம் கிட்டும் ஆனால் சாரதிகள் பற்றாக்குறை காரணமாக அவற்றை நடாத்த முடியவில்லை என்றார். (48)

# அரசசேவை நியமனத்திற்கு 2019 முதல் 2 ஆம் மொழி கட்டாயம்

## பொது நிர்வாக உள்நாட்டு அமைச்சு

(கொழும்பு)

2019 ஆம் ஆண்டு முதல் அரச சேவைக்கு நியமனம் பெறும் அனைவரும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் இரண்டாம் மொழியில் சித்தியடைந்திருப்பது கட்டாயமானதாகும் என பொது நிர்வாக உள்நாட்டமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய தமிழ் மொழியில் க.பொ. (சா/த) தரப் பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் இரண்டாம் மொழியான சிங்கள மொழியிலும் சிங்கள மொழியில் பரீட்சைக்குத் தோற்றுவோர் தமிழ் மொழியிலும் சித்தி பெறுவது கட்டாயமானதாகும்.

அரச கருமமொழிக்கொள்கையை முறையாக நடைமுறைப்படுத்தும் வகையில் இந்த முறைமை கட்டாயப்படுத்துவதுடன் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் இரண்டாம் மொழியில் சித்தியடையாதவர்கள் அரச சேவைக்குத் தகைமையில்லாதவர்களாகக் கணிக்கப்படுவர்.

அரசாங்க சேவை செயற்பாடுகள் மீளாய்வு மற்றும் பத்து வருடத்தை இலக்காகக் கொண்ட எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பிலும் ஆராயும் அமர்வொன்று பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சில் நடைபெற்றது. இவ் அமர்வில் முன்வைக்கப்பட்ட நடைமுறை தீர்மானங்களில் மேற்படி விடயம் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

மேலும் இத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு விசேட குழு வொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் விதந்துரைகளுக்கமைய அரச கரும மொழியை நடைமுறைப்படுத்துவதில் புதிய முறைமைகள் செயற்படுத்தப்படவுள்ளன.

இதற்கிணங்க மொழிப் பயிற்சிகளை பெற்றுக் கொள்வோருக்கு வசதியாக தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் பட்டதாரி பயிற்சியாளர்களாக தற்போது நியமனம் பெற்றுள்ளவர்களுக் கும் இரண்டாம் மொழி பயிற்சிகளை வழங்கி தேவைப்படும் பிரதேசங்களுக்கு அவர்களை நியமிக்கவும் திர்மானிக்கப்பட் டுள்ளது என அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கஞ்சா வைத்திருந்தவர் யாழ்.நல்லூரில் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.நல்லூர்ப் பகுதியில் கஞ்சா வைத்திருந்த ஒருவர் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருப்பதாக யாழ். பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

குறித்த நபர் நல்லூர்ப் பகுதியில் கஞ்சா பாவனையில் ஈடுபட்டிருந்த சமயமே பொலிஸார் இவரைக் கைது செய்ததாக மேலும் தெரிவித்த அவர் இவரை யாழ்.நீதிமன்றத்தில் முற்படுத்திய போது அவரை நாளை வரை விளக்க மறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டதாகவும் தெரிவித்தார்.

மேலும் யாழ்நகர்ப் பகுதியில கஞ்சா பாவனை நடைபெறுவதாக பொலிஸாரிற்கு கிடைத்த தகவலை அடுத்து புலனாய்வு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் புலனாய்வாளர்களின் தகவலை அடுத்தே இவர் கைது செய்யப் பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்று யாழ்.பொலிஸ் நிலையத்தின் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

(பா)

# வடக்கில் உயரமான சிவனுக்கு சம்பில்துறையில் இன்று குடமுழுக்கு

(மாதகல்)

மாதகல்- சம்பில்துறை சம்புநாத ஈஸ்வரர் ஆலயத்தில் சிவ் தொண்டர் அமைப்பால் அமைக்கப்பட்ட வடமாகாணத்திலேயே உயரமான, சிவபெருமானின் 21 அடி தியான திருச்சொரூபத்திற்கான திருக்குட முழுக்கு இன்று காலை 8 மணிமுதல் வரும் சுபமுகூர்த்த வேளையில் செந்தமிழ் திருமறையில் நடைபெறவுள்ளது.

சம்புநாதஈஸ்வரர் ஆலய குரு முதல்வர் சிவத்திரு நரசிங்க சித்தர் சுவாமிகளின் ஆசியுடன் சுவிஸ் நாட்டின் தலைநகர் பேர்ன் மாநிலத்தில் உள்ள ஞானலிங்கேச்சுரர் ஆலய அருட்சுனைஞர்கள் செந்தமிழ் வேள்விச சதுரர் திருவருள் மு.பெ.சத்தியவேல் முருகனாரின் மாணாக்கர்களாகிய சிவருசி.தர்மலிங்கம் சசிக்குமார், ஞானத்திரு.திருச்செல்வம் முரளிதரன், சிவஞான சித்தர்பீட நிறுவுனர் சிவயோகநாதன் ஆகியோர் இணைந்து திருக்குடமுழுக்கினை செந்தமிழ் திருமறையில் ஆற்றவுள்ளார்கள்.



செந்தமிழில் சிவதீட்சை வழங்கும் வைபவமும் நடைபெறும். அத்துடன், சிவ நற்பணி மன்றங்களின் அறப்பணிச் செயற்றிட்டங்களில் இணைந்து கொள்ள விரும்புவோர் சிவதொண்டர்களாகவும் சிவமங்கையர்களாகவும் உறுதிப்பிரமாணம் எடுத்து இணைந்துகொள்ளும் வைபவமும் இடம்பெறும்.

இதேவேளை, சம்புநாதஈஸ்வரர் ஆலயத்தைச் சூழவுள்ள ஆலயங்களான, பனிப்புலம் முத்துமாரியம்மன் ஆலயம், சாந்தை வீரபத்திரர் ஆலயம், காட்டுப்புலம் வீரமாகாளி அம்மன ஆலயம், பெரியபுலோ ஞான வைரவர் ஆலயம், கல்விளான் குழிழமோடை நாகதம்பிரான் ஆலயம், வறுத்தோலை கொட்டடிப்பேரன் சிவன் ஆலயம், சுழிபுரம் மேற்கு அரிகரபுத்திர ஐயனார் ஆலயம், பாண்டவெட்டை காளியம்மன் ஆலயம் மற்றும் திருவடிநிலை வாகை வைரவர் ஆலயம் போன்ற ஆலயங்களிலிருந்து சிவனடியார்களால் ஓம் நமசிவாய மந்திர பாராயணத்துடன் பூரண கும்பங்கள் கொண்டுவரப்பட்டு சம்புநாதஈஸ்வரருக்கு அபிசேகம் செய்யப்படவுள்ளது.

இலங்கையிலேயே இந்த ஆலயத்திலேயே முதன் முதலாக செந்தமிழ் திருமறையில் திருக்குடமுழுக்கு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது

(48)

# காணிக்கை மாதா ஆலய வருடாந்த திருவிழா

(குருநகர்)

யாழ்.பாங்ஷால் வீதி புதுமை மாதா என்றழைக்கப்படுகின்ற காணிக்கை மாதா தேவாலய வருடாந்த திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படவுள்ளது.

யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை கலந்து நிறைவேற்றும் திருநாள் பாடல் கூட்டுத் திருப்பலி காலை 7மணிக்கு ஒப்புக்கொடுக்கப் படவுள்ளது.

இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு செபமாலையுடன் ஆரம்பிக்கும். நற்கருணை ஆராதனை நற்கருணைப் பவனி முடிவில் ஆசிர்வழங்கலும் நிறைவு பெறும்.

காணிக்கை அன்னையின் திருவீதி உலா நாளை மாலை 5 மணிக்கு செபமாலையுடன் ஆரம்பமாகி 8 மணியளவில் ஆலயத்தை வந்தடைந்து மாதாவின் திருச்சொரூப ஆசிர் வழங்கலுடன் வருடாந்த பெருந்திருவிழாக் கொண்டாட்டங்கள் நிறைவடையும்

(68)

# அருணோதயக் கல்லூரியிலிருந்து 17 ஆசிரியர்களுக்கு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி அருணோதயக்கல்லூரியிலிருந்து பிரதி அதிபர் உட்பட 17 ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப் பட்டுள்ளது.

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட எல்லாப் பாடசாலைகளிலும் 7 வருடங்கள் தொடர்ச்சியாக ஒரே பாடசாலையில் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு இவ் இடமாற்றங்கள் வழங்கப்பட்டன. இதன் அடிப்படையில் அளவெட்டி அருணோதயாக்கல்லூரியில் இருந்து சு.மதிவதனன் - (பிரதிஅதிபர்) திருமதி.இ.கலையரசி-ஆரம்பக்கல்வி திருமதி.தி.ஜெயவாணி-(ஆரம்பக்கல்வி) திருமதி.சிவானி-(ஆரம்பக்கல்வி) திருமதி.வே.சுபாஜினி-(தகவல் தொழினுட்பம்), ஆங்கிலம் திருமதி.ச.நளாயினி-(ஆங்கிலம்) திருமதி.ச.மோகனரஞ்சி-(வணிகக் கல்வி) திருமதி. உ.சாந்தினி-பொருளியல்) திருமதி.சி.சிவாஜினி- (இந்துசமயம்) இ.பிரதாபசர்மா-(அளவையியல்) பொ.விஜயகுமார்-(சித்திரம்) க.காந்தராசா-(பௌதீகவியல் கணிதம்) திருமதி.க. அனுசியா-(நாடகமும் அரங்கியலும்) திருமதி. லோ.சர்மிளா (தமிழ்) திருமதி. ஜெ.ஜெயந்தினி-வரலாறு திருமதி.ஆ.தயாளகௌரி-(வர்த்தகம்) ச.கிருபானந்தன் - (நாடகமும் அரங்கியலும்) ஆகியோர் வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடமாற்றப்பட்டுள்ளார்கள். (63)



நாட்டின் 66 ஆவது சுதந்திரதினம் எதிர்வரும் 4 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள நிலையில் தேசியக் கொடியின் விற்பனை யாழ்.நகரில் அமோகமாக இடம்பெற்று வருகின்றது. (படங்கள்-ஆர்.இராஜகுமார்)

# இந்தியா-பாகிஸ்தான் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வு

## பாக். வெளிவிவகார அமைச்சு நம்பிக்கை




இந்தியா - பாகிஸ்தான் இடையே காஷ்மீர் உள்ளிட்ட இரு தரப்பு பிரச்சினைகளுக்கு தீர்வு காண பலன் தரக்கூடிய பேச்சுவார்த்தை அவசியம் என்று பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சக செய்தித்தொடர்பாளர் தஸ்னிம் அஸ்லாம் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண பேச்சுவார்த்தை அவசியம் இந்தப் பேச்சுவார்த்தை அர்த்தமுள்ளதாகவும், பலன் தரக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

'காஷ்மீர் விவகாரத்தில் இந்தியாவும், பாகிஸ்தானும் நெருங்கி வருவதற்கு ஏதேனும் தீர்வு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை' இப்பிரச்சினையை அணுக வெவ்வேறு வழிகள் உள்ளன. என்றார்

உலகச் செய்திகள்

# அமெரிக்கா கவலை



சிரியாவில் உள்ள இரசாயன ஆயுதங்களை அழிப்பதில் ஏற்பட்டுள்ள கால தாமதம் தொடர்பில் அமெரிக்கா அதிருப்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவின் பாதுகாப்புச்செயலாளர் சக் ஹேகல் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுவரையில் அறிவிக்கப்பட்ட இரசாயன ஆயுதங்களில் 4 சதவீதம் மாத்திரமே வெளியேற்றப்பட்டுள்ளது.

எஞ்சியவற்றை அழிப்பதற்கான திட்டம் வகுக்கப்பட்டுள்ள போதும், அதனை இன்னும் அமுலாக்காமல் இருக்கின்றமை, கவலைக்குரிய விடயமாக இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்

# வெப்ப அலை தாக்கத்தை ஆராய 3600 உணர்விகொண்ட "ரோபோ"

இந்தியாவும் அவுஸ்ரேலியாவும் இணைந்து, இந்தியப் பெருங்கடலில் நிலவும் வெப்ப அலைகளின் தாக்கம் மற்றும் அதன் விளைவுகளைக் கண்டறியும் பணியில் ஈடுபட்டுள்ளன. இப்பணியில் நவீன உணர்விகளுடன் கூடிய புதிய ரோபோ ஈடுபடுத்தப்படவுள்ளது.

இதுகுறித்து கொமன்வெல்த் அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சி அமைப்பின் கடல்புற உயிரியல் இரசாயன பிரிவுத் தலைவர் நிக் ஹார்ட்மேன் மவுன்ட்போர்ட் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

கடலின் மேற்பரப்பில் மிதந்து கொண்டிருக்கும் இந்த ரோபோவில் உள்ள 3,600 உணர்விகள், கடலின் வெப்பநிலை மற்றும் அதன் உப்புத் தன்மை குறித்த தகவல்களை வழங்கும்.

இந்தியப் பெருங்கடல் பகுதியில் சுற்றுச்சூழலில் பெரிய அளவில் ஏற்படும் வேதியியல் மற்றும் உயிரியல் மாற்றத்தைக் கண்டறியும் பணியில் அர்கோ புளோட் தொழில்நுட்பத்துடன் கூடிய ரோபோ ஏற்கனவே ஈடுபடுத்தப்பட்டுள்ளது. வெற்றிகரமாக செயற்பட்டு வரும் இதன் மேம்படுத்தப்பட்ட வடிவமான "பயோ அர்கோ" என பெயரிடப்பட்டுள்ள இந்த புதிய ரோபோ இந்த ஆண்டு மத்தியில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

கடல் நீரில் கரைந்துள்ள ஒட்சிசன், நைதரசன் குளோரோபில், கரிமம், துகள்கள் உள்ளிட்டவற்றைக் கண்டறிவதற்கான கூடுதல் உணர்விகளைக் கொண்டதாக இந்த பயோ அர்கோ இருக்கும். என்றார்.

# சாகசம் நிகழ்த்தும் ஆசையால் மனைவியை பறிகொடுத்த கணவன்



சாகசம் செய்ய எண்ணி பரசூட்டிலிருந்து குதித்த பெண் பலியாகியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும தெரியவருவதாவது

இந்தியாவின் பெங்களூரைச் சேர்ந்த தம்பதிகள் சாகசம் செய்ய விரும்பியுள்ளனர்.சாகசம் செய்ய விரும்பிய ரம்யா, கணவர் வினோத்துடன் கமலாபுரம் விமான நிலையத்திற்கு சென்றுள்ளார்.

கடந்த 2 நாட்களுக்கு முன்பு ரம்யா மற்றும் அவரது கணவர் வினோத் ஆகியோர் தலா 7 ஆயிரம் ரூபா செலுத்தி 3 ஆயிரம் அடி உயரத்தில் இருந்து பரசூட் மூலம் குதித்து சாகசம் செய்துள்ளனர்.

விமானத்தில் இருந்து குதித்த இந்த தம்பதிகள் உயரமான இடத்தில் இருந்து 'குதிக்க வேண்டும் என்று முடிவு செய்து அதற்காக தலா 40 ஆயிரம் ரூபா பணம் செலுத்தி விண்ணப்பித்தனர்.

முதலில் ரம்யா குதித்தவுடன் அடுத்ததாக வினோத் குதிக்க தயாராக இருந்தார்.

அப்போது விமானம் 10 ஆயிரம் அடி உயரத்தில் பறந்த போது ரம்யாவுடன் பயிற்சியாளர்களும் குதித்தனர்.

ஆயிரம் கிலோ மீற்றர் வேகத்தில் வந்த ரம்யா 3 ஆயிரம் அடி கடந்தவுடன் தனது கட்டுப்பாட்டில் உள்ள பரசூட்டை இயக்க வேண்டும்.

ஆனால் புதிதாக குதித்த ரம்யாவிற்கு பதற்றம் ஏற்பட்டு காலதாமதமாக பரசூட்டை இயக்கியுள்ளார். இதனால் இடது பக்க செயற்பாட்டு விசையை அழுத்திய ரம்யா வலது பக்க செயற்பாட்டு விசையை இயக்காததால் பரசூட் சரியாக இயங்காமல் வேகமாக கீழே வந்தது.

வானத்தில் இருந்து 10 முறைக்கு மேல் சுழன்று வந்த ரம்யா விமான நிலையம் அருகில் உள்ள விவசாய தோட்டத்தில் விழுந்து பரிதாபமாக உயிரிழந்தார்.

# இந்திய மக்களவைத் தேர்தலில் மம்தா பனர்ஜி தனித்துப் போட்டி



இந்திய மக்களவைத் தேர்தலில் தனித்துப்போட்டியிடப் போவதாக மேற்கு வங்க முதல் வரும், திரிணமுல் காங்கிரஸ் தலைவருமான மம்தா பனர்ஜி, அறிவித்துள்ளார்.

மேற்கு வங்க மாநிலத்தில், 32 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து ஆட்சியில் இருந்த, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை கவிழ்த்து மூன்றாண்டுகளுக்கு முன், ஆட்சியைப் பிடித்த, மம்தா பனர்ஜியின், திரிணமுல் காங்கிரஸ் கட்சி, சமீபத்தில் அங்கு நடந்த, பஞ்சாயத்து தேர்தல் மற்றும் சட்டசபை இடைத் தேர்தல்களில் அமோக வெற்றி பெற்றது. லோக்சபா தேர்தல் பிரசாரத்தில், தேசிய கட்சிகளான, பா.ஜ.,வும், காங்கிரசும், பல மாதங்களுக்கு முன்பே தீவிரமாக இறங்கியுள்ள நிலையில், மம்தா, சற்று தாமதமாக, நேற்று முன்தினம் பிரசாரத்தை ஆரம்பித்தார்.

இதில் அவர் உரையாற்றுகையில்:

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிரான, பா.ஜ.,வுக்கு எதிரான எமது போராட்டம் தொடரும். அது போல், ஊழலுக்கு எதிரான எமது போராட்டமும் தொடரும். மத கலவரங்களை ஊக்குவிக்கும் அரசு, எமக்கு தேவையில்லை. காங்கிரசுக்கு, பா.ஜ., மாற்று கட்சியல்ல. அது போல், பா.ஜ.,வுக்கும், காங்கிரஸ் மாற்றல்ல.

கூட்டாட்சி முன்னணி ஏற்படுத்தப்படும். அதன் மூலம் மத்தியில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவோம். லோக்சபா தேர்தலில், பா.ஜ., மற்றும் காங்கிரஸ் கட்சிகளுடன் கூட்டணி சேர மாட்டோம். நாடு முழுவதும் நானே சென்று பிரசாரம் மேற்கொள்வேன் என்றார்.

# 400மலைப்பாம்புகள் வைத்திருந்தவர் விலங்குகள் வதைச்சட்டத்தில் கைது



தரை முதல் மேற் கூரை வரை வீட்டில் பெட்டி பெட்டியாக மலைப் பாம்புகளை அடைத்து வைத்திருந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலம் சாண்டா அனா நகரில் வசிக்கும் வில்லியம் புச்மான்(வயது 53) என்பவர் அங்குள்ள தொடக்கப் பாடசாலை ஒன்றில் ஆசிரியராக பணியாற்றி வருகின்றார்.

இவரது வீட்டில் இருந்து கடந்த சில நாட்களாக தாங்க முடியாத துர்நாற்றம் வீசியதால் அயலவர்கள் பொலிசில் புகார் கொடுத்தனர்.இதையடுத்து பொலிசார் வில்லியம் வீட்டில் சோதனை நடாத்தியதில், திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதாவது, வீட்டின் தரை முதல் மேற்கூரை வரை பெட்டி பெட்டியாக மலைப்பாம்புகளை அடுக்கி வைத்திருந்தார்.

அவற்றில் பல பாம்புகள் இறந்து அழுகிய நிலையிலும், எலும்புக் கூடாகவும் இருந்தன. அத்துடன் அங்கும், இங்குமாக ஏராளமான கூண்டுகளில் எலிகளும் இருந்தன.

இதனைத் தொடர்ந்து விலங்குகள் வதை தடுப்புச் சட்டத்தின் கீழ் வில்லியம் புச்மானை கைது செய்துள்ளனர்.

# ஈராக்கில் குண்டுத் தாக்குதல் 24பேர் உயிரிழப்பு



ஈராக்கில் நடாத்தப்பட்ட பாரிய தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 24 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஈராக்கின் பக்ரெய்ன் நகரில் உள்ள போக்குவரத்து அமைச்சின் அலுவலத்தினுள் புகுந்து ஆறு தற்கொலைக் குண்டுதாரிகள், அங்கிருந்த 24 பேரை பணயக் கைதிகளாக சிறை பிடித்திருந்தனர்.

இதன்போது அவர்கள் தங்கள் வசமி ருந்த குண்டுகளை வெடிக்கச் செய்ததில், அனைவரும் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலுக்கு எவரும் உரிமை கோரவில்லை.

# புகைத்தல் பொதிகளில் 70 வீத எச்சரிக்கை உருவம்

## சுகாதார அமைச்சு இணக்கம்

புகைத்தல் பொருட்களின் பொதிகளில் எச்சரிக்கை உருவப்படம் 70 சதவீதம் மறையும் அளவுக்கு பொறிக்கப்படுவதற்கு சுகாதார அமைச்சு இணக்கம் வெளியிட்டுள்ளது.

எச்சரிக்கை உருவப்படம் தொடர்பில் சுகாதார அமைச்சு வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு சவால் விடுக்கும் வகையில் இலங்கை புகையிலை நிறுவனம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சிகரெட் பெட்டியில் 80 சதவீத அளவில் எச்சரிக்கை புகைப்படம் பொறிக்கப்பட வேண்டும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

அதனை 70 சதவீதம் வரை குறைப்பதற்கு தாம் இணக்கம் தெரிவிப்பதாக சுகாதார அமைச்சின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி தெரிவித்தார்

எனினும், இந்த இணக்கப்பாட்டிற்கு புகையிலை நிறுவனம் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி அதிருப்தி வெளியிட்டுள்ளதாக நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சு கடந்த 2012 ஆம் ஆண்டு சிகரெட் பெட்டியில் உருவப்படத்துடனான எச்சரிக்கை அறிவித்தல் விடுக்கப்படவேண்டும் என்று அறிவித்தல் விடுக்க தயாரானது.

எனினும், அதற்கு எதிர்ப்பு வெளியிடும் முகமாக புகையிலை நிறுவனத்தினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது.

இதேவேளை, இந்த வருடம் போதைப்பொருள் மற்றும் மதுபானமற்ற சமூகத்தை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தை நாடளாவிய ரீதியாக செயற்படுத்துவற்கு ஜனாதிபதி செயலணியொன்றை ஸ்தாபிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான அமைச்சரவை அறிவித்தல் கடந்த வாரம் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவினால் அமைச்சரவையில் தாக்கல் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உலக புற்றுநோய் தினம் எதிர்வரும் 4 ஆம் திகதி நினைவு கூரப்படவுள்ளது.

ஒவ்வொரு வருடமும் புற்றுநோயாளர் பட்டியலுக்கு புதிதாக 25 ஆயிரம் பேர் உள்வாங்கப்படுவதாக சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### ஜெனிவாவில் அமெரிக்க ...

சமூகத்தில் வளர்ந்து வரும் அதிருப்தி காரணமாக மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னர் முன்னோக்கி கொண்டு செல்ல வழங்கப்பட்ட பொன்னான வாய்ப்பை இலங்கை இழந்து விடுமோ என்ற அச்சம் உள்ளதாக தெரிவித்தார்.

அதேவேளை மனித உரிமை ஆணைக்குழுவின் ஊடான அமெரிக்காவின் செயற்பாடுகள், நாட்டில் சமூகங்களுக்கு இடையில் முன்னெடுக்கப்படும் நல்லிணக்க செயற்பாடுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்த வழிவகுக்கும் என அமைச்சர் பீரிஸ் இதன்போது குறிப்பிட்டார்.

இலங்கைக்கு எதிராக அமெரிக்காவின் நடவடிக்கை கடும் கோட்பாட்டாளர்களை மேலும் வலுப்படுத்தியுள்ளது. இலங்கையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பில் உரிய முறையில் ஒப்பு நோக்கவில்லை என்ற வலுவான கருத்து உள்ளது என்றார்.

இதன் போது கருத்து வெளியிட்ட அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர், இலங்கையின் செயல்முறைகள் தொடர வேண்டும் என அமெரிக்கா எதிர்பார்க்கின்றது.

இலங்கையுடன் நேர்மறையாக உறவுகள் இருக்க வேண்டும் மற்றும் பல துறைகளில் இருக்கும் ஒத்துழைப்புகளை மேம்படுத்த வேண்டும் எனவும் பிஸ்வால் வலியுறுத்தினார்.

அப்போது கருத்து வெளியிட்ட அமைச்சர் பீரிஸ், சர்வதேச சமூகம் இலங்கை மீது கவனத்தை செலுத்த பொதுநல மற்றும் தார்மீக நெறிமுறைகள் காரணம் அல்ல எனவும் பலம், பணம் மற்றும் வாக்குகள் மூலம் இதற்கான உந்துதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் கூறினார்.

ஏற்கனவே இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட அதிகாரிகள் முன்கூட்டிய நிகழ்ச்சி நிரலுடன் இலங்கைக்கு வந்து அதனை நிறுவ முயற்சித்தனர். அமெரிக்கா தனது அணுகு முறையில் சமநிலையாக செயற்படும் தேவை இருப்பதாக பீரிஸ் தெரிவித்தார்.

இதேவேளை உதவி இராஜாங்கச் செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வால், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவை சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் நேற்று மாலை இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிசேல் சிஸன், வடக்கு மாகாண மீள்குடியேற்ற, அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணிக் குழுவின் செயலாளர் எஸ்.பி. திவாரட்ன உள்ளிட்ட பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

### பயங்கரவாதத்தை...

நாடுகள் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு அவ்வாறான முயற்சியில் ஈடுபடவில்லை எனவும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை தோற்கடிக்கும் போரில் ஈடுபட்டிருந்த போது செயற்படுத்திய நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியே இது என்றும் அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதனால் ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறும் மனித உரிமை ஆணைக்குழுவில் கூட்டத் தொடரில் அந்நாடுகள் எந்த வகையான யோசனையை முன்வைத்தாலும் அது பயங்கரவாதத்திற்கு உதவியளிப்பதாகும்.

போர் நடைபெற்ற போது இதே சர்வதேச நாடுகள் அவற்றின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப செயற்படும் கைப்பாவைகளாக இலங்கை அரசை மாற்ற முயற்சித்தனர்.

அவர்களின் கைப்பாவைகளாக மாறி, அந்த நிகழ்ச்சி நிரலை செயற்படுத்தாத காரணத்தினால் அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைக்க முயற்சித்து வருகின்றனர்.

பயங்கரவாதத்தை தோற்கடித்தன் காரணமாகவே சர்வதேச நாடுகள் யோசனைகளை கொண்டு வருகின்றன.

பயங்கரவாதம் தோற்கடிக்கப்படாதிருந்தால், அந்நாடுகள் இலங்கைக்கு அமைதிப்படையை அனுப்பியிருக்கும் எனவும் அமைச்சர் ரம்புக்வெல குறிப்பிட்டுள்ளார்.

### இலங்கை...

சென்றார். இரண்டாவது நாளான நேற்று முன்தினம் மாணவர்களுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சியில் அவர் கலந்து கொண்டார். அதன்பின் செய்தியாளர்களை சந்தித்தபோது,

இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியாவில் குடியுரிமை வழங்க வேண்டும் என வலியுறுத்தி கையெழுத்து இயக்கம் நடத்தி வருகிறோம். இதுவரை 10 இலட்சம் பேரிடம் கையெழுத்து பெற்றுள்ளோம். ஒரு கோடி பேரிடம் கையெழுத்து பெற்று பிரதமரிடம் வழங்க திட்டமிட்டு இருக்கிறோம்.

20 ஆண்டுகளுக்கு மேலாக இந்தியாவில் வசித்து வரும் இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியக் குடியுரிமை கொடுக்காமல் இருப்பது நியாயமல்ல. பல நாடுகளில் இருந்து வந்தவர்களுக்கு குடியுரிமை வழங்கி இருக்கும் நிலையில், இலங்கையில் இருந்து வந்தவர்களுக்கு ஏன் குடியுரிமை கொடுக்க கூடாது? இவ்வாறு அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

### 'ஆவா'...

'ஆவா' குழுவைச் சேர்ந்தவர்கள் நேற்று யாழ்.நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டு விசாரணை நடைபெற்ற போது சந்தேக நபர்கள் தரப்பில் பிணை வழங்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையைப் பரிசீலித்த நிதிமன்றம் அவர்களில் இருவரைத் தவிர ஏனையவர்களுக்கு ரொக்கப்பிணை (காசுப் பிணை) வழங்கியதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பிணை மறுக்கப்பட்ட இருவரையும் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்குத் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலும் புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

### ஆணைக்குழுவின்...

யிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. அது அவரது தனிப்பட்ட கருத்தாக இருக்கலாம்.

ஐக்கிய நாடுகள் அமைப்பு உள்ளிட்ட உலகில் சகல அமைப்புகளும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை சிறந்ததும், காலத்திற்கு ஏற்ற அறிக்கை என்பதை ஏற்றுக்கொண்டுள்ளன.

இலங்கையில் போர் நடைபெற்ற காலத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்த இந்தக் குழு நியமிக்கப்பட்டிருந்ததுடன், அது சிறந்த நடைமுறை எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# இன்றும், நாளையும் மின் விநியோகம் தடை

புதிய உயர் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் இணைப்பு வேலைகளுக்காகவும் பராமரிப்பு வேலைகளுக்காகவும் இன்று காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை வித்தகபுரம், கொல்லன்கலட்டி, கடற்படைத்தளம், நகுலேஸ்வரா வீதி, கீரிமலை, வசந்தபுரம், கூவில், கிழக்கு அரியாலை, ஸ்ரீலங்கா ரெலிகொம், பிரதம தபாலகம், நீதிமன்ற வளாகப் பிரதேசம், பண்ணைப் பிரதேசம், யாழ்.நூலகம், சத்திரச் சந்தியில் ஒரு பகுதி, வேம்படி 1 ஆம் குறுக்கு, யாழ் பிரதான வீதி ஒரு பகுதி, 2 ஆம், 3 ஆம் குறுக்கு, விஜிதா கபே, சிறைச்சாலைப் பிரதேசம், நவக்கிரி, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வளலாய், செல்வநாயகபுரம், கைத்தொழில்பேட்டை, காரைநகர், ஊரி, தோப்புக்காடு, களபூமி, ஜெற்றி, பாலாவோடை, கடற்படைத்தளம், வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களிலும்,

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை மணியந்தோட்டம், உதயபுரம், நெடுங்குளம், துண்டி, வசந்தபுரம், ஆனந்தன் வடலி வீதி, மகேந்திரபுரம், தேவபுரம், கொழும்புத்துறை வீதியில் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும்,

8.30 மணியிலிருந்து மதியம் 1.00 மணிவரை பிறவுண் வீதி, கே.கே.எஸ் வீதி, தட்டார்தெரு, கஸ்தூரியார் வீதி, நாவலர் வீதி, மானிப்பாய் வீதியில் ஒரு பகுதி, சிவன்பண்ணை வீதி, கன்னாதிட்டி, மணிக்கூட்டு கோபுர வீதி, கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி, இராமநாதன் வீதியில் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என மின்சார சபை அறிவித்துள்ளது.

### இ.போ.ச. ஊழியர்கள்...

னால் அச்சிற்றூர்திகள் அங்கிருந்து அகற்றப்பட்டன. பின்னர் வழமை போல சிற்றூர்திகள் மதியம் முதல் தரிப்பிடத்தில் இருந்து சேவையை ஆரம்பிக்கத் தொடங்கியதும் அதனைக் கண்டித்து சாரதிகளும், நடத்துநர்களும் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு நண்பகல் ஒரு மணியளவில் பஸ் வண்டிகளை கோண்டாவில் டிப்போக்கு எடுத்துச் சென்ற நிலையில் வடமாகாண போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளர் அஸ்கர் இது விடயம் குறித்து ஊழியர்களுடன் பேசியதையடுத்து நேற்று மாலை 4.00 மணியளவில் சேவைகள் வழமைக்குத் திரும்பின.

இது விடயமாகப் பொது முகாமையாளர் அஸ்கரிடம் வினவிய போது,

நடைபெற்ற தாக்குதல் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு அவர்களைக் கைது செய்துள்ளனர். இதற்குச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. இதற்காக மக்களுக்கான சேவையை தவிர்க்க முடியாது. இதனால் இப்பொழுது சேவைகள் இடம்பெறுவதாகவும், தனியாரின் பஸ் தரிப்பிடம் தொடர்பில் யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்துடன் தொடர்பு கொண்டோம். இதற்கான முடிவுகாண கால அவகாசம் எடுக்கும் எனவும் ஐந்து நாட்களின் பின்னர் இதற்கான தீர்வு காணப்படும் எனவும் பொது முகாமையாளர் அஸ்கர் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்று முன் தினமும் ஊர்காவற்றுறைக்குச் சென்ற இலங்கை போக்குவரத்துச் சபை சாரதி மற்றும் நடத்துநர் மீது தாக்குதல் இடம்பெற்றதைக் கண்டித்து நேற்று முன்தினம் நண்பகல் முதல் மாலை வரை பணிப்புறக்கணிப்பு இடம்பெற்றது. இதனால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டதுடன், பெரும் சிரமங்களையும் எதிர்நோக்கினர்.

வடமாகாண போக்குவரத்து ஊழியர் சங்கத்துடன் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் கே.வி.குகேந்திரன் (ஜெகன்) இவ் விடயம் குறித்து கலந்துரையாடி இவ்விவகாரத்துக்கு சுமுகமான தீர்வு எட்டப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

### ஜெனிவா...

செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்க உதவி இராஜாங்கச்செயலர் நிஷா பிஸ்வாலுடன், பிரித்தானியாவைத் தளமாகக் கொண்ட மூத்த பிரித்தானிய அதிகாரிகள், இதுதொடர்பாக சந்தித்துப் பேசவுள்ளனர்.

அதேவேளை, இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கும்படி அமெரிக்காவும், பிரித்தானியாவும் இந்தியாவுக்கு அழுத்தம் கொடுத்துள்ளதாக, இலங்கை அரசாங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

இதற்கிடையே, ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும், கொமன்வெல்த் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளிடம், அமெரிக்கத் தீர்மானத்தை ஆதரிக்கும்படி கோருவதற்கு பிரித்தானியா முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகவும், மேற்படி ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

### யுத்த இழப்பு...

களைக் கொண்டு இந்தப் புள்ளி விபரங்கள் சேகரிக்கப்பட்டன.

போர்க்காலத்தில் ஏற்பட்ட மரணங்கள், காணாமற் போனவர்கள், காயமடைந்தவர்கள், அங்கவீனமுற்றவர்கள், சொத்துகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்து இந்தக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது.

1983 ஆம் ஆண்டு தொடக்கம், 2009 மே வரையிலான காலப் பகுதியை உள்ளடக்கியதாக இந்தக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது.

இந்த தரவுகளை ஆராய்ந்து இறுதி அறிக்கை அடுத்த மாதம் வெளியிடப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தத் மதிப்பீட்டு அறிக்கையை தாம் ஜெனிவா கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கவுள்ளதாக, அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இதன் மூலம், இறுதிக்கட்டப் போரில் 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர் என்ற குற்றச்சாட்டு பொய்யானது என்று நிரூபிக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# கிராமிய அபிவிருத்திகளில் மக்களின் பங்கு அவசியம்

(வேலணை)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழான புறநெகும திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் வேலணைத் துறையூரில் நவீன மீன் சந்தையும், அதனோடு இணைந்த வீதியும் நேற்று திறந்து வைக்கப்பட்டமை அபிவிருத்தியின் முதற்படியாகும்.

எனினும் மக்களின் பங்களிப்பு என்பது மிகக்குறைவாக இருப்பது எனக்கு மிகவும் வேதனையாகவுள்ளது. எப்படியிருப்பினும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான எமது அபிவிருத்தி வடக்கு எங்கும் தொடரும் என தீவக பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்தார்.

இரண்டு கோடியே 16 இலட்சம் ரூபா செலவில் புறநெகும திட்டத்தில் அமைக்கப்பட்ட நவீன வடிவிலான மீன் சந்தைக் கட்டடத் திறப்பு விழா வேலணை பிரதேச சபைத்தலைவர் சின்னையா சிவராசா (போல்) தலைமையில் இடம்பெற்றது.

புதிய சந்தை கட்டடத்தை நாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின், சபைத் தவிசாளர் சின்னையா சிவராசா, பிரதேச செயலர் திருமதி சதீஷன் மஞ்சுளாதேவி, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கொ.ஜக்சீல், நீரியல் வளத் துறை உதவிப்பணிப்பாளர் நடராஜா கணேசமூர்த்தி ஆகியோர் இணைந்து திறந்துவைத்தனர்.

இதில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் மேலும் பேசுகையில்,

வடக்கின் வசந்தம் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 100 மில்லியன் ரூபா செலவிலும், புறநெகும திட்டத்தின் கீழ் பல்வேறு அபிவிருத்திகளும் எமது பிரதேசத்தின் அபிவிருத்திக்காக முன்னெடுக்கப்படுகிறது.

எமது அபிவிருத்திக்கு அரசாங்கம் முழு ஆதரவினையும் எமக்கு வழங்குகிறது. ஆனால் மக்களின் பங்களிப்பு, ஒத்தாசை என்பது இல்லாதது வேதனையளிக்கிறது. எனினும் பின்னடைவான எமது தீவக அபிவிருத்தி தொடர்ந்துகொண்டே இருக்கும் என்றார்.

இந்நிகழ்வில் தலைமையுரையாற்றிய வேலணை பிரதேச சபைத் தவிசாளர் சி.சிவராசா பேசுகையில்,

வேலணைத் துறையூரில் பாரிய சந்தைக் கட்டடத்தொகுதி திறந்து வைக்கப்படுகிறது. புற



நெகும திட்டத்தின் அபிவிருத்திகள் இடம்பெறுகின்றன. மக்களின் அனைத்து தேவைகளும் அவர்களின் விருப்புடன் முன்னெடுக்கப்படுகின்றன. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எமது தீவக அபிவிருத்திக்காக அல்லும் பகலும் உழைத்துவருகின்றார் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கொ.ஜக்சீல், உதவி பணிப்பாளர் நடராஜா கணேசமூர்த்தி, வேலணைப்பிரதேச சபை முன்னாள் செயலாளர் செ.ரமேஷ், கடற்தொழிலளர் கூட்டுறவுச்சங்கத் தலைவர் ச.ரங்கநாயகம் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

# யுத்தக் குற்ற விசாரணைக்கு அரசு அஞ்சுவது ஏன்?

## வடக்கு முதலமைச்சர் கேள்வி

(கொழும்பு)

வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தமிழ் மக்களின் உணர்வுகளின் பிரதிபலிப்பே என்று தெரிவித்துள்ள வடக்கு மாகாண முதலமைச்சர், அரசு போர்க் குற்றங்களில் ஈடுபடவில்லையாயின் ஏன் சர்வதேச விசாரணைக்கு அஞ்ச வேண்டும் எனவும் கேள்வியெழுப்பியுள்ளார்.

அரசின் போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை தேவை என்று வடக்கு மாகாண சபையில் கடந்த திங்கட்கிழமை தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. இந்தத் தீர்மானம் தொடர்பில் வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், 'த இந்து' ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இறுதிக் கட்டப் போரில் இலங்கை அரசு போர்க் குற்றங்களில் ஈடுபடவில்லையாயின், அவர்கள் ஏன் சர்வதேச விசாரணையை எதிர்க்கின்றனர். இந்த விடயம் சர்வதேச விசாரணை அடிப்படையிலேயே பேசப்படவேண்டும்.

சொந்தங்களை இழந்த மக்களுக்கே அதன் வலி தெரியும். யாரேனும் உயிரிழந்தால் அதற்கான காரணங்களை அறியமுடியும். ஆனால் காணமற்போனவர்கள் தொடர்பில் எதுவுமே அறிய முடியாமல் இருப்பது துன்பகரமானது என்று முதலமைச்சர் நேர்காணலில் குறிப்பிட்டார்.

# நேற்றைய அகழ்வில் எலும்புகள் சிக்கவில்லை

(மன்னார்)

மன்னார் திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளில் 5 எலும்புக்கூடுகள் பொதி செய்யப்பட்டு மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு நேற்று எடுத்துச்செல்லப்பட்டது.

மன்னார் நீதவானின் உத்தரவுக்கு அமைய மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒதுக்கப்பட்டதொரு இடத்தில் இதுவரையில் 28 மனித எலும்புக்கூடுகள் வைக்கப்பட்டுள்ளன.

மேற்படி புதைகுழியிலிருந்து 55 மனித எலும்புக்கூடுகள் மற்றும் மனித எச்சங்கள் இதுவரையில் மீட்கப்பட்டுள்ளன.

மேலும், மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் அநுராதபுர சட்ட வைத்திய நிபுணர் டி.எல். வைத்தியரெட்ண தலைமையில் 19 தடவையாக நேற்றும் மனித புதைகுழி தோண்டப்பட்டது. இதன்போது எவ்வித மனித எலும்புக்கூடுகளும் மீட்கப்படவில்லை.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் மேற்படி புதைகுழி தோண்டப்படவுள்ளது.

# குற்றவாளிகளின் கைரேகை; இனி கணனி மயம்

(கொழும்பு)

குற்றவாளிகள் பட்டியலில் இருக்கும் சுமார் 5 இலட்சம் பேரின் கைவிரல் அடையாளங்கள் கணனி மயப்படுத்தப்பட்டு சேமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ தலைமையகத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் மூலம் குற்றச் செயல்கள் இடம்பெறும் இடங்களில் அடையாளம் காணப்படும் குற்றவாளிகளின் கைவிரல் அடையாளங்களை சில நிமிடங்களில் பரீட்சித்து பார்க்க முடியும் என பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதேவேளை வெளிநாடுகளுக்கு செல்வதற்காக பொலிஸ் சான்றிதழை பெறும் போது கைவிரல் அடையாளங்களை பதிவு செய்வது இதன் மூலம் துரிதப்படுத்தப்படும் என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

மொறட்டுவ, கொழும்பு பல்கலைக்கழகங்கங்கள், தகவல் தொழில்நுட்ப நிறுவனம், ஆதர் சி. கிளார்க் மத்திய நிலையம் ஆகியவற்றின் உதவியோடு இந்த கைவிரல் அடையாளங்களை கணனிமயப்படுத்தும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# இலங்கை துணைத்தூதரகம் கேரளாவில் திறக்க ஏற்பாடு

இலங்கைக்கான புதிய துணைத் தூதரகமொன்று கேரளா மாநிலம் திருவனந்தபுரத்தில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் திறக்கப்படவுள்ளது.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியா கடுமையான நிலைப்பாட்டை கடைப்பிடித்ததன் காரணமாக, இருதரப்பு நல்லுறவில் சிறிது தொய்வு ஏற்பட்டது. அதை சரி செய்யும் வகையில் திருவனந்தபுரத்தில் கௌரவ துணைத் தூதரகத்தைத் திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் இருதரப்பு நல்லுறவு பலப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த துணைத் தூதரகத்தின் முதன்மை அதிகாரி ஜோமன் ஜோசப்பின் நியமனத்திற்கு குடியரசு தலைவர் பிரணாப் முகர்ஜி ஒப்புதல் அளித்துள்ளார். இதற்கான நியமன உத்தரவை ஜேர்மன் ஜோசப்பிடம் டெல்லியிலுள்ள இலங்கைத் தூதர் பிரசாத் காரியவசம் ஒப்படைத்தார்.

திருவனந்தபுரத்தில் இப்போது ரஷ்யா மற்றும் மாலைதீவுகளுக்கான துணைத் தூதரகங்கள் மட்டுமே செயற்பட்டு வருகின்ற நிலையில், இலங்கைத் துணைத் தூதரகம் அமைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ சபையில் பிளவு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஷிரால் லக்திலக்க, மைத்திரி குணரட்ன ஆகியோருக்கு எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்குவது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவச் சபையில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவச் சபை நேற்று முன்தினம் கூடியது. இதன் போது லக்திலக்க மற்றும் குணரட்ன ஆகியோருக்கு தேர்தலில் போட்டியிடும் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என சபையின் தலைவரான கரு ஜயசூரிய, லக்ஸ்மன் கிரியெல்ல, கபீர் ஹசிம் ஆகியோர் விருப்பம் தெரிவித்தனர். எனினும் திஸ்ஸ அத்த நாயக்க, ரவி கருணாநாயக்க மற்றும் மங்கள சமரவீர ஆகியோர் இதற்கு எதிர்ப்பு வெளியிட்டனர்.

தலைமைத்துவச் சபையின் உறுப்பின்ரான ருவான் விஜேவர்தன எந்தப் பக்கமும் சாராது அமைதியாக இருந்துள்ளார்.

எவ்வாறாயினும் மேற்படி முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களுக்கு தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் வழங்குவது தொடர்பில் தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருகிறது.

# இ.போ.ச.ஊழியர் மீது தாக்குதல்; நான்கு பேர் பொலிஸாரால் கைது

ஊர்காவற்றுறைக்கு பயணிகளை ஏற்றிக்கொண்டு இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ்ப்பாண டிப்போவுக்குச் சொந்தமான பயணிகள் பஸ் வண்டியின் ஓட்டுநர் மற்றும் நடத்துநர் மீது புளியங்கூடலில் வைத்து நேற்று முன்தினம் தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டின் பேரில் நால்வர் ஊர்காவற்றுறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருப்பதாக யாழ். பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் யாழ். டிப்போவின் சாரதி ஒருவரும், நடத்துநர் ஒருவரும் பாதிப்புக்குள்ளாகிய நிலையில், ஊர்காவற்றுறை வைத்தியசாலையிலும், யாழ்.போதனா வைத்தியசாலையிலும் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டன.

அதேவேளை, இச்சம்பவம் குறித்து பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைத்துள்ளதைத் தொடர்ந்தே மேற்படி நால்வரும் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவித்த அவர், அவர்கள் நால்வரையும் நேற்று நீதிமன்றத்தில் பாரப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் மேலும் தெரிவித்தார்.


## வன்னி மாவட்டத்திற்கான பத்திரிகை விநியோகஸ்தர் தேவை

வன்னி மாவட்டத்தின் சகல பகுதிகளுக்கும் பத்திரிகை விநியோகம் செய்யக்கூடியவர்கள் உடனடியாக தேவைப்படுகின்றனர்.

தகைமைகள் - 45 வயதிற்கு உட்பட்டவராக, உடல் ஆரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும், சொந்தமாக மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள், (சாரதி அனுமதிப்பத்திரம்) உள்ளவர் தினமுரசு காரியாலயத்திற்கு அலுவலக நேரத்தில் நேரில் வரவும்.

விநியோக முகாமையாளர்,
'தினமுரசு' 373, பிரதான வீதி
யாழ்ப்பாணம்.

(இ)


# பயணிகள் பஸ் மீது நெல்லியடியில் கல்வீச்சு

(நெல்லியடி)

பயணிகள் போக்குவரத்து பஸ் வண்டி மீது விசமிகள் கல்வீசித் தாக்கியுள்ளனர். மேற்படி சம்பவம் நேற்று இரவு நெல்லியடி நாவலர் மடம் என்ற பகுதியில் இடம்பெற்றது.

இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் வண்டி மீதே இந்தத் தாக்குதல் நேற்று இரவு 7.40 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இதன்போது யாருக்கும் காயம் ஏற்படவில்லை. பஸ் வண்டியின் கண்ணாடிகள் சில சேதமடைந்தன. (18, 116)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 பெப்ரவரி 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.